பக்கங்கள்:இருபது

# உதயன்

Registered as a Ne paper

விலை ரூபா 15.00

www.uthayan.com

சுடர் 24 வள்ளுவர் ஆண்டு 2040 சித்திரை 06 ஞாயிற்றுக்கிழமை (19.04.2009) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்:144

# உடனடியாகப் போர் நிறுத்தம் அறிவிக்கக் கோருகிறது இந்தியா

## அரசிடமும் விடுதலைப்புலிகளிடமும் அவசர வேண்டுகோள்



ஜங்கிப்பூர் (மேற்கு வங்காளம்) ஏப்ரல் 19

இலங்கை அரசாங்கமும் தமிழீழ விடுதலைப்புலிகளும் உடனடியாக போர் நிறுத்தத்தை அறிவிக்க வேண்டும் என்று இந்தியா கோரிக்கை விடுத்துள்ளது.

மேற்கு வங்காளத்தில் வைத்து, வெளியுறவு அமைச்சர் பிரணாப் முகர்ஜி இந்தியா உடனடிப் போர் நிறுத்தம் கோரியுள்ள தகவலைத் தெரிவித்தார்.

போர்நிறுத்தம் ஒன்றை இலங்கை அரசாங்கமும் விடுதலைப்புலிகளும் அறிவித்து உடனடியாக நடைமுறைப்படுத்த வேண்டும் என்று இலங்கை அரசாங்கத்தையும் தமிழீழ விடுதலைப் புலிகளையும் நாம் கேட்டுள்ளோம்- என்று அமைச்சர் பிரணாப் முகர்ஜி இங்கு செய்தியாளர்களிடம் நேற்றுக் கூறினார்.

போர்ப் பிரதேசத்தில் அகப்பட்டுள்ள பொதுமக்கள் பாதுகாப்பாக வெளியேறுவதற்கு வகைசெய்ய வேண்டும், பாதையொன்றை ஏற்படுத்த வேண்டும் என்று இலங்கை அரசாங்கத்திடம் கூறியுள்ளோம் - என்று அமைச்சர் பிரணாப் முகர்ஜி தெரிவித்தார்.

வட இலங்கையின் முல்லைத்தீவுப் பகுதியில் உருவாகியுள்ள மனிதாபிமான நெருக்கடி குறித்தும் தமிழ்ப் பொதுமக்கள் கொல்லப்படுவது குறித்தும் வெள்ளிக்கிழமை அன்று கவலை தெரிவித்த அடுத்த நாளாகிய நேற்றுஇரண்டு தரப்புகளிடமும் போர் நிறுத்தம் செய்யக் கோரியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இலங்கையில் ஏற்பட்டுள்ள மனித அவலம் தொடர்பாக இந்தியா ஆழ்ந்த கவலையடைந்துள்ளது. அரசின் போர் நடவடிக்கைகள் தொடர்ந்து மேற்கொள்ளப்படுவதானது மேலும் பல பொதுமக்கள் கொல்லப்படுவதற்கும் காயமடைவதற்கும் வழிகோலியுள்ளது. இது முற்றாக ஏற்றுக்கொள்ளப்படமுடியாதது என்று வெளிவிவகார அமைச்சர் பிரணாப் முகர்ஜி நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை கொல்கத்தாவில் வைத்துத் தெரிவித்திருந்தார்.

அப்போது 14 ஆம் திகதியன்று முடிவடைந்த தாக்குதல் நிறுத்தத்தைத் தொடர்ந்து

(20 ஆம் பக்கம் பார்க்க)

## பாதுகாப்பு வலயத்தில் தொற்றுநோய் பரவும் அபாயம்

கொழும்பு, ஏப். 19

முல்லைத்தீவு, மக்கள் பாதுகாப்பு வலயப் பகுதியில் தொற்று நோய்கள் தீவிரமாகப் பரவி வருகின்றன என்று முல்லைத்தீவு மாவட்ட சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் து.வரதராஜா தெரிவித்தார்.

வைத்தியசாலையில் நீரிழிவு நோய்க்குத்தடுப்பு மருந்து இல்லாததால் 52 வயதுப் பெண் ஒருவர் மரணமானார். வயிற்றோட்டம் காரணமாக 13 வயதுச் சிறுமி மரணமானார் என்றும் அவர் தெரிவித்தார்.

நேற்று கப்பல் மூலம் 477 பேர் புல் மோட்டைக்கு அழைத்துச் செல்லப்பட்ட தாகத் தெரிவித்த அவர் (20 ஆம் பக்கம் பார்க்க)

## கப்பலில் பிறந்த குழந்தை

கொழும்பு, ஏப். 19

புதுமாத்தளன் பிரதேசத்தில் இருந்து புல்மோட்டைக்கு கப்பல் மூலம் நேற்று 484 பேர் அழைத்துச் செல்லப்பட்டுள்ளனர்.

இவர்கள் அழைத்து வரப்படுகையில் கப்பலில் இருவர் உயிரிழந்துள்ளதாகவும் அத்துடன் தாய் ஒருவர் குழந்தை ஒன்றையும் பிரசவித்தார் என்றும் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (அ-7)

## பாதுகாப்பு வலயம் மீதான கொத்துக்குண்டு ஷெல் தாக்குதல்களில் நேற்று 169 பேர் பலி!

கொழும்பு, ஏப்.15

புதுக்குடியிருப்புப் பகுதியில் படையினர் மேற்கொண்ட கொத்துக்குண்டு ஷெல் மற்றும் பீரங்கித் தாக்குதலில் 169 பேர் பலியாகினர்; 234 பேர் காயமடைந்தனர் என்று இணையத்தளங்கள் தெரிவித்துள்ளன.

இத் தாக்குதல் தொடர்பாக இணையத் தளங்களில் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:

மக்கள் பாதுகாப்பு வலய' பகுதிளில் உள்ள வாழ்விடங்கள் மீது படையினர் கொத்துக்குண்டு ஷெல், பல்குழல் வெடிகணை, மோட்டார், பீரங்கி, ஆர்பிஜி உந்து கணை, கனரக துப்பாக்கி மற்றும் குறிசூட்டுத் தாக்குதல்களை நேற்று சனிக்கிழமை அதிகாலை தொடக்கம் இரவு வரை அகோரமாக நடத்தினர்.

பாதுகாப்பு வலயப் பகுதிகளான வலைஞர்மடம், முள்ளிவாய்க்கால், இரட்டைவாய்க்கால், அம்பலவன்பொக்கணை, மாத்தளன் மற்றும் இடைக்காடு ஆகிய பகுதிகள் மீது படையினர் தொடர்ச்சியான தாக்குதல்களை நடத்தி வருகின்றனர்.

இவ்வாறு நேற்று நடத்தப்பட்ட தாக்குதல்களிலேயே 169 பேர் படுகொலை செய்யப்பட்டும் 234 பேர் படுகாயமடைந்தும் உள்ளனர்.

காயமடைந்தவர்கள் மாத்தளன் மருத்துமனைக்கு கொண்டுசெல்ல முடியாதவாறு மருத்துவமனை வீதியில் தொடர்ச்சியாக ஷெல்கள் வீழ்ந்து வெடித்தன.

கடும் சிரமத்தின் மத்தியில் காயமடைந்தவர்கள் முல்லைத்தீவு பொதுமருத்துவமனை சிகிச்சை நிலையத்திலும் நட்டாங்கண்டல் மருத்துவமனையிலும் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

அனேகமானோர் படையினரின் கனரக துப்பாக்கி மற்றும் குறிசூட்டுத் தாக்குதல்களிலேயே காயமடைந்துள்ளனர் என்று- தெரிவிக்கப்பட்டது.

காயமடைந்த பலர் மருத்துவமனைக்கு கொண்டுசெல்ல முடியாத நிலையில் உயிரிழந்துள்ளனர்- என்று இணையத் தளங்கள் தெரிவித்தன. (அ-1)

## ஸ்ரீஸ்ரீ ரவிசங்கர் குருஜி நாளை கொழும்பு வருகிறார்

கொழும்பு, ஏப். 19



இந்தியாவின் ஆன்மீகத் தலைவரும் வாழும் கலை நிலையத்தின் நிறுவுநருமான ஸ்ரீஸ்ரீரவிசங்கர் குருஜி மூன்று நாள் விஜயம் ஒன்றை மேற்கொண்டு நாளை கொழும்பு வருகிறார்.

வன்னியில் உருவாகியிருக்கும் மனிதாபிமானப் பிரச்சினைகள் தொடர்பாக அவர் பௌத்த மதத் தலைவர்களையும் அரசியல் தலைவர்களையும் சந்தித்து பேச்சு நடத்துவார்.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவைச் சந்திக்கும் அவர் வவுனியா சென்று நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ளவர்களையும் சந்தித்து அவர்களின் கஷ்டங்களையும் கேட்டறிவார். (அ-1)

## தாக்குதல் இடைநிறுத்தத்தை மீண்டும் அறிவிக்குமாறு ஐ.நா. விடுத்த கோரிக்கையை அரசு நிராகரித்தது

கொழும்பு, ஏப்.19

முல்லைத்தீவில் போர் நடக்கும் இடங்களில் இந்த வார முற்பகுதியில் அறிவிக்கப்பட்ட தாக்குதல் இடை நிறுத்தத்தை நீடிக்குமாறு அல்லது அது போன்ற மற்றுமொரு தாக்குதல் நிறுத்தத்தை மீண்டும் அறிவிக்குமாறு ஐக்கிய நாடுகள் சபையால் முன்வைக்கப்பட்ட புதிய கோரிக்கையை இலங்கை நிராகரித்துவிட்டது.

போர்ப் பிரதேசத்தில் பாதுகாப்பு வலயமாக அறிவிக்கப்பட்டுள்ள பகுதியில் அகப்பட்டுள்ள (20 ஆம் பக்கம் பார்க்க)

## பாதுகாப்பு வலயத்தில் படையினர் - புலிகள் சண்டை இரண்டு நாள்களில் பொதுமக்கள் 28 பேர் பலி!

கொழும்பு, ஏப்.19

புதுக்குடியிருப்பு மக்கள் பாதுகாப்பு வலயத்தில் நடந்த சண்டையில் கடந்த இரு தினங்களில் 28 பொதுமக்கள் கொல்லப்பட்டுள்ளனர்.

வைத்திய அதிகாரிகளை மேற்கோள் காட்டி செய்தி ஏஜென்ஸி ஒன்று இத் தகவலை வெளியிட்டுள்ளது.

நேற்று 15 சடலங்களும் நேற்று முன் தினம் 13 சடலங்களும் மாத்தளன் வைத்திய சாலைக்கு எடுத்துவரப்பட்டன என்றும்-

160 பேர் காயங்களுடன் சிகிச்சைக்கு அனுமதிக்கப்பட்டனர் என்றும் வைத்திய சாலை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

படையினருக்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையில் சிக்கி இவர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டது. (அ-1)

## பிரபாகரனுக்கு முடிவு கட்டும் காலம் நெருங்கிவிட்டது என்கிறார் ஜனாதிபதி

கொழும்பு, ஏப்.19

பிரபாகரனின் நடவடிக்கைகளுக்கு அரசாங்கப் படையினர் மிக விரைவில் முடிவு கட்டிவிடுவர். எமது இராணுவத்தினர் பிரபாகரனை உயிருடன் பிடிப்பர்; அல்லது அவருக்கு விரைவில் முடிவு கட்டுவர்.

பிரபாகரனுக்கு கடைசி அவகாசம் வழங்கப்பட்டு இருந்தது. ஆனால் அவர் அந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தத்தவறிவிட்டார்.

இவ்வாறு தெரிவித்திருக்கிறார் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ. 'ஏசியா ரிபியூன்'

(20 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# புலிகளின் தலைவர்களை வெளிநாட்டுக்கு அனுப்ப ஏற்பாடு செய்யவே நம்பியார் வந்து சென்றார்

## இப்படிக் கூறுகிறார் விமல் வீரவன்ஸ



கொழும்பு, ஏப்.19

விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபாகரன் மற்றும் அவரது சகாக்களையும் ஐ.நாவின் கீழ் சரணடையச் செய்து அவர்களை பாதுகாப்பான முறையில் வெளிநாடுகளுக்கு அனுப்பி வைப்பதற்காகவே ஐ.நா. அதிகாரி விஜய் நம்பியார் இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டார்.

தேசிய ஐக்கிய முன்னணியின் தலைவர் விமல் வீரவன்ஸ மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

ஐ.நாவின் இத்திட்டத்துக்கு அரசு அடி பணியக் கூடாது என்றும் அவர் கேட்டுள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்திருப்பதாவது:

விடுதலைப் புலிகளின் தலைவர்களை ஐ.நா. சபையின் மூலமாக வெளிநாடுகளுக்கு அனுப்பி வைப்பதற்கான திட்டம் ஒன்று உள்ளதாக கொழும்பில் உள்ள அமெரிக்காவின் தூதுவர் றொபேர்ட் ஓ பிளேக் ஏற்கனவே தெரிவித்திருக்கின்றார்.

இந்த நடவடிக்கையை முன்னெடுப்பதற்காகவே ஐ.நாவின் உயர் அதிகாரியான விஜய் நம்பியார் கொழும்பு வந்திருக்கின்றார்.

சிறிலங்கா படையினரிடம் விடுதலைப் புலிகளின் தலைவர்களைச் சரணடையச் செய்வதைத் தவிர்த்து ஐ.நாவிடம் இவர்களைச் சரணடையச் செய்து வெளி நாடு களுக்கு அவர்களைப் பாதுகாப்பாக அனுப்பி வைப்பதே இந்தத் திட்டமாகும்.

ஐ.நா., அமெரிக்கா உட்பட பல நாடுகள் விடு தலைப் புலிகளுக்கு வழங்கி வந்த ஆதரவு - அதன் தலைவர்கள் இராணுவத்திடம் சரணடைந்தால் வெளியே தெரிய வந்துவிடும் என்பதால் அதனை மறைப்பதற்காகவும் இந்தத் திட்டம் மேற்கொள்ளப் பட்டுள்ளது. .

இந்தச் சதித்திட்டத்தை தோல்வியடையச் செய்வதற்கு நாம் விழிப்புடன் செயற்பட வேண்டும். அரசுத் தலைவரும் அரசாங்கமும் இதுவரை காலமும் செயற்பட் டதைப் போல இனியும் அனைத்துலக அழுத்தங்களுக்கு அடிபணியாமல் இந்த விடயத்தில் செயற்படுவது அவசியம்.

அத்தோடு நீண்டகால போர் நிறுத்தத் துக்காக குரல் கொடுக்கும் நாடுகளின் குரலுக்கும் எமது அரசாங்கம் அடிபணிந்து விடக்கூடாது. இவ்வாறு விமல் வீரவன்ச மேலும் தெரிவித்திருக்கின்றார்.


### மாப்பிள்ளை தேவை

யாழ்.இந்து கௌரவ குலம், 25 வயது, அவிட்ட நட்சத்திரம், பெற்றோருடன் Denmark இல் இருக்கும் Medical Student, Denmark Citizen பெண்ணிற்கு மணமகன் தேவை. நிறைந்த சீதனம் உண்டு. 4 இல் செவ்வாய் உண்டு. Profile Number 5766
இது ஒரு திருமண சேவை (www.thaalee.com)
போன்: 2523127, 2520619

### மணப்பெண் தேவை

யாழ்.இந்து கௌரவ குலம், 33 வயது, சித்திரை நட்சத்திரம், A/L வரை படித்த Supervisor ஆக இருக்கும் Canada Citizen மணமகனுக்கு மணமகள் தேவை. 12 இல் செவ்வாய் உள்ளது. 1 இல் ராகு+சந்திரன் உள்ளது. சீதனம் தேவையில்லை.
இது ஒரு திருமண சேவை (www.thaalee.com)
Profile Number 5506 போன்: 2523127, 2520619

### மணப்பெண் தேவை

யாழ்.இந்து கௌரவ குலம், 39 வயது, கார்த்திகை நட்சத்திரம், A/L வரை படித்த Supermarket owner ஆக இருக்கும் மணமகனுக்கு அழகான மணமகள் தேவை. சீதனம் தேவையில்லை. 12 இல் செவ்வாய் +ராகு உள்ளது. Profile Number 5858
இது ஒரு திருமண சேவை (www.thaalee.com)
போன்: 2523127, 2520619


## மரண அறிவித்தல்

### திருமதி சிறிகரன் தவமணிதேவி

தையிட்டியைப் பிறப்பிடமாகவும் நீதிமன்ற வீதி, மல்லாகத்தை வசிப்பிடமாகவும் கொண்ட முருகுப்பிள்ளை சிறிகரனின் மனைவி தவமணிதேவி நேற்று(18.04.2009) சனிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் சிறிகரனின் அன்பு மனைவியும் கோபிதாஸ், கோகுலன், பவித்திரா, றஜீப் ஆகியோரின் அன்புத் தாயும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் மல்லாகத்தில் உள்ள அவரது இல்லத்தில் இன்று(19.04.2009) ஞாயிற்றுக்கிழமை பி.ப. 3 மணியளவில் நடைபெற்று, மல்லாகம் இந்துமயானத்தில் பூதவுடல் தகனஞ் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

நீதிமன்ற வீதி,
மல்லாகம்.

தகவல்: மு.சிறிகரன் (கணவர்)
[தெல்லிப்பழை ப.நோ.கூ.சங்கக் கிளை முகாமையாளர்].

## சான்றிதழ் வழங்கும் நிகழ்வு

யாழ்ப்பாணம், ஏப்.19

ஐ.ஐ.எஸ்.நிறுவனத்தின் 13ஆவது நிறுவனதின விழாவும் சான்றிதழ் வழங்கும் நிகழ்வும் நேற்று சனிக்கிழமை காலை 9.30 மணியளவில் சென்.ஜோன்ஸ் கல்லூரியின் ஜூபிலி மண்டபத் தில் நடைபெற்றன.

நிறுவன இயக்குநர் கு.விக்னேஷ் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் ஐ.ஐ.எஸ். நிறுவனத்தின் முகாமையாளர் அன்ரன் பி.எல்.ஐ. கிறிஸ்ரியன் மற்றும் ஐ.ஐ.எஸ். நிறுவனத்தின் வடமராட்சி கிளையின் பிரதம பயிற்றுவிப்பாளர் ஆர். பிரபாகரன் ஆகியோர் சிறப்புரை நிகழ்த்தினர்.

இந்த நிகழ்வில் அமரர் வைத்திலிங்கம் குலரட்ணம் ஞாபகார்த்த தங்கப் பதக்க உயர் விருதினை பத்மநாதன் சஞ்சீவனுக்கு நிறுவனஇயக்குநர்குவிக்னேஷ் அணிவித்தார்.

சிறப்பு விருதுகளை பாகினி சிவசுவாமி, கவிதா இராசையா, அருட் சுதா சுப்பிரமணியம், சண்முகம் ஜெயகிருஷ்ணா, எழிலரசி கணபதிப்பிள்ளை, குலேந்திரராஜ் கஜந்தன் ஆகியோர் பெற்றுக் கொண்டனர். (9)

## கிரிக்கெட் ஆட்டம்

யாழ்ப்பாணம், ஏப்.19

கொக்குவில் இந்துக்கல்லூரிக்கும் யாழ். இந்துக் கல்லூரிக்கும் இடையிலான 50 பந்து பரிமாற்றங்கள் கொண்ட கிரிக்கெட் போட்டி நாளை திங்கட்கிழமை யாழ். இந்துக்கல்லூரி மைதானத்தில் இடம்பெறவுள்ளது. (1)


மக்களின் தேவையறிந்து தனது சேவையை
விஸ்தரித்து வரும்
யாழ்ப்பாணம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம்
தற்போது
கூட்டுறவுக் கிராமிய வங்கியின்
இணைந்த சேவையாக
2009-04-20ஆம் திகதி முதல்
வெஸ்ரேன் யூனியன் பணப்பரிமாற்றச் சேவையை
WESTERN
UNION
MONEY TRANSFER
குதூகலமாக ஆரம்பித்து வைக்கின்றது.
உலகின் எந்தப் பாகத்திலிருந்தும்
ஒரு சில நிமிடங்களினுள்
பாதுகாப்பாகவும் விரைவாகவும்
பணத்தைப்
பெற்றுக்கொள்ளலாம் என்பதை
மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம்.
MMBL SUB AGENT
JAFFNA MPCS CRB
தலைவர், பணிப்பாளர்,
பொதுமுகாமையாளர்,
யாழ்ப்பாணம் ப.நோ.கூ.சங்கம்,
யாழ்ப்பாணம்.


## மரண அறிவித்தல்கள்

### திருமதி நவஜோதி ரஞ்சன் (ரஜி)

வீமன்காமம் வடக்கு, தெல்லிப்பழையைப் பிறப்பிடமாகவும் கூமாங்குளம், வவுனியாவை வதிவிடமாகவும் கொண்ட திருமதி நவஜோதி ரஞ்சன் 17.04.2009 வெள்ளிக்கிழமை வவுனியாவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வேலாயுதபிள்ளை (இளைப்பாறிய ஊழியர், K.K.S. சிமெந்து கூட்டுத்தாபனம்) - செல்வராணி தம்பதியினரின் அன்பு மகளும் ரஞ்சனின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற சுப்பிரமணியம் - கனகம்மா தம்பதியினரின் மருமகளும் பார்த்தீபன், பிரதீபன், சுபதீபன், துளசிதா, சுகிர்தா ஆகியோரின் அன்புத் தாயாரும் கோகுலவாணியின் மாமியும் ரோகினி, கௌசிகன், சபிசாயினி ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (18.04.2009) சனிக்கிழமை வவுனியாவில் நடைபெற்றன. இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கோட்டைக்காட்டு வீதி,
கோண்டாவில் கிழக்கு, கோண்டாவில்.

தகவல்: க.தில்லைநடராசா
(சிறிய தந்தை).

### சோமசுந்தரம் பாலேந்திரன்
(பருத்தித்துறை பாலன் விற்பனை நிலைய உரிமையாளர்)



ஐயனார் கலட்டி வீதி, பருத்தித்துறையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சோமசுந்தரம் பாலேந்திரன் நேற்று (18.04.2009) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் கலாவதியின் அன்புக் கணவரும் மயூரி, மாதங்கி ஆகியோரின் பாசமிகு தந்தையும் காலஞ்சென்றவர்களான சோமசுந்தரம் - தங்கரத்தினம் தம்பதியினரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான வைரமுத்து - அன்னபூரணம் தம்பதியினரின் அன்பு மருமகனும் இராசேந்திரம் (இந்தியா), செல்வராணி (லண்டன்) ஆகியோரின் அன்புச் சகோதரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (19.04.2009) ஞாயிற்றுக்கிழமை காலையில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக காலை 8 மணிக்கு சுப்பர்மடம் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

ஐயனார் வீதி,
பருத்தித்துறை.

தகவல்:
குடும்பத்தினர்.

### வைத்திலிங்கம் குகதாசன் (நயினாதீவு, குகநாதப்பா)



நயினாதீவு, 3 ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட வைத்திலிங்கம் குகதாசன் நேற்று (18.04.2009) சனிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வைத்திலிங்கம் - நாகமுத்து தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி - தையலம்மை தம்பதியரின் அன்பு மருமகனும் செல்லம்மாவின் அன்புக் கணவரும் கனகேஸ்வரன்(சுவிஸ்), மோகனேஸ்வரன் (டென்மார்க்), விமலேஸ்வரி (கனடா), கேதீஸ்வரி(பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும் திருமலர்(சுவிஸ்), சிவாகரி(டென்மார்க்), விசுவலிங்கம் (கனடா), தெய்வேந்திரராசா (பிரான்ஸ்) ஆகியோரின் மாமனும் காலஞ்சென்றவர்களான சிதம்பரப்பிள்ளை, சின்னம்மா மற்றும் சொர்ணலிங்கம், செல்லம்மா ஆகியோரின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்றவர்களான தர்மலிங்கம், பொன்னம்பலம், விசாலாட்சி, குலசேகரம் மற்றும் சௌந்தரம், நாகம்மா, சின்னம்மா ஆகியோரின் மைத்துனரும் நிதர்சன், நிலானி, ஆதுஷன், ஆதுஷி, மனோஜ் ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (19.04.2009) ஞாயிற்றுக்கிழமை பி.ப. 4 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக நயினாதீவு சல்லிப்பரவை மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

3 ஆம் வட்டாரம்,
நயினாதீவு.

தகவல்: செல்லம்மா (மனைவி),
பகீரதன் (பெறாமகன் - அதிபர்)

### திருமதி சிவபாக்கியம் பாலசுப்பிரமணியம்



மாரீசன் கூடலைப் பிறப்பிடமாகவும் நீர்வேலியை வாழ்விடமாகவும் கொண்ட அத்தியார் இந்துக் கல்லூரியின் முன்னாள் பிரதம பகுதி அதிபர் திருமதி சிவபாக்கியம் பாலசுப்பிரமணியம் (பாலா ரீச்சர்) நேற்று (18.04.2009) சனிக்கிழமை இயற்கை எய்தினார்.

அன்னார் மாரீசன் கூடல் சுப்பிரமணிய வித்தியாசாலை ஸ்தாபகரும் ஆசிரியருமான அமரா பொன்னம்பலம் - வள்ளிப்பிள்ளை தம்பதியினரின் அருமை மகளும் அமரர்கள் சபாரத்தினம், நாகநாதன், சுப்பிரமணியம், விஜயலட்சுமி, கனகம்மா ஆகியோரின் அருமைச் சகோதரியும் நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரி ஸ்தாபகர் அமரர் அத்தியார் - தங்கம் தம்பதிகளின் அருமை மருமகளும் அத்தியார் இந்துக்கல்லூரியின் முன்னாள் ஆசிரியர் அமரர் பாலசுப்பிரமணியத்தின் அருமை மனைவியும் அமரர் பா.சிவசங்கரன் (நீர்வேலி) மற்றும் அருணாசலம் முதலியார் (கனடா), காசிநாத முதலியார் (இந்தியா), அமரர் தங்கராணி (ஆசிரியை, மன்னார்) மற்றும் இராஜராஜேஸ்வரி (ஆசிரியை, யா/அத்தியார் இந்துக் கல்லூரி) ஆகியோரின் அருமைத் தாயாரும் மனோகரன் (சவூதிஅரேபியா), புஸ்பராணி (லண்டன்) ஆகியோரின் அருமைச் சிறியதாயாரும் திருமதி யோகச்செல்வம் (கனடா), ந.சிவகுமாரன் (வெளிக்கள உத்தியோகத்தர், யா/சி.க.கூ.ச. சமாசம்) ஆகியோரின் அருமை மாமியாரும் சங்கீதா, கஜானன் (கனடா) ஆகியோரின் அருமைப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (19.04.2009) ஞாயிற்றுக்கிழமை பி.ப. 2 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக நீர்வேலி சீயாக்காடு மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

ராசன் கடை அருகாமை,
ராச வீதி, நீர்வேலி மேற்கு.

தகவல்:
மகள், மருமகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரதமர் பதவி யாருக்கு? குறி வைத்துக் காத்திருக்கும் 3ஆம் அணித் தலைவர்கள்

வரவிருக்கும் இந்திய தேர்தல்களில் காங்கிரஸ் கட்சிக்கோ பாரதிய ஜனதாவுக்கோ போதிய பெரும்பான்மை கிடையாவிட்டால் சுவாரஸ்யமான காட்சிகள் அரங்கேறலாம் என்று தெரிகிறது. மாநிலக்கட்சிகளின் தயவின்றி காங்கிரஸோ அல்லது பி.ஜே.பியோ கரைசேரமுடியாது என்பது தெளிவாகிவிட்டது. ஒருவேளை காங்கிரஸ், பி.ஜே.பி இரண்டும் அல்லாத ஒரு கூட்டணி பெரும்பான்மையைப் பெறமுடிந்தால் அதன் பிரதமர் யார் என்பதற்கான குடுமிபிடிச் சண்டைதான் இதில்



மாயாவதி

முக்கிய சர்ச்சையாக விளங்கும் எனலாம.

பலவேறு முக்கிய மாநிலக்கட்சிகளும் தத்தமது மாநிலங்களில் காங்கிரஸையும் பி.ஜே.பியையும் பின்தள்ளி அதிகூடிய இடங்களைப் பெற ஆவலுடன் உள்ளன. இதில் முககிய போட்டியாளர் உத்தரப்பிரதேச முதல்வர் செல்வி மாயாவதி

மாயாவதியின் கட்சிக்கு தற்போது லோக்சபாவில் 19 எம்பிக்கள் இருந்தாலும் வரும் தேர்தலில் இது 35 ஆக அதிகரிக்கலாம் எனத் தெரிகிறது. உததரப்பிரதேசத்தில் ஐந்தில் ஒரு பங்கினராக உள்ள முஸ்லிம்கள் இந்த முறை மாயாவதியை ஆதரிக்கக் கூடும் என ஊகிக்கப்படுகிறது.

கடந்த காலங்களில் காங்கிரஸை அல்லது முலாயம் சிங் யாதவை


சரத்பவார்

ஆதரித்துவந்த முஸ்லிம்கள் இந்த முறை மத்திய அரசின் ஆட்சி மீது வெறுப்புற்று மாயாவதியை ஆதரிக்கலாம் என்ற நம்பிக்கை மாயாவதிக்கு உண்டு.

முஸ்லிம்கள் தவிர பிராமணர், தலித் என பலதரப்புகளையும் வளைத்துப் போடும் கைங்கரியத்தில் மாயாவதி சமர்த்தராக விளங்குகிறார். இந்த சித்துவிளையாட்டைக் காட்டி கடந்த சட்டசபைத்தேர்தலில் அவர் உத்தரப்பிரதேசத்தில் அமோக வெற்றி பெற்று முதல்வரானார். இப்போது உத்தரப்பிரதேச ஆட்சி யந்திரம் இவரது கையில் இருப்பதால் பணபலமும் கைவசமுள்ளது. இந்தப் பணத்தைக் கொண்டு மற்றைய மாநிலங்களிலும் காலூன்ற மாயாவதி முயன்றுவருகிறார்.

தலித் என்ற தீண்டத்தகாத சாதியினரான மாயாவதி பெண்ணாகவும் படித்த சட்டத்தரணியாகவும் இருப்பதால் நாடு முழுவதிலும் தலித்கள் இவர்பால் ஈர்க்கப்பட்டுள்ளனர். மஹாராஷ்டிரா, ராஜஸ்தான், டில்லி, பஞ்சாப், மத்திய பிரதேசம் என பல ஹிந்திமாநிலங்களில் இவரது பகுஜன் சமாஜ் கட்சி மெதுவாகத் தடம்பதித்து வருகிறது. இதனால் காங்கிரஸ் போன்ற தேசியக் கட்சிகள் கெடிக் கலக்கத்தில் உள்ளன. ஏனெனில் ஹிந்தி மொழிபேசும் தலித்கள் பெரும்பாலும் இந்த மாநிலங்களில் காங்கிரஸின் ஆதரவாளர்களாகவே இருந்துவந்தனர். இந்த இடத்தை மாயாவதி பெற முனைவது மட்டுமன்றி சில வெற்றிகளும் பெற்றுள்ளார்.

உத்தரப்பிரதேசத்துக்கு வெளியே மாயாவதியின் கட்சி எந்த ஒரு லோக்சபா தொகுதியையும் இதுவரை வெல்லவில்லை. ஆனால், இந்தத் தேர்தலில் மஹாராஷ்டிராவில் ஒரு தொகுதியையாவது இவர் வெல்லலாம் என எதிர்பார்க்கப்படுகிறது. அவ்வாறு வென்றால் இது பெரும் சாதனையாகும். ஏனெனில், முக்கிய மாநிலக்கட்சிகள் பல இருந்தும் அவை தத்தமது மாநிலங்களுக்கு வெளியே எந்த ஒரு தொகுதியையும் வெல்லமுடியாத நிலையே இருக்கிறது. முலாயம சிங் யாதவ், லல்லுபிரசாத் யாதவ், மம்தா யபானஜி, சரத்பவார் என பல மாநிலக்கட்சிகளும் கணிசமான முக்கியத்துவமுடைய கட்சிகள். ஆனால் இவற்றால் முடியாத ஒன்றை மாயாவதி சாதிக்க முயன்றுவருகிறாா.

தமிழகத்தில் கூட மாயாவதி பணத்தை வாரிவீசி கட்சியை தேர்தல் பணிகளில் இறக்கிஇருப்பது குறிப்பிடத்தக்கது. அவ்வகையில் அவரை விட வயதிலும் அரசியல் அனுபவத்திலும் மூத்தவர்களான ஜெயலலிதா முலாயம், தேவகவுடா முதலானோர் பொறாமைப்படும் வகையில் மாயாவதி முன்னேறி வருகிறார். ஜெயலலிதா உள்ளிட்ட இத்தலைவர்கள் பிரதமராக விரும்பினாலும் தமது மாநிலத்துககு அப்பால் எந்த செல்வாக்கும் அற்றவர்களாகவே உள்ளனர்.

எனவே மாயாவதி 35 - 40 எம்பிக்களை வென்றெடுக்கும்போது, காங்கிரஸுக்கும் பி.ஜே.பிக்கும் பெரும்பான்மை கிடையாமல் போகுமாயின் அவர் பிரதமராவது நிச்சயமே. இது விஷயத்தில் அவருக்கு முக்கிய போட்டியாளர் சரத்பவர் ஆவார். எனினும், சரத்பவாருக்கு 15 எம்பிக்களுக்கு மேல் கிடைக்க வாய்ப்பில்லை. ஜெயலலிதாவும் 'மிஞ்சி மிஞ்சி பெரும்வெற்றி என்று பெறுவது கூட 22 ஆசனங்களாகவே இருக்கும். ஆந்திராவில் சந்திரபாபு நாயுடுவும் 20 - 25 ஆசனங்களை வெல்லலாம். எப்படிப்பார்த்தாலும் காங்கிரஸ், பி.ஜே.பிக்கு அடுத்து மூன்றாவது பெரிய கட்சியாக வெல்லப்போவது மாயாவதியின் கட்சியே என்பது உறுதியாகிவிட்டது. அவா 30 எம்பிக்களுக்கு மேல் பெறும் பட்சத்தில் மூன்றாவது அணியின் பிரதமர் வேட்பாளராவதற்கு எந்தத் தடையும் இராது. முன்னாள் பிரதமரும் மூன்றாம் அணியை உருவாக்க படாதபாடுபட்டு வருபவருமான தேவகவுடாவும் மாயாவதி பற்றி மறைமுகமாக ஒப்புக்கொண்டுள்ளார். இவருக்கும் பிரதமர் பதவி மீது ஒரு கண் உண்டு. ஆனால், இவரது செல்வாக்கு சொந்த மாநிலமான கர்நாடகாவில் சரிந்து வருவதால் 2 - 3 எம்பிக்ளுக்கு மேல் பெறமுடியாது.

மாயாவதி பிரதமராவதை ஜெயலலிதா பொறுத்துக்கொள்வாரா எனபது முக்கிய கேள்வியாகும். இதுவரை மாயாவதியும் ஜெயலலிதாவும் ஒரே அரசியலில் ஒருபோதும் இருந்ததில்லை. இருவரும் நேருக்குநேர் சந்தித்தது கூட இல்லை எனலாம். தன்னைவிட வயதில் இளையவரான மாயாவதியை ஜெயலலிதா ஏற்கமாட்டார் என கருதப்படுகிறது. ஆனால், தி.மு.க ஆட்சியை கவிழ்ப்பதற்காக எந்தப் பிசாசுடனும் கூட்டுச் சேரமுடியும் என்பதே அம்மாவின் கொள்கை. இதற்கு மாயாவதியும் விதிவிலக்கல்ல.

இந்த இரு பெண்களும் இன்றைய இந்திய அரசியலின் இரும்புப் பெண்மணிகள் என விவரிக்கப்பட்டாலும் மாயாவதி பலபடிகள் உயர்ந்தே நிற்கிறார். ஜெயலலிதா போலன்றி கூட்டணிகளை அமைப்பதிலும், அவற்றைப் பேணுவதிலும் மாயாவதி சிறப்பாக செயற்படக்கூடியவர். ஜெயலலிதாவிடம் உள்ள பழிவாங்கல் என்ற பைத்தியக்காரத்தனதசை அளவோடே மாயாவதி கையாண்டு வந்துள்ளார். ஆண் அமைச்சர்களை காலில் விழவைக்கும் பழக்கமும மாயாவதியிடம் இல்லை. ஜெயலலிதா உயர்சாதிப்பிராமணர்; மாயாவதியோ தாழ்த்தப்பட்ட தலித வகுப்பினர். எம்.ஜி.ஆரில் இருந்து அம்மா வந்ததுபோல காஞ்சிராம் என்ற தலித் தலைவரில் நிழலில் வளர்ந்தவர் தான் மாயாவதி. ஆனால், கடைசி வரை தன் வாரிசு ஜெயலலிதா என எம்.ஜி.ஆர் சொல்லவில்லை. ஆனால், காஞ்சிராம் இறக்கமுன்பே மாயாவதியிடம் எல்லாவற்றையும் ஒப்படைத்துவிட்டுத்தான் இறந்தார். இவ்வாறு ஜெயலலிதாவுக்கு இல்லாத பல சிறப்புகள் மாயாவதிக்கு இருப்பதால் இயற்கையாகவே அவர் பிரதமர் என்ற பதவிக்கு தகுதியானவர் என கருதப்படுகிறார்.

- எஸ்.சுரேந்திரஜித் -

பிரதமராகத் துடிக்கும் மற்றொருவர் சரத்பவார். 67 வயதான இவர் தன்னை வயோதிபம் நெருங்குவதற்கிடையில் பிரதமர் பதவியை நெருங்கிவிடுவதற்கு ஆசைப்படுகிறார். நல்ல நிர்வாகி எனப் பெயரெடுத்துள்ள இவர் இப்போதைக்கு காங்கிரஸ் அணியில் இருந்தாலும் காங்கிரஸால் ஆட்சியமைக்க முடியாது போனால் மூன்றாவது அணிக்கு தாவிவிடுவார் என்று இப்போதே ஊகங்கள் அடிபடுகின்றன. மேலும் இவர் மராட்டியர் என்பதால் பி.ஜே.பி. அணியிலுள்ள மராட்டிய கட்சியான சிவசேனாவும் பகையை மறந்து இவரை ஆதரிக்கலாம்.

[illegible] பி.ஜே.பி அணியிலிருந்து வெளியேறிய பிஜு ஜனதாதள் கட்சியும் பவாரை ஆதரிககலாம். இவ்வாறு காங்கிரஸ் அணிக்கோ பி.ஜே.பி அணிக்கோ பெரும்பான்மை கிடையாது என்று கண்டால் அந்த அணிகளில் உள்ள மாநிலக்கட்சிகள் மூன்றாவது அணிக்கு இடம் மாறுவது இலகுவாக நடைபெறும். அவ்வாறு மாறுவதன் மூலம் மத்திய அமைச்சர் பதவிகளைப் பெறுவது என்பது முக்கிய லாபமாகும். இதை இழக்க எவரும் தயாரில்லை.

ஆனால், தி.மு.க மட்டும் காங்கிரஸ் அணியை விட்டு வெளியேற முடியாது. காரணம், தமிழக தி.மு.க ஆட்சி முழுக்க முழுக்க காங்கிரஸ் தயவில் நடப்பதுதான்.


ஜெயலலிதா

தப்பித்தவறி தமிழகத்தில் 40 இடங்களில் 30 இடங்களை ஜெயலலிதா வெல்லும் பட்சத்தில் மாயாவதியும் எதிர்பாராதவிதமாக குறைந்த எம்பிக்களை பெறும்பட்சத்தில் ஜெயலலிதாவுக்கு பிரதமராகும் வாய்ப்பு கைகூடிவரலாம். ஆனால், அவர் பிரதமராவதை மூன்றாவது அணியின் பல தலைவர்கள் உள்ளூர விரும்பவில்லை என்பதே உண்மை. உதாரணமாக, கம்யூனிஸ்ட் கட்சியினர், சந்திரபாபு நாயுடு என பல மூன்றாம் அணித்தலைவர்கள் ஜெயலலிதா ஒரு நம்பத்தகக கூட்டாளி அல்ல என முத்திரை குத்திவைத்துள்ளனர். ஏதோ தேர்தல் லாபத்துக்காக


முலாயம் சிங் யாதவ்

அ.தி.மு.கவையும் மூன்றாவது அணியில் சேர்ப்பது என முடிவாகியுள்ளதே அன்றி பிரதமர் பதவிக்கு ஜெயலலிதாவை இவர்களால் நினைத்துக்கூடப் பார்க்கமுடியாது. அதே நேரம் இத்தலைவர்கள் மாயாவதியைப் பற்றி இவ்வாறு கருதவில்லை என்பது கவனிக்கத்தக்கது.

எவ்வாறாயினும் மூன்றாவது அணி என்பது பிரதமர் பதவியை குறிவைப்பவர்களின் சேர்க்கை என சோனியா காந்தி சொன்னது ஒரு வகையில் சரியானதே ஆகும். எங்கே காங்கிரஸும் பி.ஜே.பியும் விழாதா என ஆவலுடன் இவர்கள் காத்திருக்கின்றனர்.

* * * * * * * * * * *

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## EDWARD MAKES RED OINTMENT
## றெட் ஒயின் மென்ற்

பித்தவெடிப்பு,நீர்ச்சிரங்கு,புண்,புரை,பருக்கள், கட்டு, படுவன்,அக்கி,கிரந்திஅவியல், தலை அவியல், சொறி, தீச் சுட்ட புண்,வெட்டுக்காயம், உரோஞ்சல்,வட்டக்கடி, அரைக் கடி சகலதையும் குணமாக்கவல்லது.

**றெட் ஒயின் மென்ற் எனக் கேட்டு வாங்குங்கள்**

எல்லா மருந்துக் கடைகளிலும் கிடைக்கும்.
டாக்டர் கபிரியேல் எட்வேட் ( L.A.M.P.R.I.M.P)
வைத்தியாச்சாரி,வைத்தியபூபதி,கலாபோதி.
63,குருசோ வீதி, சுண்டுக்குளி, யாழ்பாணம்.
edward makes @ hotmail. com

## அந்தியேட்டி அழைப்பு

மண்ணில் 26 ★ 11 ★ 1931



விண்ணில் 23 ★ 03 ★ 2009

நல்லூரைப் பிறப்பிடமாகவும் கனடாவில் வசித்தவருமான
### அமரர் கணபதிப்பிள்ளை காங்கேஸ்

கடந்த 23.03.2009 அன்று சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவரின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (19.04.2009) ஞாயிற்றுக்கிழமை கனடாவில் நடைபெறும். அதே தினத்தில் மு.ப.11.30 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும், மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

18/8, கொண்டலடி லேன்,
நல்லூர், யாழ்ப்பாணம்.

அன்புச் சகோதரன்
கணபதிப்பிள்ளை திருநாவுக்கரசு.

## அருள்மிகு ஸ்ரீ நாகபூசணி அம்பாள் தேவஸ்தானம்
### சீரணி, சண்டிலிப்பாய்
### வருடாந்த மகோற்சவ விஞ்ஞாபனம்-2009

| | |
|---|---|
| கொடியேற்றம் | - 28.04.2009 செவ்வாய்க்கிழமை மு.ப.10 மணியளவில் |
| கப்பல் திருவிழா | - 02.05.2009 சனிக்கிழமை மாலை |
| கயிலாயவாகன திருவிழா | - 03.05.2009 ஞாயிற்றுக்கிழமை மாலை |
| சப்பறத் திருவிழா | - 07.05.2009 வியாழக்கிழமை மாலை |
| தேர்த்திருவிழா | - 08.05.2009 வெள்ளிக்கிழமை மு.ப. 10 மணி |
| தீர்த்தோற்சவம் | - 09.05.2009 சனிக்கிழமை மு.ப. 10 மணி |
| வசந்தோற்சவம் | - 11.05.2009 திங்கட்கிழமை. காலை சங்காபிஷேகம் மாலை அம்பாள் வசந்தோற்சவம் வீதி உலாவரும் காட்சி |

**குறிப்பு:** 22.04.2009 புதன்கிழமை முற்பகல் 10 மணிக்கு ஆலய முன்றலில் உற்சவகால தற்காலிகக் கடைகள் ஏலத்தில் விடப்படும். ஏலத்தில் சித்திபெறுபவர்கள் கடைகளுக்கான முழு வாடகையைச் செலுத்துவதுடன் மானிப்பாய் பிரதேசசபையின் சுகாதார பிரமாணங்களுக்கு அமைவாகச் சபையின் அனுமதியைப் பெற்றுக்கொள்ளவும் வேண்டும்.

சோ.பத்மநாதன்,
செயலாளர்,தர்மகர்த்தா சபை.

(84556)

## தவறிவிட்டது

பலாலி தெற்கு, வயாவிளான் என்னும் முகவரியையுடைய நவரத்தினம் பராசக்தி என்பவருடைய தே.அ.அ (487213980V) கடந்த 16.04.2009 அன்று கண்டி வீதி, மீசாலையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தந்துதவவும்.

தொடர்பு: P.நவரத்தினம்,
15/5, மாரியம்மன் வீதி, திருநெல்வேலி.
T.P-0602212819

(84560)

## "ஐங்கரன் திருமண சேவை"

யாழ் இந்து கௌரவகுடும்பம், Uk citizen 27, 32, 39வயது, கனடா Citizen 31, 35 வயது, சுவிஸ் Citizen 38, 42 வயது, கொலன்ட் Citizen 30,36 வயது, பிரான்ஸ் Citizen 28, வயது ஆகிய மணமகன்மார் உள்ளனர். இவர்கள் விரைவில் கொழும்பு வரவுள்ளனர். 24 மணி நேர தொலை பேசி வசதி உண்டு.

லண்டன் தொடர்பு: 00447535384166, 0044 7508295863
Fax No:00442086810701, 00442086720673

## மணமகள் தேவை

யாழ்.இந்து 27 வயது, கிரக பாவம் (26) உத்தரட்டாதி நட்சத்திரம், கொழும்பில் "சொந்த வீடு", "சொந்த வியாபாரம்" உடையவருக்கு குடும்பப் பாங்கான அழகிய மணமகள் தேவை. சீதனம் எதிர்பார்க்கப்படமாட்டாது.

0112 502143,0777 267027

(C/558112)

## "ஐங்கரன் திருமண சேவை"
## மணமகள் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்பம் U.K Citizen 40 வயது, விவாகரத்துப் பெற்றவர், சொந்தமாக சுப்பர் மார்க்கெற் நடத்துகிறார். படித்த மணமகளை எதிர்பார்க்கின்றார்.

லண்டன் தொடர்பு: 00447904535905

## தேவை

* ரைப் செற்றிங் தெரிந்த பெண் பிள்ளைகள்
* மெசின் மைன்டர் -ஆண் பிள்ளைகள் தேவை.

19.04.2009-22.04.2009 ஆம் திகதிகளுக்கிடையில் பி.ப. 3.00-5.00 மணிவரை நேரில் வரவும்.

தொடர்பு:- ஐங்கரன் ஒவ்செற்
சிலையடி, மந்திகை. தொ.பே:- 0212263641
★ சகலவிதமான அச்சக வேலைகளும் குறித்த தவணையில் செய்து தரப்படும்.

## கிரிக்கெட் பயிற்சி முகாமுக்கு சமூகமளிப்போர் கவனத்துக்கு

யாழ்ப்பாணம், ஏப்.19

பாடசாலைகளின் கிரிக்கெட் வீரர்களுக்கான பயிற்சி முகாம் நாளை திங்கட்கிழமை முதல் எதிர்வரும் புதன்கிழமை வரை யாழ்.சென்.ஜோன்ஸ் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இந்தப் பயிற்சி முகாமில் பங்குபற்றும் கிரிக்கெட் வீரர்கள் அனைவரும் கட்டாயமாக வெள்ளை நிறச் சீருடைகளுடன் சமூகமளிக்குமாறு பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தின் தலைவர் அறிவித்துள்ளார்.

இந்தப் பயிற்சி முகாமில் இலங்கை கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையின் தலைவர் டி.எஸ்.டி.சில்வா, பயிற்சி முகாமையாளர் மல்கம் பெரேரா உட்படப் 10 வளவாளர்கள் கலந்து கொள்ளவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (50-86)

## திருக்குளிர்த்திப் பெருவிழா

கோப்பாய், ஏப்.19

கோப்பாய் பலானை கண்ணகை அம்மன் ஆலய வருடாந்த திருக்குளிர்த்திப் பெருவிழா நாளை திங்கட்கிழமை காலை 7 மணிக்கு ஆரம்பமாகி நடைபெறவுள்ளது.

முற்பகல் 10 மணிக்கு விசேட அபிஷேக பூசையைத் தொடர்ந்து அன்னதானம் வழங்கப்படும்.

இந்த நிகழ்வை முன்னிட்டு அம்பாளின் கிராம தரிசனம் இன்று ஞாயிற்றுக்கிழமை நடைபெறும். (204-72)

## அப்பலோ வைத்திய நிலையம்
## தாதியர் தேவை

அப்பலோ கண் வைத்திய நிலையத்திற்கு அனுபவமுள்ள தாதியர் அல்லது தாதிய பயிற்சி பெற்றவர் அல்லது பயிற்சி பெற விரும்பும் பெண்கள் தேவை.

இடம்: அப்பலோ வைத்திய நிலையம், 16, பலாலி வீதி, யாழ்ப்பாணம்.
காலம்: 22.04.2009
நேரம்: காலை 9மணி தொடக்கம் 12 மணி வரை

★ குறிப்பு : பிரபல கண் வைத்திய நிபுணர்களால் வாரம் ஏழு நாட்களும் கண் பரிசோதனை, கண் சத்திரசிகிச்சை தொடர்ந்து நடைபெற்றுக்கொண்டிருக்கின்றது.

நிர்வாகம்.

## கண்ணீர் அஞ்சலி




எமது கல்லூரியின் விஞ்ஞான ஆசிரியர்
திரு.ம.முகுந்தன் அவர்களின் அன்புத்தந்தை
### பொ. மகாதேவன்
அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் ஆசிரியருக்கும் அவரது குடும்பத்தினருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

யா/மானிப்பாய் மகளிர் கல்லூரி.

அதிபர், ஆசிரியர்கள்,
மாணவர்கள்.

## ஓராண்டு நினைவஞ்சலி

மலர்வு 14 . 10 . 1952



உதிர்வு 30 . 04 . 2008

அமரர்
### கந்தையா விநாயகவசீகரன்
[உரிமையாளர், வசி வோச் வேக்ஸ்]

அன்பினால் எமையாண்டு அறநெறிக்கல்வி புகட்டி
நாங்கள் ஒளிர மெழுகாய் உருகிய நீங்கள்
இடைவழியில் எம்மைவிட்டு பிரிந்ததேனோ?
ஆண்டு ஒன்று என்ன ஆயிரம் சென்றாலும்
உங்கள் நினைவுகளுடன் ஆத்ம சாந்திக்காய் பிரார்த்தித்து
வாழ்வோம்-நீங்கள் காட்டிய பாதையிலே....

உங்கள் நினைவுடன்

கேணியடி லேன்,
கொக்குவில் மேற்கு,
கொக்குவில்.

மனைவி,
பிள்ளைகள்.

## வாடிய இதயத்துடன் செலுத்தும் முதலாம் வருட கண்ணீர் நினைவலைகள்

### செல்வி
### இந்துஜா விஜயகுமார்



தாயின் மடியில் 27.06.2003
இறைவனின் அரவணைப்பில் 19.04.2008

மழலை மொழி பேசி எமை
மகிழ்விக்கும் மகளே இந்து!
நீ எமை விட்டு அகன்றுவிட்ட
காலம் ஒரு வருடம்
எனினும் நீ இன்றி
எம் வாழ்க்கை இருண்டு விட்டது
நடைப் பிணமாய் அலையும்
எம் நிலை கண்டு இறைவனும்
இரங்கவில்லை
உன் இடத்தில் எமை எப்போது
கூப்பிடுவாய் என
வாடிய இதயமுடன் ஈரவிழி
நின்றும் கண்ணீர் சொரிகின்றோம்.

என்றும் நினைவுடன்
அம்மா, அப்பா,
மற்றும் பாசத்திற்குரிய உறவுகள்.
கொம்மந்துறை, வல்வெட்டி.

## விண்ணக வாழ்வின் முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

இவ்வுலகில் 01.03.1929
இவ்வுலகில் 24.08.1937



இறை அருகில் 24.06.2008
இறை அருகில் 19.04.2008

அமரர்கள்
### செல்லப்பா ஜெயரத்தினம் இரத்தினதேவி ஜெயரத்தினம்

"உயிரோடு இருக்கும்போது என்னிடம் நம்பிக்கை கொள்ளும் எவரும் என்றுமே சாகமாட்டார்"
யோவான் 11:26

உடலால் பிரிந்து ஒரு வருடம் கடந்தாலும் எங்கள் இதயத்தில் உங்களை நாம் என்றுமே அழியாமல் காக்கின்றோம். நீங்கள் இறைவனோடு இருக்கிறீர்கள் என்பதை நாம் உணருகின்றோம்.

சின்னப்பா வீதி, நவாலி கிழக்கு.

குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அதிகரித்து வரும் சமூக உள நெருக்கீடுகளை நேர் செய்வது குறித்த பிரக்ஞை தேவை

## பாதிப்புறுவோரின் எதிர்காலத்தைச் சீராக்க திட்டமிட்ட செயல் முறைகள் தேவை

தமிழ் மக்கள் மிகப்பெரிய சமூக உள நெருக்கீட்டினை தற்போது அனுபவித்துக் கொண்டுள்ளனர். இதனை ஐந்து விதமாக அறிந்து கொள்ளலாம்.

முதலாவதாக இடம்பெயர்ந்து அல்லலுறும் மக்கள் வாழும் நலன்புரி நிலைதளை மேலோட்டமாகப் பட்சிப் பார்வையினைச் செலுத்தி (Birds Eye View) நோக்கும் போது அவர்களது சமூக, உள நெருக்கீடுகள் தெரியவரும். இதனைச் செய்மதிப் படங்கள் மூலமும் பார்க்கலாம்.

இரண்டாவதாக அவர்கள் வாழுமிடங்களுக்குக் குறுக்காகச் சென்று வரல் (Community Cross Walk).

மூன்றாவதாக அவர்களுடன் கலந்துரையாடித் தகவல்களைப் பெறல்.

நான்காவது அவர்களுக்குத் தேவைப்படும் சேவைகளை வழங்குவதன் மூலம் அறிதல்.

ஐந்தாவதாக சமூக உளநெருக்கடிகள் பற்றிய மாய உண்மை மாதிரிக் கற்கைகள் மூலம் (Virtual Reality in Psychosocial Crisis) அறிதல்.

எது எவ்வாறு நடைபெறினும் விஞ்ஞான உலகில் உண்மைகளை மறைத்தல் கடினம். ஆனால் கற்றவர்கள் மௌனமாக இருத்தல் கடவுகளை ஏமாற்றும் செயலாகும்.

அழிவுக்குப் பின்பான சூழலில் காயங்கள், போஷாக்கின்மை, நோய்த்தொற்று என்பன அதிகஅளவில்காணப்படுகின்றன. எனவே அத்தகைய சமூகத்தினை மீளக் கட்டியெழுப்புவது என்பது சம்பூரணமான கவனிப்புடன் கூடியதாக அமைய வேண்டும். இதில் உள ஆரோக்கியத்துடன் இணைந்த தேவைகளும் ஏராளம்.

சமூக உளத் தேவைகளை நிறைவேற்றும் போது தரவு சேகரிப்பு, பொருள் உதவி, மனிதப் பணி என்பன இடம் பெறுகின்றன. அனர்த்தங்களுக்கு முகம் கொடுத்தவர்களுக்கு உணர்வு பூர்வமான ஆதரவினை அளிக்கும் போது அழிவுகளில் உயிரிழப்பு, சொத்துக்களின் இழப்பு, வதிவிட இழப்பு என இழப்புகளுக்கு ஏற்ப துன்பம், கவலை, பதகளிப்பு, கோபம் என்பன ஏற்படும் என்பதனை அவதானிக்க வேண்டும்.

இத்தகையவர்களுக்கு ஆறுதல் அளித்து அவர்களது மாற்றம் சாதாரணமானது எனக் கூறி அதனை அவர்கள் உணரச் செய்தல் வேண்டும்.

அழிவுகள் இரு வகையில் ஏற்படுத்தப்படலாம். முதலாவது தனி மனிதனுக்கு ஏற்படும் வன்தாக்கம். இரண்டாவது சமூகத்தின் மீது நிகழ்த்தப்படும் கூட்டான வன்தாக்கம்.

தனிமனிதன் மீது நிகழ்த்தப்படும் வன்தாக்கங்கள் அவனிற்கு மன அழுத்தத்தினையும் கவலையையும் அளிக்கும். சமூகத்தின் மீது நிகழும் கூட்டான வன்தாக்கங்கள் சமூக பந்தங்களில் மாற்றத்தினை ஏற்படுத்தும். இதனால் சமூகத்தில் இயற்கையாகக் கிடைக்கும் ஆதரவு இல்லாது போகும். உதாரணமாக சாதாரண சூழலில் ஒரு கிராமத்தில் மரண வீடு என்றால் கிராம மக்கள் அனைவரும் ஒன்று கூடி உதவுவார்கள். ஆனால் கிராமம் முழுவதும் ஒரே நேரத்தில் பல மரணங்கள் நிகழும் போது ஒருவருக்கு ஒருவர் உதவமுடியாத , ஆறுதல்தானும் கூறமுடியாத நிலை ஏற்படுகின்றது. இந்நிலையில் அவர்களுக்கு ஏற்படும் மனத்துயர் பன்மடங்காகக் காணப்படும். இதனை சமூக உளநல மேம்பாட்டாளர்கள் கருத்தில் கொள்ளவேண்டும்.

பெரும்பாலான மக்கள் அனர்த்தத்தின் போதும் பின்பும் ஒன்றாகச் செயற்படுகின்றனர். ஆனால் அவர்களது செயற்திறன் குறைவாகவே காணப்படும். இது அவர்களது தீர்மானம் மேற்கொள்ளும் தன்மையில் பாதிப்பினை ஏற்படுத்துகின்றது. ஆதலினால் அவர்களை மீளக் கொணரலில் விசேட படிமுறைகளை எடுத்தல் வேண்டும்.

அழிவுகளின் போது ஏற்படும் மன அழுத்தமும் துன்பமாற்றமும் அசாதாரண சர்ந்தர்ப்பத்தில் ஏற்படும் சாதாரண மாற்றமே ஆகும். இதனை மக்கள் உணரும் போது அனர்த்த வன்தாக்கத்தில் இருந்து மீளுதல் இலகுவானதாக அமையும்.

### உணர்வு ரீதியான பிரச்சினைகள்

பெரும்பாலான உணர்வு ரீதியான பிரச்சினைகள் அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு ஏற்படும். இவை அனர்த்தம் அவர்களது வாழ்வியல் தேவைகளில் ஏற்படுத்திய பாதிப்புக்களால்ஏற்படுபவையே. பொதுவாக இவை உறைவிடம், உணவு, உடை என்பனவற்றுடன் தொடர்புடையதாக அமையலாம். நேரத்திற்குத் தகுந்த சரியான நிவாரணம் அவர்களுக்கு அளிக்கப் படுவதால் சில பிரச்சினைகளைக் குறைக்கலாம்.



★ அனர்த்தத்தின் பின்பான உளநல சேவை பாதிக்கப்பட்டவர்களது மத, கலாசாரத்திற்கு ஏற்றதாக அமைதல் வேண்டும். பாதிக்கப்பட்டவர்கள் மிகவும் ஆர்வத்துடன் அதில் பங்களிப்பர். அவர்களது உணர்வுகளைப் பற்றிக் கதைப்பர். அனுபவங்களைப் பற்றிக் கதைப்பர். அவர்களது எண்ணங்களைக் கூறுவர்.

★சமூக உள மேம்பாட்டாளர்கள் பாதிக்கப்பட்டவர்களுடன் நேர்மையாக நடந்து அச்சத்தினை அகற்றி, ஆற்றுப்படுத்தல் வேண்டும். அவர்களது தனிப்பட்ட வாழ்வில் குறுக்கீடு செய்தல் ஆகாது.

அனர்த்தத்தின் நிலைகளுக்கு ஏற்ப, இடையறுப்பு வேலைகள் அமைதல் வேண்டும். ஆரம்பத்தில் பாதிக்கப்பட்டவர்களிடம் சம்பவங்களைக் கேட்டல், ஆதரவு அளித்தல், அவர்களது மனம் ஆறுதலடைய உதவல், துன்பத்தினைக் குறைத்தல் என்பன மேற்கொள்ளப்படும். இறுதியில் அவர்களது விரக்தியினை நீக்கல், கோபத்தினைப் போக்கல், மாயப் பிரமையினை நீக்கல் என்பன மேற்கொள்ளப்படும்.

### ஆதரவு அளிக்கும் செயன்முறை

ஆதரவு அளிக்கும் செயன்முறை அனர்த்தத்தின் பின் அதன் பாதிப்புகளில் இருந்து மீள மிகவும் இன்றி அமையாதது. ஒரு தனி நபருக்கு மிகவும் முக்கியமான ஆதரவு அளிக்கும் அமைப்பு அவரது குடும்பமே ஆகும். எனவே சமூக உள மேம்பாட்டாளர்கள் குடும்ப அங்கத்தவர்களை ஒன்றாக வைத்திருக்க உதவ வேண்டும். இதுவே அவர்களுக்குப் பாதிப்பில் இருந்து மீள உதவும்.

[illegible] ஒரே குடும்ப அங்கத்தவர்கள் வெவ்வேறு முகாங்களில் தடுத்து வைக்கப்பட்டு அவர்களுக்கு நலன்புரி நல்கும் சேவை நடைபெறுகின்றது. இது அவ்வளவு சரியானது அல்ல. மேலும் குடும்ப அங்கத்தர்களை இழந்தவர்களுக்கு அவர்களது உறவினர்கள் அல்லது அயலவர்கள் உடன் இருத்தல் மீளலுக்கு உதவும்.

சமூகத்தின் மீளலுக்கு வெளியில் இருந்து உதவும் அமைப்புகளும் பாதிக்கப்பட்டவர்களில் இருந்து அமைக்கப்படும் செயற்குழுவும் இதற்கு உதவும்.

அனர்த்தம் பொதுவாக ஆழமான வடுவினைப் பாதிக்கப்பட்டவர்களில் ஏற்படுத்தி விடுகிறது. இதன்போது ஏற்படும் உடல் ரீதியான பாதிப்புக்களாக முறிவுகள், காயங்கள், நோய்த்தொற்று, கர்ப்பம் தரித்தல், இனப்பெருக்க சுகாதாரப் பிரச்சினைகள், அங்கவீனமாதல் என்பன ஏற்படலாம். உளவியல் ரீதியான பாதிப்புக்களாக அதிர்ச்சி,பீதி, பயம், பதகளிப்பு, குற்றஉணர்வு, மீளமீளச் சம்பவங்கள் நினைவுக்கு வரல், பயங்கரக் கனவு, அதிகமாக அழுதல், மனச்சோர்வு என்பன ஏற்படலாம்.

அனர்த்தத்தின்பின் சமூக ரீதியான பாதிப்புக்களாக வீடிழப்பு, கணவன்/மனைவி இழப்பு, இடப்பெயர்வும் தற்காலிகக் குடில்களில் வாழலும், தனிப்பட்ட/அந்தரங்க இடம் இன்மை, தனித்து ஒரு பெற்றோருடன் குடும்பம் உருவாதல், அநாதைகள் உருவாதல், இளவயதுத் திருமணம், புலம் பெயர்வு, கல்வியினைக் கைவிடல், பெண் கள் முதன்முதல் வீட்டுச் சுவர்க ளுக்கு வெளியே வாழ்தல், சட்ட ரீதியான உதவிகளைப் பெறமுடியாது இருத்தல், ஊழல் நடவடிக்கைகளால் பாதிக்கப்படல், வழிகாட்ட கிராமத் தலைவர்கள் இன்மை, வழிகாட்ட ஆதரவு இன்மை என்பன ஏற்படலாம்.

அனர்த்தத்தின் பொருளாதார ரீதியான பாதிப்புகளாக வாழ்வாதாரங்களின் இழப்பு, பொருள்களின் இழப்பு, வேலை இன்மை, மீளவாழ்க்கையினை நடத்தக் கடினமாக அமைதல் என்பன அமையலாம். ஆரம்பநிலையில் சமூக உளத் தேவைகளாக, தற்காலிக கொட்டகை, உணவு, மருத்துவ வசதி, உடை, சுகாதார வசதி, பாதுகாப்பான குடிதண்ணீர் என்பன அமைகின்றன.

பின் உளவளத்துணை, இழப்புகளுக்கும் சேதத்திற்கும் நட்ட ஈடுகள், வாழ்க்கைக்குத் தேவையானவற்றைப் பெற உதவல், சமூக ரீதியாக மீள் வாழ்வு அளித்தல், சட்ட உதவிகள் வழங்கல், சமூக நீதி வழங்கல் என்பன கவனிக்கப்படல் வேண்டும்.

சமூக உள சேவை அளிக்கப்பட்டோர் அனர்த்தப் பாதிப்பில் இருந்து மீளல், சமூக உளசேவை அளிக்கப்படாதோரை விட இலகுவானதாக அமையும்.

டாக்டர்
சி.ஜமுனானந்தா (MBBS, DTCD)

# யாழ்.நூலகத்திற்கு வித்திட்டவர் அச்சுவேலி செல்லப்பா

**இன்றும் நினைவில் கொள்ள... அன்றைய ஞாபகம்... இங்கே!**

யாழ்.நூலக ஸ்தாபகர் செல்லப்பா காலமானார்.

24.04.1958 அன்று அச்சுவேலி செல்லப்பா காலமானார். (இவரது ஊர் ஆவரங்கால் என்றும் சிலர் கூறுகின்றனர். ஊர் பற்றிய ஆராய்ச்சி எமக்குத் தேவையற்றது) யாழ்.நீதிமன்றத்தில் செயலாளராகக் கடமையாற்றிய அச்சுவேலியைச் சேர்ந்த க.மு.செல்லப்பா கந்தர்மடத்தில் வசித்து வந்தார். அப்போது இவர், முன்னேற்றத்தில் முதல்நூற்றுவர் கழகம், (The Progressive Hundred) என்ற கழகத்தை ஆரம்பித்தார்.

இக்கழகம் மக்களிடையே வாசிப்புப் பழக்கத்தைத் தூண்டும் நடவடிக்கைகளில் ஈடுபட்டது. யாழ்ப்பாணத்தில் ஒரு நூல நிலையம் அமைக்க வேண்டும் என எண்ணிய செல்லப்பா பொதுமக்களிடமிருந்து நிதி திரட்டும் நோக்குடன் தமிழ், ஆங்கிலம் ஆகிய இரு மொழிகளிலும் துண்டுப் பிரசுரமொன்றை அச்சிட்டு விநியோகித்தார். யாழ்ப்பாணத்திற்கு ஒரு மத்திய இலவச வாசிகசாலை (A Free Certnal Library in Jaffna) என்ற தலைப்பில் துண்டுப் பிரசுரம் அச்சிடப்பட்டிருந்தது.

எழுதுவினைஞர் சங்கம், ஆசிரியர் சங்கம், ஓய்வூதியர் சங்கம் போன்றவற்றையும் செல்லப்பா அணுகினார். அத்துடன் தமிழ் மாவட்டங்கள் அனைத்துக்கும் தனது துண்டுப்பரசுரத்தை அனுப்பினார். கிராமங்கள் தோறும் வாசிகசாலைகள், யாழ்.நூல் நிலையம் இவற்றுக்கு மத்திய நாயகமாக விளங்க வேண்டும் என்பதே செல்லப்பாவின் நோக்கம். பூநகரி மக்கள் 40 ரூபா அன்பளிப்புச் செய்தனர். மொத்தம் 1184.22 சதம் சேர்ந்தது.

பணம் மட்டுமல்ல வீடு வீடாகச் சென்று நூல்களையும், ஓடுகளையும் அன்பளிப்பாகப் பெற்றுக்கொண்டார் செல்லப்பா. 09.06.1934 அன்று யாழ்.மத்திய கல்லூரியில் நூலக செயற்பாட்டுக் குழு அங்குரார்ப்பணக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் குமாரசாமி நீதவான் தலைவராகவும், ஐசாக் தம்பையா உப தலைவராகவும் தெரிவு செய்யப்பட்டனர். செல்லப்பா, சி.பொன்னம்பலம் ஆகியோர் இணைச்செயலாளர்களாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

## பொது மக்களிடம் பணம் சேர்த்து நூலகம் அமைக்கப்பட்டது

ஆஸ்பத்திரி வீதியில் கடையொன்றை வாடகைக்குப் பெற்று அக்கடையில் 01.08.1934 முதல் நூல் நிலையத்தை ஆரம்பித்தனர் நூலகக் குழுவினர். 844 நூல்களுடன் நூலகம் ஆரம்பிக்கப் பட்டது.

01.01.1933 முதல் நூலகத்தை யாழ்.நகரசபை (அப்போது மாநகரசபை அந்தஸ்துக் கிடைக்கவில்லை) பொறுப்பேற்றது. நூலகக் குழுவிடம் இருந்த பணமும் நகரசபையிடம் கையளிக்கப்பட்டது. யாழ்.பொதுநூலக வளாகத்தினுள் போல் அடிகளாருக்கும், தாவீது அடிகளாருக்கும் சிலை நிறுவியவர்கள் ஏனோ செல்லப்பாவைக் கைவிட்டு விட்டனர். தற்போது நூலகராகக் கடமையாற்றும் தனபாலசிங்கம் செல்லப்பாவின் புகைப்படத்தை அவரது குடும்பத்தாரிடமிருந்து பெற்று நூலகத்தில் வைத்துள்ளார்.

- தாண்டவன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உங்களின் தோல் சுருக்கமடைகிறதா?
இதோ பாவியுங்கள்...

**சந்தனாலேப்ப ஸ்கிரப் கிறீம்**



காய்ந்து இறந்த தோலை நன்கு நீக்கி தூய்மை யாக்கும் தோலுக்கு மருத்துவ போசாக்கை அளித்து சருமத்தை நோயற்றதாக்கி பொன்னிறமேற்றி அழகிய இளமைத்தோற்றத்தைப் பெற்றுத்தரும்.

**சந்தனாலேப்ப ஸ்கிரப் கிறீம்**
**Chandanalepa Scrub Cream**

100% herbal

'சிவா நறுமணப் பூங்கா'
288, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
(சகல பார்மசிகளிலும் பெற்றுக்கொள்ளலாம்).

MANUFACTURED BY: SAN JEEWAKA AYURVEDIC PRODUCTS
VEYANGODA, SRI LANKA. AYY PRO NO: REG NO. A/L 250.


## வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்



தோற்றம்
07.02.1940

மறைவு
20.03.2009

கடந்த 20.03.2009 வெள்ளியன்று சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவி

அமரர்
**சின்னத்துரை நவமணி**

அவர்களின் வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் இன்று (19.04.2009) ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறவுள்ளதால் அத்தருணம் எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் வருகைதந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து சிறப்பிக்கும் வண்ணம் கேட்டுக் கொள்கின்றோம்.

அத்துடன் எமது குடும்பத் தலைவியின் மரணச்செய்தி கேட்டு உடன் வருகைதந்து கிரியைகளில் உதவிய அனைவருக்கும் தந்தி, தொலைபேசி மூலமும், நேரிலும் வந்து இரங்கல் தெரிவித்தவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

உசன், மிருசுவில். (சி/558110) குடும்பத்தினர்.


**இறைச்சிக்கோழி விற்பனை**

புறொயிலர், கல்பேட் தினமும் சுத்தம் செய்து குறைந்த விலையில் பெற்றுக்கொள்ளலாம்.

**நல்லூர் பாம் சென்ரர்**
19, முருகேசர் லேன், நல்லூர்.

**தையல் வேலை தெரிந்தவர்கள் தேவை**

ஆண்களுக்கான ஆடைகள் தைப்பதில் அனுபவம் வாய்ந்தவர்கள் நான்கு பேர் தேவை.
ஊதியம் பேசித் தீர்மானிக்கப்படும்.

தொடர்பு: சுபாஸ் தையலகம்
பலாலி வீதி, உரும்பிராய்
(இந்துக் கல்லூரி மைதானம் அருகில்).
T.P.: 077 6391346, 077 2298909

**மாங்கல்யா திருமண சேவை**

உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் வேலை செய்யும் இருபாலாரது குறிப்புகள் முழுவிவரங்களுடன் உண்டு. நம்பிக்கையான, திருப்தியான, துரிதமான சேவை. ஜாதக குறிப்புகள் எம்மிடம் சகல இடங்களிலும் இருந்து கிடைத்த வண்ணம் உள்ளன. தேர்விற்கு சகல நாள்களிலும் ஒரு மணிக்குப் பின் நேரில் தொடர்புகொள்ளலாம்.

தொ.பே.: 021 222 6043 மொ.இல.: 0771386846

கு.திருவிளங்கம்,
90, சட்டநாதர் கோயில் வீதி, நல்லூர் வடக்கு.

**இறைச்சிக்கோழி விற்பனை**

நிறைகூடிய தரமான புறொயிலர் இறைச்சிக் கோழிகள் விற்பனை செய்யப்படுகின்றன.

**செம்மணி பாம்**
77/3, செம்மணி வீதி, நாயன்மார்கட்டு.

**திருமண சேவை**

சுலபமான வாழ்க்கைத்துணை தெரிவுக்குச் சுய தெரிவு முறையே! சுயதெரிவு முறை பற்றிய வரன்முறையைத் தெரிந்திட திங்கள், புதன், வெள்ளி மாலை வேளைகளில் மூத்த புகழ்பூத்த - சுயதெரிவுமுறை முன்னோடி- தனிமனித நிறுவுநர் - சர்வதேச சகலருக்குமான திருமண ஆற்றுப்படுத்துநர் குரும்பசிட்டியூர், மாயெழு வேலமுதனுடன் தொடர்புகொள்க.

கொழும்பு நேரடித் தொலைபேசி:
2360488, 2360694, 4873929.

**HOUSE FOR RENT**

வெள்ளவத்தையில்
வீடு/அறைகள்
வாடகைக்குண்டு

071 5175957, 2366544


## ENGLISH LANGUAGE DEVELOPMENT PROGRAMME

- A three-month English course for School leavers/ Job seekers
- The Course content comprises the four skills in the English Language - Listening, Speaking, Reading & Writing
- Evaluation & Award of certificate at the end of the programme

| | |
|---|---|
| Commencement: | 22nd April 2009 |
| Lessons on Weekdays from | 3.30-4.30 p.m. |
| Closing Date: | 21st April 2009 |

***English Language Teaching Unit***
***St John's College, Jaffna.***

## அம்மாவின் நினைவுடன் ஆறாம் ஆண்டில்



| பிறப்பு | இறப்பு |
|---|---|
| 15.01.1944 | 19.04.2003 |

திருமதி **சிவநாயகி கந்தசாமி (கிளி)**

திதி: அபரபக்க திருதியை (12.05.2009)

பண்பின் பிறப்பிடமாய், பாசத்தின் உறைவிடமாய், குடும்பத்தின் ஒளி விளக்காய் திகழ்ந்த எங்கள் தெய்வமே, எங்களை விட்டு விண்ணுலகு சென்று ஆண்டுகள் ஆறு கடந்த பின்பும் உங்கள் நினைவுகள் எம்மை விட்டு என்றும் நீங்காது. உங்கள் ஆத்மா சாந்தி அடையப் பிரார்த்திக்கின்றோம்.

உங்கள் பிரிவால் துயருறும்: கணவர், பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள் - சாம்பவி, சாக்தீபன்.

செங்குந்தா வீதி, திருநெல்வேலி கிழக்கு, யாழ்ப்பாணம்.

# 31ஆம் நாள் நினைவலைகள்



அமரர்
**வரப்பிரகாசம் செபஸ்தியாம்பிள்ளை**
(அந்தோனிப்பிள்ளை)

**தோற்றம்: 10.10.1940 மறைவு: 20.03.2009**

அதிகாலை வேளை பிறந்தது
பறவைகளின் சங்கீதத்தோடும்
ஆலயங்கள் தோறும் மணியோசை கேட்கவும்
உலகமே விடிந்தது - ஆனால்
உங்கள் வீட்டிலோ இடி விழுந்தது
தங்களின் பிரிவுச்செய்தி கேட்டு...

எனக்கும் தந்தைக்கு தந்தையாக இருந்து
பற்பல அறிவுரைகள் தந்து வழிகாட்டினீரே!
ஈரெட்டு வருடகாலம் எனதும் - தர்சியினதும்
நட்புத் தொடர அன்பும் பாசமுமாக இருந்தவரே!
ஏன் உங்களுக்கு இவ்வளவு அவசரம்?
உங்கள் அன்பான மனைவி - பிள்ளைகள்
கதற எங்கு சென்றீரோ ஐயா!
உங்களின் பிரிவு என்னை என்றுமே
மறக்கமுடியாமல் கலங்க வைத்துள்ளது - ஏனெனில்
எனது பிள்ளை உங்களின் பிரிவு நாளில் அவதரித்து
என்னை நிமிடத் துளியிலும் நினைவை ஊட்டிக் கொண்டிருக்கிறாள்
எங்கிருந்தாலும் என்னையும் உங்கள்
குடும்பத்தையும் ஆசீர்வதிக்க வேண்டும்
என்றுமே உங்களின் ஆத்மா சாந்தியடைய கடல் கடந்து
கனடாவில் வசிக்கும் உங்கள் மகள் வேண்டிக்கொள்கின்றேன்.

பிரியதர்சினி.
சுண்டிக்குளி? (84457)

தகவல்:
இராசகுமாரி (பவா)
ஜெயராஜா (கனடா).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கோடை மழை

## சிறுகதை

இலங்கை 'மாப்பை' விரித்து வைத்து அதன் தலையில் யாழ்ப்பாணத்தைத் தேடிப் பிடித்து,சிகப்பு பென்சிலால் பெரியதொரு புள்ளி போட்டு, 'இதுதான் கொக்குவில்' என்று பீற்றிக் கொள்ளும் அளவிற்கு பிரபலமானதல்ல எங்கள் ஊர்.

ஆனால் 'மாப்பை' எடுத்துப் பிரிக்காமல்,பென்சிலால் கோடு இழுக்காமல், இது கொக்குவில் என்று சொல்லாமல் விடக் கூடிய அளவிற்குப் பிரபலமற்றது என்றும் கூறிவிட முடியாது.

அர்த்த நாரீசுவரர் போன்று,கொக்குவில், ஒரு பக்கத்திலும் சாயாமல், தனித்து, தனக்கென்றொரு நாகரிகம் வைத்துக் கொண்டு இருப்பதாகத்தான் சொல்ல வேண்டும்.

கொக்குவில் என்றவுடன் சிலருக்கு 'கானா சே' னாவின் கோடா போட்ட நல்ல பளபளப்பான நாட்டுப் புகையிலைச் சுருட்டு ஞாபகத்திற்கு வரலாம்; சிலருக்கு முறைப்படி காய்ச்சிய காரசாரமான கள்ளச் சாராயத்தின் நெடி நினைவுக்கு வரலாம். இது இரண்டிலும் அனுபவமில்லாத துர்ப்பாக்கியசாலிகள் பழைய பிரபல கொலைக் கேஸுகள் சிலவற்றை ஞாபகத்துக்குக் கொண்டு வந்து அனுபவித்து ரசிக்கலாம்.

ஆனால் கொக்குவிலுக்கு விஜயம் செய்த யாராவது அது மேற்கூறிய ஒன்றிலேதான் பிரபலமாயிருக்க வேண்டும் என்று கூறினால், அவருக்குக் கண் பார்வை 'கிராமப்போன் பிளேட்டா, அல்லது கிடாரச் சட்டியா' என்று வித்தியாசம் கண்டுபிடிக்கும் அளவுக்காவது இருக்குமா என்பது சந்தேகந்தான்.

ஒழுங்கைகளுக்குப் பேர் போனது கொக்குவில். அவற்றில்தான் எத்தனை ரகம்? வண்டிப்பாதை, மணல்பாதை, மக்கி ரோட்டு, கல்லு ரோட்டு, முடுக்குத் தெரு, மூலைத் தெரு, குச்சு ஒழுங்கை, குறுணி ஒழுங்கை, ஒற்றையடிப்பாதை, ஒன்றரையடிப்பாதை இப்படியாக இன்னும் பலப்பல.

இப்படிப்பட்ட ஒழுங்கைகளோ, புழுதிக்குப்பேர் போனவை. அது மாத்திரமா? பிறந்த நாள் தொடங்கி மேற்கூறிய ஒழுங்கைகளோடு பழகியவர்களையே சிற்சில சமயங்களில் இவை ஏய்த்து விடுவதும் உண்டு. கொஞ்சம் அசந்து போனால் சரி, பழையபடி புறப்பட்ட இடத்துக்கே கொண்டு போய்ச் சேர்க்கும் அசாத்தியத் திறமை படைத்தவை.

இந்த ஒழுங்கைகளில் சைக்கிள் சவாரி செய்வதற்கு, அபூர்வப் பழக்கம் வேண்டும், கொக்குவிலைப் பிய்த்துக் கொண்டு போகும் கே.கே.எஸ்.ரோட்டிலிருந்து இறங்கிய ஒருவர், புகையிலைக் காம்பு நெட்டி போல் பின்னிப் பின்னிக் கிடக்கும் இந்த ஒழுங்கைகள் வழியாகப் பிரயாணம் செய்து, மறுபடியும் பலாலி ரோட்டில் மிதிப்பாரானால், அவர் புறப்பட்ட முகூர்த்தத்தில் ஒரு சுவீப் டிக்கெட் எடுத்திருக்கலாம் என்று துணிந்து கூறலாம்.



இப்படிப்பட்ட கிராமத்தில் சுரம் வந்தவனுடைய ' டேம்பரேச்சர் சார்ட்' போல இடைக்கிடை ஏறி இறங்கும் நாகரிகத்தில், சமீபத்தில் கொழும்பில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட நாகரிகமானது ஒரு திடீர் வளர்ச்சியை ஏற்படுத்தியிருக்கிறது. ஆனாலும் பொதுவாகப் பெண்களுடைய நாகரிகமானது, பின்னேரம் நாலு மணியானதும் சேலையை களைந்துவிட்டு 'கிமோனோ' அணிந்து படலைக் காலைப் பிடித்துக் கொண்டு நிற்பதும், வெள்ளைக்கால் கந்தையருடைய படலையடியில் யாராவது 'இளவட்டம்' சைக்கிளில் திரும்புவது தெரியத் தொடங்கும் போதே, உள்ளே ஓடி ஒளிந்து கொள்வதும் என்ற அளவிற்கு வளர்ந்திருக்கிறது.

அவசரகாலச் சமயத்தில் சட்டத்தை மீறி, மதகுகள் மீது குந்தியபடியே அரட்டை அடிக்கும் ஆண்கள், அரை மைல் தூரத்தில் பட்டாளத்து 'வான்' முகப்பு லைட் மின்மினி போலத் தெரியும் போதே அந்தர்த்தியானமாகும் அளவிற்கு வீரமும், தைரியமும் படைத்திருந்தார்கள்.

குழந்தைகளைப் பற்றியோ கூறத் தேவையில்லை.

கர்ப்பத் தடையைப் பற்றிய ஞாபகமே இல்லாமல் தாராளமாகப் பெற்றுப் போட்ட குழந்தைக் கணங்கள் ஒழுங்கைகள் எங்கும் நிறைந்திருக்கும்.

தாய்மார்களுடைய கையில் ஆறு மாதக் குழந்தை ஒன்று இருக்கும்போதே, வயிற்றில் இரண்டு மாதத்தில் ஒன்று விண்ணப்பித்துக் கொண்டு இருக்கும். ரெயில்வே லைன் கரைதான் குழந்தைகளுடைய விளையாட்டு மைதானம்.

தண்டவாளத்தின் மேல் வரிசையாக சோடா மூடியை அடுக்கிவிட்டு, 'யாழ்தேவி' வரும் போது ஒளிந்திருந்து வேடிக்கை பார்ப்பதுடன் அவர்களுடைய ஆரம்ப விளையாட்டு முடிவடைந்து விடும்.

* * *

கொக்குவிலுக்குப் புதிதாக வரும் வாசகர்களுக்கு, கொக்குவில் எங்கே ஆரம்பமாகிறது என்ற சந்தேகம் எழலாம்.

காலை 6.20 இற்கு யாழ்ப்பாணத்தை விட்டுப் புறப்படும் கொழும்புப் புகைவண்டியில் பிரயாணம் செய்திருக்கும் அன்பர்கள், புகைவண்டி, அடுத்துவரும் சுடலை ஒன்றைக் கடக்கும்போது, நெடிதுயர்ந்த பனைகளின் பின்னால் சுகாதார இன்ஸ்பெக்டரை நாளதுவரை ஏய்த்து வந்த நூற்றுக் கணக்கான தலைப்பாகைகள் மிதப்பதைக் காணத் தவறியிருக்க மாட்டார்கள்.

சந்தேகமின்றி, கொக்குவில் அங்கேதான் ஆரம்பமாகிறது,

கொக்குவிலின் மேலான கைத்தொழில் சுருட்டுத்தொழில்தான் என்றாலும், சுருட்டுத் தொழில் செய்து, பணக்காரரானவர்களை விரல் விட்டு எண்ணுவதானால் கைகளே தேவையில்லை.

கல்வியும் இதே நிலைதான்.

'கிளறிக்கல்' ஒவ்வொருத்தருடையதும் மகோன்னதமான லட்சியம். தட்டித் தவறி யாராவது ஒருத்தர் எஸ்.எஸ்.சி.பாஸ் செய்து விட்டால், நல்லூர் கந்தசாமியாருக்கு ஒரு சங்கரார்ச்சனை லாபம் என்று அர்த்தம்.

ஆண்களின் கதியே இப்படி என்றால், பெண்களைப் பற்றிக் கூறவேதேவையில்லை.

குறைந்தது நாலு பிழைகளுடன், விலாசதாருக்குக் கிடைக்காதவகையில், ஆங்கிலத்தில் தந்தி எழுதும் அளவிற்கு, அவர்களுக்கு அநேகமான கல்வி அறிவு இருக்கிறது.

இருந்தும் என்ன? நாகரிகக் கண்கொண்டு பார்க்கும் பேர்வழிகள் கொக்குவிலின் பிரபல்யத்தை மாத்திரம் எப்போதும் ஒப்புக் கொண்டதே கிடையாது.

* * *

சின்னாச்சிக் கிழவி, ஒன்றரை சஷ்டியப்த பூர்த்தி மதிக்கக் கூடிய தோற்றம், எனினும் அந்த நாள்களில் ஆயிரம் புகையிலைக் கன்றுக்கு பட்டைபிடித்த தேகக் கட்டு இன்னமும் குலைந்துவிடவில்லை. தொழில் ஊர் வம்பு; 'பார்ட் டைமாக' பலாவிலைக் குத்தல். 'தொண தொணப்பு', 'நச்சரிப்பு', கருமித்தனம், 'பஞ்சம் கொட்டுதல்' போன்ற கிழவிகளுக்கு இயல்பான லட்சணங்களுக்குக் குறைவில்லை.

'கோச்சி வரும், கவனம்' எச்சரிக்கையை லட்சியம் செய்யாமல் எதிரே வரும் ரயில்வேக் கடவையைக் கடந்து இடது சந்தியில் திரும்பினால், இங்கு ஆர்மோனியத்தை 'றிப்பேர்' செய்யப்படும் என்ற போர்டு பலகை ஒன்று பயங்கரமாகத் தமிழுக்கு றிப்பேர் பார்த்தபடியே தொங்கும்.

அதற்கு எதிர்ப்புறம் ஒரு குச்சு ஒழுங்கை. பகல் 12 மணிக்குக் கூடத் தனியாகப் போவதாக இருந்தால் நெஞ்சம் 'படக் படக்' என்று இடிக்கும். ஜனப்புழக்கம் இல்லாத படியால் பாதை நடுவே அங்கங்கே இக்கிரியும் நாகதாளியும் சுகம் விசாரிக்கும்.

தைரியத்தை வரவழைத்துக் கொண்டு மேலும் போனோம் என்றால் பிரமாண்டமான கள்ளி மரம் கொக்குவில் பசுக்களின் அன்றைய சந்ததி விருத்தியை உமல்களாகக் காய்த்து கணக்குக் காட்டிக்கொண்டிருக்கும்.

கைக்குட்டை வைத்திருப்பவர்கள் ஒரு கையால் மூக்கிற்கு அபயம் அளித்தபடி, மறுகையால் உயிரைப் பிடித்துக் கொண்டு, இன்னும் பத்தடி போவார்களானால் 'அட்டாளை முருகேசர்' கொலையுண்ட புனித ஸ்தலம் தென்படும். இந்த மேட்டு நிலத்தில் நின்று கிழக்குப் பக்கமாகப் பார்த்தால் தெரிவதுதான் கிழவியின் பொத்தல் குடிசை.

ஆனால் இப்போது அங்கே இந்த வழியாகப் போக முடியாது. புளியமர உரிமை வழக்கொன்றில் தாய்க்கும் பிள்ளைக்கும் ஏற்பட்ட தகராறில் 'கவுண்மேந்து' தலையிட்டு குறுக்கு வேலி ஒன்று தற்காலிகமாகப் போட்டிருப்பதால், நேயர்கள் தயவுசெய்து சிரமத்தைப் பாராது, வந்தவழியில் திரும்பி, கிழவி வழக்கமாகப் போகும் பிள்ளையார் கோயில் ஒழுங்கையால் வருவார்களாக!

எலக்சன் சீசனில் யாரோ ஒட்டிவிட்ட நோட்டிஸ் ஒன்று இன்னமும் கிழவியின் படலையில் விசுவாசத்துடன் ஒட்டிக் கொண்டிருந்தது.

அந்தப் படலையை இழுத்துப் பிடித்தபடி பாறாங்கல் ஒன்று, கையை விட்டவுடன் படலை படார் என்று சத்தத்துடன் மோதிக் கொள்ளும். ஆனால், இதில் ஆச்சரியம் என்னவென்றால் இதைத்தான் ஆங்கிலத் தில் ''ஆட்டோமெற்றிக் ஷட்டர்'' என்று கூறுவார்கள் என்பது கேவலம், கிழவிக்கோ அல்லது படலைக்கோ தெரியாததுதான்!

*(14 ஆம் பக்கம் பார்க்க....)*



ஈழத்துப் புனைகதைத் துறையில் அ.முத்துலிங்கம் என்ற பெயரால் அடையாளப்படுத்தப்படும் அப்பாத்துரை முத்துலிங்கம் யாழ்ப்பாணம், கொக்குவிலைப் பிறப்பிடமாகக் கொண்டவர்.

மறைந்த பேராசிரியர் க.கைலாசபதியால் எழுத்துலகுக்கு அறிமுகப்படுத்தப்பட்ட இவர் 1960 களின் ஆரம்பத்தில் தரமான சிறுகதைப் படைப்பாளியெனப் பேசப்பட்டவர்.

நீண்டகால இடைவெளிக்குப் பின்னர், 1995 ஆம் ஆண்டிலிருந்து சிறுகதைகள், கட்டுரைகள், மொழி பெயர்ப்புகள், நேர்காணல்கள், புத்தக மதிப்புரைகள், நாடக, சினிமா விமர்சனங்கள் எனப் பல்துறைகளிலும் நிறையவே பங்களிப்பு வழங்கி வருகிறார்.

இவரது சிறுகதைகள் இலங்கையிலும் தமிழகத்திலும் வெளியாகும் பத்திரிகைகள் மற்றும் சஞ்சிகைகள் நடத்திய சிறுகதைப் போட்டிகளில் பரிசில்கள் பெற்றுள்ளன. அது மட்டுமன்றி, இவரது சிறுகதைத் தொகுப்புக்கள் இலங்கை சாகித்திய மண்டலப் பரிசு உட்பட மற்றும் பல பரிசுகளைப் பெற்றுள்ளன.

அக்கா - (1964), திகடசக்கரம் - (1995), வம்சவிருத்தி - (1996), வடக்குவீதி - (1998), மகாராஜாவின் ரயில்வண்டி - (2001) என்பன இவரது சிறுகதைத் தொகுப்புக்களாகும்.

இவரது சிறுகதைகள் மட்டுமன்றி கட்டுரைகள், மொழிபெயர்ப்புக்கள் என்பனவும் தொகுப்புக்களாக வெளிவந்திருக்கின்றன.

கொழும்புப் பல்கலைக்கழக விஞ்ஞானப் பட்டதாரி, இலங்கைப் பட்டயக் கணக்காளர் மற்றும் இங்கிலாந்து முகாமைத்துவக் கணக்காளர் போன்ற உயர் பட்டங்களுக்கும் சொந்தக்காரர்.

ஏறத்தாழ இருபது ஆண்டுகள் இவர் உலக வங்கியிலும், ஐ.நா.சபையிலும் முக்கிய பதவிகளை வகித்து ஓய்வுபெற்றவர். தற்போது கனடாவில் வாழ்ந்து வருகிறார்.

'ஒரு கூடைக் கொழுந்து' சிறுகதைகள் தொகுதியில் இடம்பெற்றுள்ள அவரது 'கோடை மழை' சிறுகதை இவ்வார இலக்கியப் பொழிலை அலங்கரிக்கிறது.

# உருவ அழகும் உள்ளத்துத் தூய அழகும் ஒரு சேர அமைதலே பெண்ணுக்கு என்றும் மாட்சிமை தரும்

தமிழுக்குப் பெருமை தேடித் தரும் இலக்கியங்களில் ஒன்று புறநானூறு, சங்க இலக்கியமாகிய இந் நூல், அரசரது கொடையையும் வீரத்தையும் பாடுவதையே நோக்கமாகக் கொண்டது. அதே நேரத்தில் மனித வாழ்வுக்கு வேண்டிய பண்பு மணிகள் அனைத்தையும் வழங்கும் களஞ்சியமாகவும் உள்ளது.


'மனைக்கு விளக்காகிய வாணுதல் கணவன்' என்பது புறநானூற்றில் ஒரு தொடர். ஒரு பெண்ணை அறிமுகம் செய்யும் போது இவள் இவனுடைய மனைவி என்று அறிமுகம் செய்வது உலக வழக்கம். ஆனால் ஆடவன் ஒருவனைப் பொது இடத்தில் அறிமுகம் செய்யும் போது இவன் யார் தெரியுமா? இவன்தான் இத்தகைய சிறப்பு வாய்ந்த பெண்ணின் கணவன் என்று பெண்ணுக்கு முதன்மை கொடுப்பதில்லை.

'பெண்ணிற் பெருந்தக்க யாவுள' என்ற திருவள்ளுவரும் சங்கப் புலவர்கள் பலரும் பெண்ணுக்குச் சிறப்புக் கொடுத்திருக்கிறார்கள். 'வண்டார் கூந்தல் ஒண்டொடி கணவ' என்றும் பெண்ணைச் சிறப்பித்துப் பாடிய பாடல்கள் சங்க இலக்கியத்தில் உண்டு.

இரவு நேரத்தில் ஒருவர் வீட்டிற்குள் செல்கிறார். சுவரில் அழகிய சித்திரங்கள் தீட்டப் பெற்றிருந்தன. வேலைப்பாடமைந்த சிற்பங்கள் அங்கு இருந்தன. அலங்கரிக்கப் பெற்ற மேசைகளும் மேசைகளுக்கு அருகில் பெரும் தொகையான நூல்ளைக் கொண்ட அலுமாரிகளும் இருந்தன. ஆனால் விளக்கு மட்டும் வீட்டில் இல்லை. இதனால் வீட்டுக்குள் சென்றவருக்கு இவை இருந்தும் இல்லாதவையாகவே இருந்தன.

ஒருவனிடம் செல்வம் இருக்கலாம், கல்வி இருக்கலாம்,வேறுபல வளங்களும் இருக்கலாம். ஆனால் மாட்சிமைப் பட்ட மனைவி வீட்டில் இல்லையானால் இவையனைத்தும் விளக்கில்லாத வீட்டில் இருந்த பொருள்கள் போலவே தெரியாமற் போய்விடும். 'உள்ளதென் இல்லவள் மாணாக்கடை' என்றார் வள்ளுவர். எனவே தான் மனைவியை மனைக்கு விளக்கு என்றார் புறநானூறுற்றுப் புலவர்.

பெண் கவிதை போன்றவள். கவிதை உருவத்தினாலும் அழகியதாக இருத்தல் வேண்டும். அது கொண்டிருக்கும் கருத்தினாலும் அழகியதாக இருக்க வேண்டும். பெண்ணும் உருவத்தினாலும் அழகியவளாய் இருத்தல் வேண்டும். உள்ளத்தினாலும் அழகியவளாய் இருத்தல் வேண்டும். எனினும் உள்ள அழகுக்கே புறநானூற்றுப் புலவர்



முதலிடம் கொடுக்கிறார்.

அதனால் உள்ள அழகை முதலிற் குறிப்பிட்டு மனையில் ஒளி செய்யும் விளக்குப் போல மாட்சிமைப்பட்ட குணநலன்களால் புகழைச் செய்பவள் என்று கூறி, உருவ அழகும் உடையாள் என்பதை வாணுதல் என்றார். புலவர் சுருக்கமாக ஒளி பொருந்திய நெற்றி என்று கூறினாலும் அவரது கவி உள்ளம், ஒளிபொருந்திய நெற்றிக்கு ஏற்றமுகம், விழி, இதழ்கள்,கூந்தல்,உடல் அமைப்பு அனைத்தையுமே குறிப்பிடுகிறது.

கணவன் எத்தகைய சிறப்புடையவனாயினும்,விருந்தை உபசரிக்கவும், கருத்தொருமித்து ஆதரவுபடும் இன்பம் எய்தவும், தித்திக்கும் மழலை மொழி கேட்கவும், மனைக்கு விளக்காகிய மனைவி இல்லையெனின் வாழ்க்கை இலட்சியமற்றதாகிவிடும்.

எனவே மனைக்கு விளக்காகிய வாணுதல் என்பது மனையில் ஒளி செய்யும் விளக்குப் போல மாட்சிமைப் பட்ட குணநலன்களால் புகழாகிய ஒளியைச் செய்யும் அக அழகும், அதே நேரத்தில் கணவனின் கண்ணுக்கு இனியவளாகிய புற அழகும் உடைய பெண் எனப் பொருள் தருகின்றது. ✱

**புலவர்.ம.பார்வதிநாதசிவம்**

*(இலக்கியத்தின் இனிய தொடர்)*

ஆண்டுமோ சர்வதாரி
அய்ய, நீ வந்த வேளை...
வேண்டினோம் கடவுள்தன்னை
விடியுமோ பொழுது என்று....
தோன்றலை நிலவு அப்பா
துயரதே நீண்டு நாளும்....
மாண்டதும் மறைந்ததும் தான்
மாந்தராய்க் கண்டு நின்றோம்....
வேண்டிடாத் தெய்வமில்லை - எம்
வேதனைக் களவுமில்லை....
நீண்டதோர் அமைதி வேண்டும்
நிமிர்ந்து நாம் நடக்க வேண்டும்....

வாட்டமோ இல்லா வாழ்வு
வந்தெமைத் தழுவவேண்டும்....
வருக நீ விரோதி ஆண்டே
வாய்த்த பேர் பயமதாச்சு...
பேரதை வைத்து நாமும்
பெரிய! நும் குணத்தை நாமும்
பார்த்திடக் கூடும் தானோ....?
பயந்திடத் தேவைதானோ...?
அய்ய, நீ விரோதி ஆண்டே
அப்பனே உன்னை நம்பி....
கைபல குவியுதப்பா
கர்ணனாய்த் தோள்தந்தெம்மை....
உய்ய நீ வைத்திடாயோ
உனை நினைந் தாறநல்ல
வேளைகொண் டோடிவாராய் - நாம்
விரும்பிடும் தவமாய் வாராய்...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 1915 சிங்கள - முஸ்லிம் கலவரத்தைக் கட்டுப்படுத்தியதில் சேர்.பொன்.இராமநாதனின் பங்களிப்பு வரலாற்றுப் பதிவுகள்

*இந்நாட்டின் அரசியல் வரலாற்றில், நாட்டுக்கும், பெரும்பான்மை சிங்கள மக்களுக்கும் நன்மைபயக்கத்தக்க செயற்பாடுகளில் தமிழ்த் தலைவர்கள் கணிசமான பங்களிப்பை வழங்கியுள்ளனர் என்பதனை வரலாற்றுத் தகவல்கள் மூலம் எடுத்துக்காட்ட விழையும் வகையிலான இக் கட்டுரைத் தொடரின் இரண்டாவது பகுதி இதுவாகும்.*

### இலங்கையரின் பிரதிநிதியாக இராமநாதன்

பிரித்தானியரின் ஆட்சியின் கீழ் சட்ட சபையில் ஒவ்வொரு இனத்திற்கும் ஒவ்வொரு பிரதிநிதி இருந்தனர். சிங்களவர்களின் பிரதிநிதிகள் இரண்டுபேர், (கண்டிச் சிங்களவர்களின் பிரதிநிதி ஒருவர், கரையோரச் சிங்களவர்களின் பிரதிநிதி ஒருவர்) தமிழர்களின் பிரதிநிதி, முஸ்லிம்களின் பிரதிநிதி, பறங்கியரின் பிரதிநிதி, வெளிநாட்டவர்களின் பிரதிநிதி என ஒவ்வொரு இனத்திற்கும் ஒவ்வொரு பிரதிநிதி எனச் சட்டசபையில் அங்கம் வகித்தனர்.

இவர்களைவிட முழு இலங்கைக்குமான படித்த இலங்கையரின் பிரதிநிதி என்ற பெயரில் (Educated ceylonese representative) ஒருவரைத் தெரிவுசெய்ய ஆட்சியாளர்கள் தீர்மானித்தனர்.

இப்பதவிக்கு இராமநாதனைப் போட்டியிடுமாறு வலியுறுத்தி மொல்லிகொட, டொனால்ட் ஒபயசேகர ஆகியோர் உட்பட வேறு சிங்களத் தலைவர்களும் இணைந்து 1910 ஆம் ஆண்டு மே மாதம் 20 ஆம் திகதியன்று, இராமநாதனுக்குக் கடிதம் எழுதினர். இராமநாதன் அப்போது இந்தியாவில் இருந்தார்.

மார்க்கஸ் பெர்னாண்டோ என்ற சிங்கள மருத்துவர் இராமநாதனை எதிர்த்துப் போட்டியிட்டார். இவர் அப்போது இருந்த பிரிட்டிஷ் ஆளுநரின் (Governor) குடும்ப மருத்துவர் என்பது குறிப்பிடத்தக்கது. மார்க்கஸ் பெர்னாண்டோவின் நியமனப் பத்திரத்தை வழிமொழிந்தவர் மானிப்பாயைச் சேர்ந்த உவில்லியம் மேதர் ள்ன்பவராவார். சிங்களத் தலைவர்கள் இராமநாதனுக்கு ஆதரவாகப் பிரசாரம் செய்து கொண்டிருக்க யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த வில்லியம் மேதர், ஹென்ஸ்மன் ஆகியோர் இராமநாதனுக்கு எதிராகப் பிரசாரம் செய்தனர்.

உதயதாரகை, கத்தோலிக்கப் பாதுகாவலன் போன்ற பத்திரிகைகளும் கிறிஸ்தவரான மார்க்கஸ் பெர்னாண்டோவை வெற்றியீட்டச் செய்யும் நோக்குடன் இராமநாதனுக்கு எதிராகப் பிரசாரம் செய்தன.

ஹெக்டர் ஜெயவர்த்தனா இராமநாதனுக்கு ஆதரவாக இடம்பெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டமொன்றில் ஆற்றிய உரையிலிருந்து ஒரு பகுதி கீழே தரப்படுகிறது.

''எமக்கு ஒரு அனுபவசாலி தேவை, அதற்கு இலங்கையில் பொருத்தமான கற்றறிந்த பிரமுகர் இராமநாதன்தான். அரசியல் அதிகாரங்கள் பற்றி வாதிடக்கூடிய ஒருவர் எமக்குத்தேவை. இரு வேட்பாளர்களையும் நாம் எதுவிதத்திலும் ஒப்பிட முடியாது. இருவருக்குமிடையே மலைக்கும் மடுவுக்குமிடையிலான வேறுபாடு காணப்படுகிறது. (Here is a pigmy Contesting against a Political giant)

1911 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 13 ஆம் திகதியன்று தேர்தல் நடைபெற்றது. இலங்கையில் நடைபெற்ற முதலாவது தேர்தல் அதுவே ஆகும். இத்தேர்தலில் தேர்ந்தெடுக்கப்பட்ட சிலரே வாக்களித்தனர். அதுவோர் சர்வசன வாக்கெடுப்பு அல்ல.

இராமநாதன் 664 மேலதிக வாக்குகளால் வெற்றியீட்டினார். திருகோணமலை, முல்லைத்தீவு மாவட்ட வாக்குகள் எண்ணப்படவில்லை. இவற்றையும் சேர்த்திருந்தால் இராமநாதன் ஆயிரம் மேலதிக வாக்குகளால் வெற்றியீட்டியிருப்பார் எனக் கருதப்பட்டது.

### சிங்கள - முஸ்லிம் கலவரம் 1915

1915 ஆம் ஆண்டு இடம்பெற்ற சிங்கள - முஸ்லிம் கலவரத்தின் போது இராமநாதன் சிங்களவர்களுக்குச் சார்பாக நடந்து கொண்டதாக முஸ்லிம்கள் குற்றம் சாட்டுகின்றனர். ஆனால் இராமநாதன் நடுநிலையாகச் செயற்பட்டுள்ளார் என்பதை அவரது வாழ்க்கை வரலாற்றிலிருந்து அறிந்து கொள்ள முடிகிறது. பெரஹறா ஊர்வலத்திலிருந்தே கலவரம் தொடங்கியது. குருநாகல் கண்டி வீதியால் ஊர்வலம் வந்து கொண்டிருந்தபோது, தெலியகொம்முவ என்ற இடத்தை ஊர்வலம் சென்றடைந்த வேளையில் முஸ்லிம்கள் ஊர்வலத்தின் மீது தாக்குதல் நடத்தியதுடன் புத்தர் சிலையையும் சேதப்படுத்தினர். இதனையடுத்து பதின்னான்கு முஸ்லிம்கள் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர்.1915 ஆம் ஆண்டு மே மாதம் 28 ஆம் திகதியன்று பெரஹர ஊர்வலம் கண்டி ராஜ வீதியால் (King street) காசிள்ஹில் (Castle hill) வீதிக்குத் திரும்பியபோது பள்ளிவாசலுக்குள் இருந்த ஆப்கானியர்களும் முஸ்லிம்களும் ஊர்வலத்தின்மீது தாக்குதல் நடத்தினர். ஊர்வலக்காரர்கள் மசூதி மீதும், முஸ்லிம் கடைகள் மீதும் தாக்குதல் நடத்தினர். கொழும்பிலிருந்து வந்துள்ள முஸ்லிம் கள் தலதா மாளிகை மீது தாக்குதல் நடத் தப்போகிறார்கள் என்ற வதந்தி கிராமங்களில் பரவத்தொடங்கியது. முஸ்லிம் வர்த்தகர் ஒருவர் தனது கடைக்கு முன்னால் கூடிய காடையர் கூட்டத்தின்மீது மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் சிங்கள இளைஞர் ஒருவர் காயமடைந்து பின்னர் உயிரிழந்தார். பொலிஸாரின் முன் நிலை யிலேயே இச்சம்பவம் இடம்பெற்றது. எனினும் பொலிஸார் எதுவித நடவடிக்கையும் எடுக்கவில்லை. பொலிஸாரின் தாக்குதலில் பல சிங்களவர்கள் காயமடைந்தனர். அறுலுகமவில் முஸ்லிம் கடைகள் உடைக்கப்பட்டன. திவுலப்பிட்டியவில் லியோ பெர்னாண்டோ என்பவர் பொலிஸாரால் கொல்லப்பட்டார். சைமன் பெரேரா என்ற பொலிஸ் சப் இன்ஸ் பெக்டர் முஸ்லிம்களால் கொல்லப்பட்டார். வட கிழக்கு மற்றும் மலையகம் தவிர்ந்த பகுதிகளில் கலவரம் பரவியது. இக்கலவரத்தில் மொத்தம் 68 பேர் கொல் லப்பட்டனர்.


டொனால்ட் ஒபேசேகரா

### சிங்கள அகதிகளுக்கு உணவளித்த இராமநாதன்

ஜூன் முதலாம் திகதியன்று கலவரம் நடைபெற்ற இடங்களைப் பார்வையிடுவதற்காக இராமநாதன் புறப்பட்டார். ஆட்டுப்பட்டித்தெரு, சில்வர் ஸ்மித் வீதி, புதிய சோனகத்தெரு, அளுத்கடை, சிறிபான வீதி போன்ற பகுதிகளில் வாழ்ந்த 150 முதல் 200 வரையிலான சிங்களக் குடும்பங்கள், சிறுவர்கள், பெண்கள் உட்பட பொலிஸ் நிலையத்தில் தஞ்சம் அடைந்திருந்தனர். இராமநாதன் கலவரம் குறித்து அவர்களுடன் கலந்துரையாடினார். அவர்கள் தாம் முஸ்லிம்களின் தாக்குதலுக்கு அஞ்சியே பொலிஸ் நிலையத்தில் தஞ்சமடைந்திருப்பதாகத் தெரிவித்தனர். இராமநாதன் அவர்களை அழைத்துச் சென்று அவர்கள் தமக்கான உணவைச் சமைத்துச் சாப்பிடுவதற்கு வேண்டிய ஏற்பாடு செய்த பின், சிங்கள வர்த்தகர் ஒருவரின் களஞ்சியத்தில் போய்த் தங்குமாறு பாதுகாப்பாக அனுப்பிவைத்தார்.

### சமரசப் பேச்சுவார்த்தை

இரண்டு நாள் கழித்து ஜூன் 3 ஆம் திகதி இராமநாதன் சிங்கள - முஸ்லிம் தலைவர்களை அழைத்துச் சமரசப் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டார். பேச்சுவார்த்தை முடிந்து மாக்கான் மரிக்காரை அவரது இல்லத்தில் விடும் பொருட்டு இராமநாதனும் அவருடன் கூடச்சென்றார்.

வழியில் மாக்கான் மரிக்காரின் தொப்பியை அவதானித்த சிங்களக் காடையர் சிலர் அதோ முஸ்லிம் ஒருவன் போகிறான் என்றனர். உடனே இராமநாதன், மாக்கான் மரிக்காரிடம் தொப்பியை ஆங்கிலேயர்களைப்போல் அணிந்து கொள்ளுங்கள் என்றாராம். அவரும் அவ்வாறே தொப்பியை அணிந்துகொண்டாராம்.

ஐரோப்பியரின் துப்பாக்கி விற்பனை நிலையம் ஒன்றின் முன்னால் காரை நிறுத்திய மாக்கான் மரிக்கார் ரிவால்வர் ஒன்று தருமாறு கேட்டாராம். அதற்குத் துப்பாக்கி வியாபாரி மார்ஷல் சட்டம் அமுலில் உள்ளபடியால் துப்பாக்கி தரமுடியாது என மறுத்து விட்டாராம்.

### சிங்களத் தலைவர்கள் கைது

கலவரத்தையடுத்து பல சிங்களத் தலைவர்கள் கைது செய்யப்பட்டு சிறையிலடைக்கப்பட்டனர். கலவரத்தில் ஈடுபட்டார்கள் என்ற குற்றச்சாட்டின்பேரில் 83 காடையர்களுக்கு மரண தண்டனைத் தீர்ப்பு அளிக்கப்பட்டது. கைது செய்யப்பட்ட சிங்களத்தலைவர்களின் விவரம் வருமாறு:

எவ்.ஆர்.டயஸ் பண்டாரநாயக்கா, ஈ.ரி.டி.சில்வா, டி.சி.சேனநாயக்கா, டி.எஸ்.சேனநாயக்கா, டி.பி.விஜேவர்த்தனா, டி.ஆர்.விஜேவர்த்தனா, டாக்டர் கசியஸ் பெரேரா, ஜோன்.டீ.சில்வா, எச்.டபிள்யூ.பெரேரா, மார்டினஸ் பெரேரா, ஜோன் எம்.செனிவிரத்ன, எச்.அமரசூரிய, டீ.ஈ.வீரசூரிய, வணக்கத்துக்குரிய ஜி.டி.லரேரொல் (Larerolle) ஹென்றிமெல், ஏ.எச்.ஈ.மொலொமுரே ஆகியோரே கைது செய்யப்பட்டு சிறையிலடைக்கப்பட்டவர்கள் ஆவர்.

### கலவரம் தொடர்பாகச் சட்ட சபையில் இராமநாதன் ஆற்றிய உரை

கலவரம் தொடர்பாகச் சட்டசபையில் இராமநாதன் ஆற்றிய உரை 127 பக்கங்களில் அச்சிடப்பட்டுள்ளது. அதில் இடம் பெற்றுள்ள தகவல்கள் இங்கு தரப்படுகிறது.

கலவரத்தைத் தொடர்ந்து பரிட்டிஷ் ஆட்சியாளர்கள் இலங்கையிலுள்ள சிங்களவர்கள் அனைவரும் அபராதம் செலுத்த வேண்டும் என உத்தரவிட்டனர். முஸ்லிம்களே இல்லாத கிராமங்களில் வசித்த சிங்களவர்களும் நட்டஈடு (தண்டம்) செலுத்த வேண்டும் எனப் பிரித்தானிய ஆட்சியாளர்கள் உத்தரவிட்டனர். ஒவ்வொரு தனி நபரும் இவ்வளவு பணம் செலுத்த வேண்டுமென பொலிஸார் உத்தரவிட்டனர்.

இராமநாதன் இதை வன்மையாக் கண்டித்தார். பிரிட்டிஷ் ஆட்சியாளர்கள் தீர்மானித்த அபராதத்தொகை வருமாறு:

கொழும்பு 4 மில்லியன் ரூபாக்கள், மத்திய மாகாணம் 1/2 மில்லியன் ரூபாக்கள், சப்ரகமுவ மாகாணம் 1/2 மில்லியன் ரூபாக்கள், தென் மாகாணம் 1/4மில்லியன் ரூபாக்கள், வடமேல் மாகாணம் 1/4 மில்லியன் ரூபாக்கள், மொத்தம் 5 1/2 மில்லியன் ரூபாக்கள்.

இதன்படி ஒரு தனி நபருக்கு விதிக்கப்பட்ட அபராதத் தொகை பின்வருமாறு.

கொழும்பு 15 ரூபா 16 சதம், மேல் மாகாணம் 3 ரூபா 56 சதம், சப்ரகமுவ மாகாணம் 1ரூபா 35 சதம், மத்திய மாகாணம் 80 சதம், தென் மாகாணம் 55 சதம், வடமேல் மாகாணம் 36 சதம்.

ஒரு நாளைக்கு 50 சதம் உழைப்பதற்கே கஷ்டப்படும் சாதாரண கூலித்தொழிலாளி ஒருவனால் எவ்வாறு இவ்வளவு பெரிய தொகையை அபராதமாகச் செலுத்த முடியும்?

''சட்டமா அதிபரைக் கேட்க விரும்புகிறேன், இங்கிலாந்தில் நடைபெற்ற ஏதாவது கலவரத்துக்கு நீங்கள் நட்டஈடு செலுத்தியிருக்கிறீர்களா? எந்தவித குற்றமும் செய்யாத ஒருவரைப் பார்த்து நூறு ரூபா நட்டஈடு செலுத்துமாறு உத்தரவிடுவது எந்தவகையில் நியாயம். அரசாங்க அதிபர்கள் தமது கடமையைச் சரிவரச் செய்யவில்லை. நீதிபதிகள் தமது கடமையைச் சரிவரச் செய்யவில்லை. கண்டி நீதிபதி போல் பீரிஸ் பெரஹறா ஊர்வலம் போகும் போது பள்ளிவாசல் பகுதியில் ஒலி எழுப்ப வேண்டாம் என உத்தரவிட்டுள்ளார். இரவு ஒரு மணிக்குப் பள்ளிவாசலில் என்ன நடைபெறுகிறது? பள்ளிவாசல் மூடப்பட்ட நிலையில் வெசாக் கண்டியரசர்களின் காலத்திலிருந்து கொண் டாடப்பட்டுவரும் ஒரு தேசிய விழா. கண்டி ஒப்பந்தத்தில் கூட சிங்களவர்கள் தமது விழாக்களைக் கொண்டாடுவதற்குத் தடையில்லை எனக் கூறப் பட்டுள்ளது. இந்த இடத்தில் கண்டி ஒப்பந்தம் பற்றியும் கூறவேண்டும். (கண்டி ஒப்பந்தம் பிரிட்டிஷ் ஆட்சியாளர்களுக்கும், கண்டிப் பிரதானிகளுக்குமிடையே 1815 ஆம் ஆண்டு கைச்சாத்திடப்பட் டது. இந்த ஒப்பந்தத்தில் சிங்களவர்களின் சார்பாக ஒப்பமிட்டவர் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகாவின் பூட்டனும், உலகின் முதல் பெண் பிரதமரான சிறிமாவின் பேரனுமான ரத்வத்த திஸாவை ஆவார். இவர் தமிழிலேயே கையொப்பமிட்டுள்ளார்''

(ஆங்கிலம் தெரியாவிட்டாலும் ஆங்கிலத்தில்தான் கையொப்பமிடுவோம் என மார்தட்டும் யாழ்ப்பாணத்தவர்களுக்கு இது சமர்ப்பணம்)

தமது சொந்த நாட்டில் தாம் வெசாக் தினத்தைக் கொண்டாடுவதற்கு அனுமதி இல்லையா எனச் சிங்களவர்கள் ஆதங்கப் பட்டனர். பிரிட்டிஷ் அரசினால் நியமிக்கப் பட்ட ஆட்சியாளர்களும் காவல்துறையும் தமது கடமையைச் சரிவரச் செய்யவில்லை. இவ்வாறு இராமநாதன் சட்ட சபையில் உரையாற்றினார். ஒரு சமயம் இராமநாதன் தொடர்ந்து இரவு 10.45 வரை உரையாற்றினார். பின்னர் கடிகாரத்தைப் பார்த்துவிட்டு அவராகவே உரையை நிறுத் தினார். இதன் பின்னர் இராமநாதன் லண்டன் சென்று வாதாடியதும் அதற்காக இராமநாதனுக்கு அளிக்கப்பட்ட வரவேற்பும் குறித்த தகவல் அண்மையில் 'உதயன்' பத்திகையில் வெளியானமை வாசகர்கள் அறிந்ததே.


மாக்கான் மாக்கார்

*ஆதாரம்*

Martial Law and Riots in Ceylon - 1915 - P.Ramanathan. Life of Sir Ponnampalam Ramanathan - M.Vythilingam. Founders of Modern Ceylon- V.Muthukkumarasamy நெருக்கடியின் கதை - ராவய வெளியீடு.


**ந.பரமேஸ்வரன்**

**தமிழ்த் தலைவர்கள் நாட்டுக்கு ஆற்றிய சேவைகள் காலத்தால் மறக்கப்பட்டு வரும் அவக்கோலம்! 2**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாய்விட்டுச் சிரித்தால் நோய் விட்டுப் போகும்

“அடுத்த சந்ததியினருக்கு ஏதாவது ஒரு நல்ல பரிசாகக் கொடுக்க ஒரு நல்ல சந்தர்ப்பம் வழங்கப்பட்டால், அது ஒவ்வொருவரும் சிரிப்பதற்கான ஆற்றலை வளர்த்துக்கொள்ளும் திறமையை


மகாகவி பாரதியார்

ஏற்படுத்திக் கொடுப்பதாகவே இருக்கும்.''

இவ்வாறு சார்ள்ஸ் சார்ஸ் என்பவர் சிரிப்பின் சிறப்பைப் பெருமைப்படுத்து கிறார்.

''வாய்விட்டுச் சிரித்தால் நோய் விட்டுப்போகும்'' என்பது பழமொழி. இதை இப்போது அறிவியல் நிரூபித்து வருகிறது. மனம் விட்டுச் சிரித்தால் இரத்த அழுத்தம் குறையும். தலைவலி நீங்கும். இரத்தக் குழாய் விரிவடைந்து, இரத்த ஓட்டம் சீராகும். மன இறுக்கத்தைக் குறைக்கும்.

சிரிப்பதால் உடலில் ஒருவித இரசாயணம் சுரப்பதே இதற்குக் காரணம்.

''சிரித்து மகிழ நேரத்தை எடுத்துக் கொள். அது இதயத்தின் இன்னிசை'' என்றார் ஜேம்ஸ் துபரி என்ற அறிஞர்.

நகைச்சுவையை மூலதனமாக்கி ஒரு நகரத்தையே உருவாக்கி உலக மக்களைப் பரவசப்படுத்திக் கொண்டிருக்கிறார் வால்ட் டிஸ்னி (Walt Disney). அவரது மிக்கி மவுஸ் (Micky mouse) உலகப் பிரசித்தி பெற்றது. சிறுவர் முதல் பெரியவர்கள் வரை ரசித்து, சிரித்து மகிழவைத்துக் கொண்டிருக்கிறார். கார்ட்டூன் படங்கள் மூலம் கலகலப்பை ஏற்படுத்திய கலைஞர் வால்ட் டிஸ்னி.

ஆடிப்பாடுவதைப் பார்த்து மக்கள் எல்லோரும் கூடிக் கவலையை மறந்து, சிரித்து மகிழ்கிறார்கள்.

சிரிப்பு, கடினமான வேலைகளைக் கூட இலகுவாக்குகிறது. சிநேகித வட்டங்களில் உறவுகளை மேம்படுத்துகிறது.

**விதியிலிருந்தும் பாதுகாப்பு**


''சிரிப்பு, விதியிலிருந்துகூட ஓரளவு நம்மைப் பாதுகாத்துக் கொள்கிறது'' என்றார் காரெல்கெபெக் என்பவர்.

*''வேண்டுமட்டும்*
*குலுங்கி குலுங்கி*
*நானும் சிரிப்பேன்*
*அந்த விதியைக் கூட*
*சிரிப்பினாலே*
*விரட்டி அடிப்பேன்...''*

என்ற கவிஞரின் கவிதை வரிகள் மேற்படி கருத்துக்கு இசைவாகவே அமைந்துள்ளன.

''சிரித்துக்கொண்டு அறைக்குள் நுழையும் ஒரு மனிதனைக் கண்டால் இன்னொரு விளக்கு அறையினுள் வந்ததுபோல் இருக்கும்'' ரொபேர்ட் லூயி என்பவரது கருத்து இது.

சிரிப்பு உளவியல் ரீதியிலான ஸ்திரத் தன்மையை கஷ்டமானதொரு சூழ்நிலையில் ஏற்படுத்திக் கொடுக்கிறது என்ற கருத்தும் நிலவுகிறது.


க.கணேசலிங்கம்

''சிரிப்பு வாழ்க்கைக்குத் தேவையான ஒரு அருமையான, மலிவான மருந்து. இது பலராலும் உணரப்படாத ஒன்று'' என்றார் கோர்டன் பைரன்.

''அழுவது எப்படி என்று பிறந்த நேரம் கொண்டே தெரிந்து வைத்திருக் கிறான் மனிதன். சிரிப்பதற்குத்தான் கொஞ்சம் பயிற்சி மேற்கொள்ள வேண் டியிருக்கிறது.'' பார்க்ஸ் பாலன் பேர்க் என்பவரது கருத்து இது.

''நகைச்சுவை, உலகையும், காற்றையும், உங்களையும்

*துன்ப வாழ்விலும் இன்பம் காணும்*
*விந்தை புரிவது சிரிப்பு. இதைத்*
*துணையாய்க் கொள்ளும் மக்களின்*
*முகத்தில் துலங்கிடும் தனிச் செழிப்பு''*

என்ற அவரது பாட்டைக் கேட்கும் போதெல்லாம் நம்மை அறியாமலேயே சிரிப்பு வரவே செய்யும்.

குழந்தைகள் வளர்ச்சியில் நகைச்சுவை முதன்மை இடத்தை வகிப்பதாக சொல்கிறார் மிக்கெயில் ஸ்வெற்லோவ் (Mickail Svetlov) என்ற கவிஞர்.

*'' கண்ணாமூச்சி ஆட்டம்*
*உனக்கு*
*சொல்லித்தரணுமா,*
*அப்போ*
*கலகலண்ணு சிரிச்சுக்கிட்டு*
*என்னைப் பாரம்மா,...*
*நீ சிரித்தால்*
*நான் சிரிப்பேன்*
*சிங்காரக்கண்ணே......''* என்ற

கவிஞர் பட்டுக்கோட்டை கல்யாண சுந்தரத்தின் கவிதை வரிகள் மேற்படி கருத்தோடு ஒத்துப் போவதாகவே இருக் கிறது.

*''கோபத்திலே ஒரு சொல்லில்*
*சிரித்துக் குலுங்கிடச் செய்திடுவான்,*
*மனஸ்தாபத்திலே*
*யொன்று செய்து*
*மகிழ்ச்சி ததும்பிடச் செய்திடுவான்.....''*

எங்கிருந்தோ வந்தான் கண்ணன் பாடலில் சிரிப்பால் கோபத்தை ஆற்றுவது பற்றி இவ்வாறு தெரிவிக்கிறார் பாரதியார்.

*''வெள்கினேன்*
*வெள்கி நானும்*
*விலாவிறச் சிரித்திட்டேனே...''*

இது திருநாவுக்கரசரது சிரிப்பு. விலாப்புறம் வலியெடுக்கும் அளவுக்கு குலுங்கிக் குலுங்கி அந்தச் சமய குரவர் சிரித்ததாக தேவாரத்தில் குறிப்பிடுகிறார்.

*( வெள்கி - வெட்கப்பட்டு)*

கேட்கும் போதெல்லாம் மனதோடு ஊஞ்சலாடும் பாடல்களில் சிரிப்பும் பற்றி மேலும் தெரிந்து கொள்ளக் கூடியதாக இருக்கிறது.

*''சிங்காரப் புன்னகை*
*கண்ணாரக் கண்டாலே*
*சங்கீத வீணையும்*

*ஓர் நாள்*
*மூன்று தமிழ்*
*படித்தேன்''...*
*'' மோகனப் புன்னகை*
*ஏனோ*
*அநுராகத்தின்*


வால்ட் டிஸ்னி

*இன்னிசை*
*தானோ?''....*
*'' பொல்லாத புன்சிரிப்பு,*
*போதும் போதும்*
*உன் சிரிப்பு,*
*யார் வீட்டுத்தோட்டத்திலே*
*பூத்ததிந்த ரோஜாப்பூ?''.....*

போன்ற பாடல் வரிகள் மேற்படி குறள்களிலிருந்து தான் விரிந்தனவோ என எண்ணத் தோன்றுகிறது.


*''சோலை மலர்களின் ஒளியோ உனது*
*சுந்தரப் புன்னகை தான்?''.....*

என்று வியப்புடன் கேட்ட பாரதியார்

*'' பொங்கி வரும்*
*பெரு நிலவு போன்ற*
*ஒளி முகமும்,*
*புன்னகையின் புது நிலவும்*
*போற்றவரும்*
*தோற்றம்''....*

என புன்னகையில் புது நிலவின் அழகினைக் கண்டவர், ஆற்றங்கரைதனிலே தனியானதோர் மண்டபம் மீதினிலே தென்றல் காற்றை நுகர்ந்திருந்தபோது, கவிதையுடன் வந்த கன்னி “விழிக்கோணத்

## நகைச்சுவை இங்கும் அங்கும் எங்கும் இருக்கும் தனித்துவமுடையது!!


சார்லி சாப்ளின்

சுமார் நூற்றி அறுபது ஏக்கர் நிலத்தில் நகைச்சுவையைப் பரப்பிவிட்டிருக்கும் அவரது அபூர்வ உலகத்தை (Wonder Land) தினமும் பலரும் பார்த்துப் பரவசமடைந்து மகிழ்கிறார்கள். அவரது நீண்டநாள் கனவில் உதயமானது, உருவானது இது.

வசனமின்றி உடல்மொழியால் மட்டுமே நகைச்சுவையை (Slapstick) வளர்த்து தனக்கென ஒரு தனி இடத்தை வகுத்துக் கொண்டவர் சார்லி சாப்ளின்.

**கோமாளிகளின் உலகத் திருவிழா**

உலகெங்குமுள்ள கோமாளிகள் ஒரே இடத்தில் கூடும் க்ளவுண் ஃபெஸ்டிவல் (Clown festival) ஆண்டுதோறும் மெக்சிக்கோ நகரில் நடக்கிறது. இவர்கள்

சுத்தப்படுத்தி, குளிர்மைப்படுத்தி விடுகிறது'' என்று குறிப்பிட்டார் லோங்ஸ்ரன் ஹஜஸ் என்பவர்.

**தீமையை அழிக்க சிரிப்பினால் முடியும்**

''கொடுமை இல்லாமலேயே தீமைகளை அழிப்பதற்கு நகைச்சுவையால் தான் முடியும்; இழிநடை இல்லாமல் நல்ல இணக்கத்தை உறுதிப்படுத்தவும் அதனால்தான் முடியும்'' என்று கூறிய பெர்னாட்ஷா ''உண்மையான அறிவின் வேலையெல்லாம் நகைச்சுவையுடன் கூடியதே'' என்றார்.

''சிரிக்காத நாள்தான் ஒருவன் வாழ்க்கையில் வீணாக்கிவிட்ட நாள்களில் மிகமோசமான நாளாகும்'' என்று நிக்கலஸ் சாம்பேர்ட் என்பவர் குறிப்பிட்டார்.

''கல்வித்துறையின் வளர்ச்சியில் இந்த நகைச்சுவை பெரும் பங்கினை வகிக்கிறது'' என்றார் அலெக்சாண்டர் லக் (Alexander Luk) என்பவர்.

''என்னைப் போன்ற விஞ்ஞானிகளைவிட சாப்ளின் உயர்ந்தவர்'' என்று பெருமைப்படுத்தினார் விஞ்ஞானி ஐன்ஸ்டீன். நகைச்சுவைக்கு அளிக்கப்பட்ட மதிப்பு இது.

நகைச்சுவையால் நாட்டுக்குச் சேவை செய்ய முன்வந்த என்.எஸ்.கிருஷ்ணன் ''சிரிக்க வைக்கிறது கூட ஒரு உதவி மாதிரித்தான்'' என்றார்.

*'' சிரிப்பு; இதன் சிறப்பைச்*
*சீர் தூக்கிப பார்ப்பதே*
*நமது பொறுப்பு,*
*சிந்திக்கத் தெரிந்த*
*மனிதகுலத்துக்கே*
*சொந்தமானது சிரிப்பு...*
*மனக் கவலையைப் போக்கி*
*மூளைக்குத் தரும் சுறுசுறுப்பு.....*

*ஏதுக்கம்மா? ''......*
*'' சிரிப்பில் உண்டாகும்*
*ராகத்திலே*
*பிறக்கும் சங்கீதமே''.....*
*'' செந்தமிழ் தேன்*
*மொழியாள்- அவள்*
*சிரிக்கும் மலர்க்*
*கொடியாள்''.....*
*'' சிரித்தாலும் போதுமே*
*செவ்வானம் தோன்றுமே,*
*பார்த்தாலும் போதுமே*
*பழச்சாறு ஊறுமே''...*
*''பார்த்தால் பசிதீரும்,*
*பங்கஜவதன*
*செங்கனி வாய்ச்சிரிப்பை*
*பார்த்தால் பசிதீரும்''......*

இசையும், இலக்கிய நயமும் சேர்ந்து வரும் இத்தகைய பாடல்களில் சிரிப்பின் மகத்துவத்தை உணரமுடிகிறது.

''வாழ்க்கையை அர்த்தமுள்ளதாக்குவது சிரிப்பு. சிரிக்கக் கற்றுக் கொண்டு விட்டால் வாழத்தொடங்கி விடலாம். சிரிப்பு நம்பிக்கையை வளர்த்து விடுகிறது'' என்பது ஐரிஷ் நாவலாசிரியர் சீன் ஓகேசி (sean Ocasey) என்பவரது கருத்து.

**வள்ளுவரின் நகைச்சுவை**

'' நகை ஈகை இன் சொல் இகழாமை''...என வகையாக வகைப் படுத்திய வள்ளுவர், குறுநகை பற்றி நகைச்சுவை கலந்து பின்வரும் குறள்களில் அழகாக எடுத்துக் கூறினார்.

**''யான் நோக்கும் காலை நிலன் நோக்கும் நோக்காக்கால்**
**தான் நோக்கி மெல்ல நகும்.''**

**“அசை இயற்கு உண்டு ஆண்டு ஓர் ஏஎர் யான் நோக்கப்**
**பசையினள் பைய நகும்.''** என்றவர்,

**“முகை மொக்குள் உள்ளது நாற்றம் போல் பேதை**
**நகை மொக்குள் உள்ளது ஒன்று உண்டு.''**

என மேலும் மெருகுபடுத்தினார்.

*'' மோகனப் புன்னகையில்*


கலைவாணர் என்.எஸ்.கிருஷ்ணன்

தில் நகை காட்டியதாக'' மற்றுமொரு கோணத்தில் நகையைக் காட்டுகிறார்.

*'' புதிர்களை அவிழ்க்கப்*
*புன்னகை பூக்கிறேன்''...*

என்றார் கவிஞர் மு. மேத்தா.

*'' பூக்களெல்லாம்*
*சிரிப்பைத் தந்தது''...*

என்று பூக்களுக்குப் புகழ் மாலை சூட்டுகிறார் ஒரு கவிஞர்.

தென்றலும் மலர்களும் கூட நகைச்சுவைக்கு நறுமணம் சேர்த்து நிற்கின்றன.

**நகைச்சுவை எங்கும் இருக்கிறது**

நகைச்சுவை இங்கும் அங்கும் எங்கும் இருக்கும். (Tottering). அதற்கென ஒரு தனித் துவம் இருக்கிறது. நாம் தான் அதனைத் தேடிக் கண்டு பிடித்து ரசித்து மகிழ வேண்டும் என்பது அனுபவஸ்தர்களின் ஆலோசனை.

***

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'பீபா' தரவரிசையில் கூடிய புள்ளிகளுடன் முதலிடத்தைப் பிடித்து ஸ்பெயின் சாதனை



சர்வதேச கால்பந்தாட்ட சம்மேளனத்தின் (பீபா) தரவரிசைப் பட்டியலில் ஸ்பெயின் மிகப் பெரிய இடைவெளியுடன் முதல் இடத்தை தக்கவைத்துக் கொண்டுள்ளது. சர்வதேச கால்பந்தாட்ட சம்மேளனத்தின் புதிய தரவரிசைப் பட்டியல் வெளியிடப்பட்டது. இதில் ஐரோப்பிய சாம்பியனான ஸ்பெயின் அணி 1729 புள்ளிகளுடன் முதல் இடத்தை ஆக்கிரமித்துள்ளது. ஸ்பெயின் அணி கடைசியாக விளையாடிய 31 போட்டிகளில் தோல்வியைச் சந்திக்கவில்லை.

அத்துடன் அண்மையில் நடந்த உலகக் கிண்ண தகுதி காண் போட்டியில் துருக்கியை இரண்டு தடவைகள் வீழ்த்தியது. இதன்மூலம் ஸ்பெயின் அணி. புதிய தரவரிசை பட்டியலில் மேலதிகமாக 63 புள்ளிகளை பெற்றுக்கொண்டது.

எனினும் பீபா தரவரிசையில் இரண்டாவது இடத்தில் உள்ள ஜேர்மனி 1362 புள்ளிகளையே பெற்றுள்ளது. அதாவது ஸ்பெயின் அணி ஜேர்மனியை விடவும் 367 புள்ளிகள் இடைவெளியில் முதல் இடத்தை தக்கவைத்துக் கொண்டுள்ளது. இதன்படி 1993 ஆம் ஆண்டு அறிமுகமான பீபா தரவரிசை வரலாற்றில் அதிக புள்ளிகள் இடைவெளியில் முதலிடத்தை பிடித்த அணியாக ஸ்பெயின் சாதனை படைத்தது. இதில் ஜேர்மனியை விடவும் இரண்டு புள்ளிகள் மாத்திரமே குறைவாகப் பெற்றுள்ள நெதர்லாந்து அணி மூன்றாவது இடத்தில் உள்ளதோடு, பிரேஸில் அணி உலக சாம்பியன் இத்தாலியை பின்தள்ளி 1275 புள்ளிகளுடன் நான்காவது இடத்தை பிடித்தது. பிரேஸிலை விடவும் 4 புள்ளிகள் குறைவாக பெற்றுள்ள உலக சாம்பியன் இத்தாலி 5 ஆவது இடத்திற்கு சரிந்தது. இதேவேளை, வெனிசுவேலாவிடம் 16 என்ற கோல் கணக்கில் படுதோல்வியை சந்தித்த ஆர்ஜன்டீனா அணி தனது 6 ஆவது இடத்தைத் தக்கவைத்துக் கொண்டது. எனினும் 1219 புள்ளிகளுடன் இருந்த ஆர்ஜன்டீனா அணியின் புள்ளிகள் 1201 ஆக குறைக்கப்பட்டுள்ளன. அத்துடன் தரவரிசையில் 9 ஆவது இடத்தில் இருந்த இங்கிலாந்து அணி 7 ஆவது இடத்துக்கு முன்னேறியதோடு குரேஷியா மற்றும் ரஷ்ய அணிகள் தலா ஒரு இடம் பின்தள்ளப்பட்டு முறையே 8,9 ஆவது இடத்தில் காணப்படுகின்றன. 12 ஆவது இடத்தில் இருந்த பிரான்ஸ் 10 ஆவது இடத்திற்கு முன்னேறியது.

## விளையாட்டு அரங்கில்

## ஐ.பி.எல். இல் அதிக சம்பளம் இந்திய வீரர் ராகுல் டிராவிட்டுக்கு



தென்னாபிரிக்காவில் நடைபெறவுள்ள ஐ.பி.எல். இருபது - 20 தொடரில் அதிக சம்பளம் பெறுபவர், இந்திய வீரர் ராகுல் டிராவிட் தான். அவரது சம்பளம் இந்திய நாணயப்படி 8.45 கோடி ரூபாவாகும்.

இந்திய பிரீமியர் லீக் (ஐ.பி.எல்.) சார்பாக கடந்த ஆண்டு வீரர்கள் ஏலத்தில் இந்திய அணித்தலைவர் தோனி அதிகபட்சமாக ரூபா 6 கோடிக்கு விலைக்கு வாங்கப்பட்டார். ஆனால் இந்த ஆண்டு நடந்த ஏலத்தில் தோனியை விட அதிகபட்ச விலைக்கு இங்கிலாந்து வீரர்களான பீற்றர்ஸன் (பெங்களூர் ரோயல் சலஞ்சர்ஸ்), பிளின்ரொப் (சென்னை சுப்பர் கிங்ஸ்) ஆகியோர் தலா ரூபா 7.35 கோடிக்கு விலைக்கு வாங்கப்பட்டனர்.

சச்சின், கங்குலி, டிராவிட் உள்ளிட்டோர் நட்சத்திர வீரர்கள். இவர்கள் ஏலத்தில் கலந்துகொள்ள மாட்டார்கள். ஆனால் அவர்கள் பங்கேற்கும் அணியில் அதிக பட்ச சம்பளம் பெறும் வீரரை விட, 15 சதவிதம் அதிகமான சம்பளம் இவர்களுக்கு வழங்க வேண்டும். இதன்படி பெங்களூர் ரோயல் சலஞ்சர்ஸ் அணியில் பீற்றர்ஸன் விலையை விட அதிகமாக சுமார் ரூபா 8.45 கோடி சம்பளம் பெறவுள்ளார் டிராவிட்.

சென்னை அணி சார்பில் பிளின்ரொப் ரூபா 7.35 கோடிக்கு வாங்கப்பட்டபோதும், அணித்தலைவர் தோனி நட்சத்திர வீரர் இல்லாததால் அவருக்கு ரூபா 6 கோடி மட்டும்தான் கிடைக்கும்.

## லண்டன் அருங்காட்சியகத்தில் சிலை எனக்குக் கிடைத்த கௌரவம் - சச்சின்



லண்டனில் உள்ள டுஸாட்ஸ் சீமாட்டி அருங்காட்சியகத்தில் எனது சிலையை வைக்க முடிவு செய்துள்ளது எனக்குக் கிடைத்த மிகப் பெரிய கௌரவம் என சச்சின் டென் டுல்கர் குறிப்பிட்டுள்ளார். பல்வேறு துறைகளில் உலகில் உள்ள பிரபலமானவர்களை மெழுகில் சிலையாக தத்ரூபமாக வடிவமைத்து உலகப் பார்வையைப் பெற்றுள்ள அருங்காட்சியகமாக டுஸாட்ஸ் சீமாட்டி திகழ்கிறது.

அங்கு இடம்பெற்றுள்ள விளையாட்டு வீரர்கள் வரிசையில் சச்சின் டென்டுல்கரும் இடம்பெறவுள்ளார். இந்தியாவிலிருந்து அந்தச் சிறப்பைப் பெறும் முதல் விளையாட்டு வீரர் சச்சினாவார். நாளை திங்கட்கிழமை அவரது பிறந்த நாளன்று சிலை திறந்து வைக்கப்படவுள்ளது. இந்நிலையில் சிலையின் மாதிரி அறிமுக நிகழ்ச்சி மும்பையில் கடந்த திங்கட்கிழமை நடைபெற்றது. அதில் குடும்பத்துடன் சச்சின் டென்டுல்கர் கலந்து கொண்டார்.

அப்போது அவர் கூறியதாவது, லண்டனில் உள்ள டுஸாட்ஸ் சீமாட்டி அருங்காட்சியகத்தில் வைக்கப்பட்டுள்ள முதல் இந்திய விளையாட்டு வீரர் நான் என்பது எனக்குத் தெரியும். கிரிக்கெட்டில் நான் ஆற்றிய பங்கிற்கு அளிக்கப்பட்டுள்ள பாராட்டாகவும், வெளிப்பாடாகவும் அமைந்துள்ளது.

அங்கு எனது சிலையை வைப்பதென்பது டுஸாட்ஸ் சீமாட்டி நிர்வாகத்தின் முடிவு. அதை முன்னதாகவே வைத்திருக்கலாம் என்பதை முடிவு செய்யும் உரிமை எனக்குக் கிடையாது. ஆனால் அந்த மாபெரும் அருங்காட்சியகத்தில் என்னையும் இடம்பெறச் செய்துள்ளதில் மகிழ்ச்சி.

எனக்கு 15 வயது இருக்கும் போதிலிருந்தே டுஸாட்ஸ் செல்ல வேண்டும் என நினைத்துள்ளேன். கிரிக்கெட் விளையாடுவதற்காக இங்கிலாந்து சென்றுள்ளேன். ஆனா ல், நெருக்கடியான அட்டவணை காரணமாக அதைச் சென்று காணும் பாக்கியத்தைப் பெற முடியவில்லை.

இரண்டாவது ஐ.பி.எல். போட்டிகள் முடிந்த பின்னர் லண்டன் சென்று அதைப் பார்வையிடுவேன். யாரது சிலை அருகில் உங்களது சிலையை வைக்க வேண்டும் எனக் கேட்டதற்கு, யாருக்கு அடுத்து வேண்டுமானாலும் வைக்கட்டும். அது குறித்துக் கவலையில்லை. அங்கு எனது சிலை வைக்கப்படுவதே எனக்கு கிடைத்த கௌரவம் என்றார்.

அழைப்பிதழ்

உதயா ஜுவலர்ஸ்

285/C, காலிவீதி, கொழும்பு 6. என்ற இலக்கத்தில் அமைந்திருந்த உதயா ஜுவலர்ஸ் 2009 ஆண்டு ஏப்ரல் மாதம் 25ம் திகதி முதல் 303, காலி வீதியில் உள்ள புதிய இடத்திற்கு மாற்றப்பட உள்ளது.

வாடிக்கையாளர்கள், உறவினர்கள், நண்பர்கள் மற்றும் அனைவரும் எங்கள் நகை ஸ்தாபனத்திற்கு விஜயம் செய்யும்படி எல்லோரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

வாடிக்கையாளர்கள் நலன் கருதி எதிர்வரும் ஏப்ரல் 26ம் திகதி ஞாயிற்றுக்கிழமையும் எமது நகையகம் திறந்திருக்கும்.

நேரில் வந்து அழைப்பிதழ் வழங்க முடியாமைக்கு வருந்துகின்றோம். தயவு செய்து இதனை அழைப்பிதழாக ஏற்றுக் கொள்ளவும்.

ஜப்பான் சைனா கூட்டுத்தயாரிப்புகள் விற்பனையில்



Free யக்கற், ஹெல்மற்றுடன் 1 வருடம் / 10,000 கி.மீ வரை உத்தரவாதத்துடன் பெற்றுக்கொள்ளலாம்.



99,000/=


99,000/=

ஏக விநியோகஸ்தர்:

யசோ மோட்டோர்ஸ்

இல.165, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# எகிறும் சம்பளம்

தென்னிந்தியத் திரையுலகில் அதிகூடிய சம்பளம் பெறும் நடிகர்களில் ரஜினிக்கு அடுத்தபடியாக இருப்பது இளைய தளபதி விஜய்தான். 'குருவி', 'வில்லு' என்ற கடைசி இரண்டு படங்களும் சுமாராகவே ஓடினாலும் விஜய் இன் சம்பளம் மட்டும் படத்துக்குப் படம் உயர்ந்து கொண்டே வருகின்றது. முன்பெல்லாம் மூன்று கோடி ரூபாவும் சென்னை நகர விநியோக உரிமையையும் சம்பளமாகப் பெற்றுக்கொள்ளும் விஜய் தன்னுடைய புதிய படமான வேட்டைக்காரன் படத்துக்குச் சம்பளமாக ஐந்து கோடி ரூபாவையும் சென்னை விநியோக உரிமையையும் பெற்றுள்ளார். கூட்டிக் கழித்துப் பார்த்தால் விஜய் ஒரு படத்துக்குப் பெறும் சம்பளம் பத்துக்கோடி ரூபாவையும் தாண்டும் என்று சொல்லப் படுகின்றது.★

# தள்ளிப்போன மரியாதை




விக்ரமனின் இயக்கத்தில் விஜயகாந்த் நடித்து புத்தாண்டுக்கு வெளிவரத் தயாராக இருந்த 'மரியாதை' படம் தற்போது பிற்போடப் பட்டுள்ளது. தேர்தல் களம் தமிழகத்தில் சூடு பிடித்துள்ள நிலையில் இந்தப் படத்தை விஜயகாந்த் ரசிகர்கள் பெரிதும் எதிர்பார்த்துள்ளனர். தன்னுடைய வழக்கமான அதிரடி படப் பாணியில் இருந்து விலகி குடும்பப்பாங்கான கதையில் 'மரியாதை' படத்தில் விஜயகாந்த் நடித்துள்ளார். எனவே ஏப்ரல் 24 ஆம் திகதி படத்தை வெளியிட்டால் அது விஜயகாந்தின் பிரசாரத்துக்கும் உதவியாக இருக்கும் என எண்ணிய தயாரிப்பாளர்கள் அதன்படியே 10 ஆம் திகதி வரவிருந்த 'மரியாதை'யை 24 ஆம் திகதிக்குத் தள்ளிவைத்து விட்டனர்.★



# ஆட்டம் ஆரம்பம்



'தசாவதாரம்' படத்தோடு ஓய்ந்திருந்த கமலஹாசன் தன்னுடைய அடுத்த ஆட்டத்துக்கும் தயாராகிவிட்டார். ஹிந்தியில் வெளிவந்து பெரும் வெற்றிபெற்ற 'ஏ வெட்னஸ் டே' என்ற படத்தை தமிழில் 'உன்னைப் போல் ஒருவன்' என்ற பெயரில் தானே தயாரித்து வழங்கவுள்ளார். இதன் படப்பிடிப்பு அண்மையில் ஆரம்பமாகியது. கமலுடன் இந்தப் படத்தில் மலையாள நடிகர் மோகன்லால் நடிக்கிறார். இந்தப் படத்தை இயக்குநர் சக்ரி நெறியாள்கை செய்யவுள்ளார். ஒரே நேரத்தில் தமிழ், தெலுங்கு, மலையாளம் ஆகிய மொழிகளில் 'உன்னைப் போல் ஒருவன்' தயாராகவுள்ளது.★

# காதலா......?



பிரபுதேவாவுக்கும் நயன்தாராவுக்கும் இடையே காதல் ஏற்பட்டுள்ளது என்ற கிசுகிசு பரவலாக உலா வரத்தொடங்கியுள்ளது. 'வில்லு' படத்தில் இவர்கள் இருவரும் நெருக்கமாகப் பழகியதால், அதுவே இப்போது காதலாக மலர்ந்துள்ளது என்றும் கூறப்படுகிறது. பிரபுதேவாவும் நயன்தாராவும் பல இடங்களுக்கு ஒன்றாக சென்று வருவது அதை நிரூபிப்பது போல அமைந்துள்ளது. எனினும் "எனக்கும் நயன்தாராவுக்கும் காதல் என்ற செய்தியை நானும் கேள்விப்பட்டேன். இது பற்றி விரைவிலேயே தெளிவு படுத்துவேன்" என்று பத்திரிகையாளர்களிடம் சொல்லியிருக்கிறார் பிரபுதேவா.★

# திரைவிமர்சனம்




அடிதடி, குத்துவெட்டு என்று இரத்தவாடை அடிக்கும் தற்கால தமிழ் சினிமாவில் மெல்லிய தென்றல்போல ஒரு அழகான காதல் கதையை சொல்கின்றது 'கார்த்திக் + அனிதா' திரைப்படம். புதுமுகங்களான ரத்தன், மஞ்சு ஆகியோருடன் ராஜன் பி.தேவ், கோட்டா சீனிவாசராவ் ஆகியோரின் நடிப்பில் ஸ்ரீஹரி என்பவரின் இயக்கத்தில் 'கார்த்தின் + அனிதா' திரைப்படம் வெளிவந்துள்ளது. அன்பும், பாசமும் பொழியும் இரண்டு குடும்பங்கள் எதிர் எதிர் வீடுகளில் வசிக்கின்றன. இரண்டு குடும்பங்களையும் சேர்ந்த நாயகனும் நாயகியும் ஒரே கல்லூரியில் படிக்கின்றனர். ஒருமுறை கல்லூரி அதிபரிடம் நாயகனுக்கு எதிராக சாட்சி சொல்கிறார் நாயகி. இதனால் நாயகனுக்கும் நாயகிக்கும் இடையே மோதல் உண்டாகின்றது. இதுவே கடைசியில் காதலாக மாறுகிறது. இந்தக் காதல் வெற்றி பெற்றதா இல்லையா என்பதை வெகு யதார்த்தமாகச் சொல்லி நிற்கிறது கார்த்திக் + அனிதா திரைப்படம். கார்த்திக் என்ற நாயகனின் பாத்திரத்தை எவ்வித குறையும் இல்லாமல் புதுமுகமான ரத்தன் வெளிப் படுத்தியிருக்கிறார். அதேபோல நாயகி மஞ்சுவும் அலட்டல் இல்லாத அழகான நடிப்பைத் தந்திருக்கிறார். வழமையாக வில்லன்களாக வரும் கோட்டா சீனிவாசராவும், ராஜன் பி.தேவும் இதில் அன்பைப் பொழிகின்ற அப்பாக்களாக வந்து எல்லோருடைய பாராட்டுக்களைப் பெறுகிறார்கள். இதைவிட கே.ஜி.சங்கரின் ஒளிப்பதிவும், ஜாக் ஆனந்தின் இசையும் சாய்சுரேஷின் படத்தொகுப்பும் படத்துக்குப் பலம் சேர்க்கின்றன. மோதலே காதலாய் மாறுகின்ற பழைய கதைதான் என்றாலும் அதனை வித்தியாச மாகவும் ரசனையாகவும் சொல்லியுள்ள இயக்குநர் ஸ்ரீஹரிக்கு நல்ல எதிர்காலம் உண்டு. பெயரைப்போலவே இரு இதயங்களின் இணைவை இதமாகச் சொல்கிறது 'கார்த்திக் +அனிதா'★

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# கொக்குவில் இந்துக் கல்லூரி உப அதிபர்
# திருமதி புனிதவதி மகேஸ்வரன் அவர்களின்
## சேவை நயப்பு மலர் 19.04.2009

### கல்லூரிக்குப் புகழ் சேர்த்த நாயகியே வாழ்க

கொக்குவில் பெற்றெடுத்த மணித் தீபமாம் திருமதி புனிதவதி மகேஸ்வரன் அவர்கள் 1949.04.19 அன்று இப்புவியில் வந்துதித்தார். இவர் கொக்குவில் இந்துக் கல்லூரியில் கல்வி கற்று இக் கல்லூரிக்கே புகழ்சேர்த்தார். 1972.03.01 முதல் ஆசிரியராகப் பணிபுரிந்து கல்விப் புலத்திற்கே அணி சேர்ந்தார். இவர் அதிசிறந்த விஞ்ஞானப் பயிற்சி ஆசிரியராக விளங்கி விஞ்ஞானத்துறைக்கே பெருமை சேர்த்தார். கொக்குவில் இந்துக் கல்லூரியில் 27 வருடங்கள் ஆசிரியராக, மேற்பார்வையாளராக, உதவி அதிபராக பதவி உயர்வு பெற்று கல்லூரியின் அனைத்துச் செயற்பாடுகளிலும் முதுகெலும்பாக செயற்பட்டவர்.

சூரியன் உதிக்கப் பிந்தினாலும் திருமதி பு.மகேஸ்வரன் கல்லூரிக்கு உரிய நேரத்திற்கு வந்து ஒளி ஏற்றியவர். பெண் மாணவர்களின் ஒழுக்கம், ஒழுங்கு ஆகியவற்றில் மிகக் கண்ணாக இருந்து அவர்களின் வாழ்க்கைப் பயணத்தை நெறிப்படுத்தியவர். கல்லூரியின் தென்பகுதியில் காலைப் பிரார்த்தனையை அமைதியாகவும் ஒழுங்காகவும் நெறிப்படுத்தி மாணவரின் ஆன்மீக வளர்ச்சிக்கு வித்திட்ட பெருமையும் திருமதி பு.மகேஸ்வரன் அவர்களையே சாரும்.

ஒய்வு மணி அடித்தும் ஓயாமல் சேவை செய்து
ஒய்வுபெறும் திருமதி பு.மகேஸ்வரன் அவர்கள்
உடல், உள ஆன்மீக நலம் பெறவே
முருகுமலி கந்தவேள் அருள் நாடி
பாமாலை புனைந்து உளமார வாழ்த்துகின்றோம்

அ.அகிலதாஸ், யா/ கொக்குவில் இந்துக் கல்லூரி அதிபர்.



ஆரம்பக்கல்வி
கொக்குவில் மேற்கு C.C.T.M. பாடசாலை
இடை நிலைக் கல்வியும் உயர்கல்வியும்
கொக்குவில் இந்துக் கல்லூரி (ஆங்கில மொழி)
விஞ்ஞான ஆசிரியர்
1972 மட்டக்களப்பு ஆரையம்பதி மகா வித்தியாலயம்
கோட்டை முனை G.T.M.S. பாடசாலை
1976: முல்லைத்தீவு குமுழமுனை G.T.M.S.
1978: பலாலி ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை
1980 : முல்லைத்தீவு வித்தியானந்தா கல்லூரி
1982: ஆசிரியர் யா/கொக்குவில் இந்துக் கல்லூரி
2005-2009 உப அதிபர்
யா/கொக்குவில் இந்துக் கல்லூரி

### கல்லூரியை நேசித்த ஆசிரியை

திருமதி புனிதவதி மகேஸ்வரன் கொக்குவில் இந்துக் கல்லூரியில் உயர்தர வகுப்புவரை கல்விபயின்ற பழைய மாணவி. இளம் வயதிலேயே ஆசிரியப் பணியில் இணைந்துகொண்டவர். தான் பயின்ற கல்லூரியில் தொடர்ச்சியாக இருபத்தேழு வருடங்களுக்கு மேல் பணியாற்றிய பெருமைக்குரியவர். 1982 ஆம் ஆண்டு இக்கல்லூரிக்கு இடமாற்றம் பெற்றுவந்த இவர் விஞ்ஞான ஆசிரியராக, பகுதித் தலைவராக, உதவி அதிபராக பதவி வகித்திருந்தார். இவற்றுக்கும் மேலாக கல்லூரியின் பாரம்பரியத்தைப் பேணத்தக்கவகையில் பெண்பிள்ளைகளின் ஒழுக்கம், நடத்தை என்பவற்றுக்குப் பொறுப்பாகவும் இருந்து வந்தவர். மேலும் இணைப் பாடவிதானச் செயற்பாடுகளிலும் தன்னை அர்ப்பணித்திருந்தார். குறிப்பாக பெண் பிள்ளைகளுக்கான விளையாட்டுத்துறைக்கும் பாண்ட் அணிக்கும் பொறுப்பாசிரியராக விளங்கியவர்.

நான் அதிபராக இருந்த காலத்தில் கல்லூரி நிர்வாகத்திற்கும் நிகழ்வுகளுக்குமான எல்லாச்சேவைகளையும் வழங்கியதுடன் அவை சிறப்பாக நிகழ்வதற்கும் உதவிவந்துள்ளார். மொத்தத்தில் இவரின் செயற்பாடுகள் யாவும் கல்லூரியை நன்கு நேசித்த ஒருவர் என்பதற்குச் சான்றாக அமைந்தன என்றால் மிகையாகாது.

பொ.கமலநாதன், இளைப்பாறிய அதிபர்.

### பாரதிகண்ட புதுமைப் பெண்

'புனித மிக்க ஆசிரியர் சேவை' இதனை நன்கு உணர்ந்து அர்ப்பணிப்புடன் ஆசிரிய சேவையில் இணைந்தார். பள்ளிப் பருவத்தில் இருந்தே பாரதியாரின் புதுமைப் பெண்ணைப் போல நிமிர்ந்த நன்நடையும் நேர் கொண்ட பார்வையும் கொண்டு வாழ்ந்து வருகிறார். தனது மனச்சாட்சிக்கு சரியானது எனப்பட்டதை எந்தவித தயக்கம் இன்றி எவரையும் புண்படுத்தாமல் கூறிவிடுவது அவரது தனித்தன்மையாகும். தனது மாணவர்களின் கல்வியிலும், ஒழுக்கத்திலும் மிகுந்த அக்கறைகொண்டிருந்தார். விளையாட்டு மைதானத்தில் மாணவர்களை ஊக்குவிப்பதில் இவர் என்றும் முன்னிற்பது வழக்கமாகும்.

கண்டிப்பு மிக்கவராகக் காணப்பட்டாலும் அதன் பின்பு அவரது அன்பும் அக்கறையும் இருப்பதை மாணவர்கள் நன்கு உணர்ந்து இருந்தார்கள். தனது சக ஆசிரியர்களை சகோதரர்களாக நேசித்து அவர்களது சுக துக்கங்களிலும் பங்கு கொள்வது அவரது சிறப்பு இயல்பு ஆகும். இவர் நலமாக வாழ்ந்து சுகமாக இருக்க எல்லாம் வல்ல எம் பெருமான் அருள் புரிவாராக.

முன்னாள் அதிபர், இ.மகேந்திரன்.

### அதிபர்களின் நன்மதிப்பை பெற்றவர்

திருமதி புனிதவதி மகேஸ்வரன் அவர்கள் அறுபதாவது அகவை பூர்த்திசெய்து இன்றுடன் ஆசிரியர் சேவையில் இருந்து ஓய்வுபெறுகின்றார். தான் கல்விகற்ற கல்லூரியிலேயே கால் நூற்றாண்டுகளுக்கு மேலாக சேவையாற்றும் பாக்கியம் கிடைத்தது மட்டுமல்லாமல் அரை நூற்றாண்டுகளுக்கு மேலாக தன்னை உருவாக்கிய கல்லூரியுடன் தொடர்பு வைத்திருந்தமை பாராட்டுக்குரியது. எமது கல்லூரியின் புகழ்பூத்த அதிபர்களாக விளங்கிய திரு.அ.பஞ்சலிங்கம் மற்றும் திரு.இ.மகேந்திரன் அவர்களை ஆசானாகக் கொண்ட இவர் அவர்கள் அதிபர்களாக இருந்த காலத்திலேயே ஆசிரியர் சேவையினை ஆற்றி அவர்களின் நன்மதிப்பை பெற்றுள்ளார். கொக்குவில் இந்துக் கல்லூரியில் நான்கு அதிபர்களின் கீழே பணியாற்றிய இவர் தான் கற்ற கல்லூரியிலேயே உப அதிபர் பதவியினை பெற்று தற்போது ஓய்வு பெறுகிறார். மாணவர்களின் கல்வி மேம்பாட்டில் தன்னை முழுமையாக அர்ப்பணித்து சேவையாற்றியதுடன் அவர்களின் ஒழுக்கத்திலும் மிகவும் கண்டிப்பானவராகக் காணப்பட்டார்.

எனவே, ஓய்வுபெறும் திருமதி புனிதவதி மகேஸ்வரன் அவர்களின் சேவையை பாராட்டுவதுடன் அவரது ஓய்வுகாலம் எல்லா வளங்களும் பெற்று சிறப்பாக அமைய வேண்டுமென இறைவனை வேண்டி வாழ்த்தி நிற்கின்றோம்.

இ.செல்வநாதன் J.P. (நகுலன்), செயலாளர், பாடசாலை அபிவிருத்திச் சங்கம், கொக்குவில் இந்துக் கல்லூரி.

### பூங்கா அமைத்த புனிதவதி

'செய்யும் தொழிலே தெய்வம்' என்ற கூற்றுக்கிணங்க தனது கடமையைப் பரிபூரணமாகச் செய்ய வேண்டும் என்ற உணர்வுடன் பணியாற்றியவர் திருமதி பு.மகேஸ்வரன் அவர்களாவார். இவர் எமது பாடசாலையின் பழைய மாணவியும் மாணவர் உள்ளங்களில் இடம்பிடித்த சிறந்த விஞ்ஞான ஆசிரியையுமாவார். அத்துடன் எமது பாடசாலையின் சபாபதி இல்லப் பொறுப்பாசிரியராகவும் பகுதித்தலைவராகவும் இருந்த இவர் உப அதிபராகப் பணியாற்றிய வேளையில் மாணவர்களின் நலன்கருதி ஒழுக்கக்கட்டுப்பாட்டுப் பொறுப்பாசிரியராகவும் பாடசாலைச் சுத்தமேற்பார்வையாளராகவும் பெண்கள் 'பாண்ட்' அணியின் பொறுப்பாளராகவும் கடமையாற்றினார். மேலும் இக் கல்லூரியின் தென் பகுதியில் பூங்கா அமைத்து கல்லூரிக்கு அழகுணர்ச்சியை ஏற்படுத்திய பெருமை இவரையே சாரும். இவரது ஓய்வுக்காலம் சிறப்புற அமைய வேண்டி ஆசிரியர் நலன்புரிச் சங்கத்தின் சார்பாக வாழ்த்துகின்றேன்.

திரு.மு.வேலாயுதபிள்ளை, தலைவர், ஆசிரியர் நலன்புரிச் சங்கம்.

### கடமை தவறாதவர்

திருமதி மகேஸ்வரன் அவர்கள் சிறந்த விஞ்ஞான ஆசிரியராக விளங்கியது மட்டுமல்லாமல் தனது பொறுப்பிருந்த ஆய்வு கூடத்திற்கும் தேவையான உபகரணங்களைப் பெற்றுக்கொள்வதிலும் ஆர்வம் காட்டியவர். மாணவர் நலனில் மிகுந்த அக்கறையுடன் செயற்பட்டவர்.

மாணவர் மற்றும் ஆசிரியர் ஆகியோரின் ஒழுக்கம், கடமை உணர்ச்சி போன்றவற்றில் கவனம் செலுத்திய அவர் கல்லூரியின் வளர்ச்சி, கௌரவம் ஆகியவை பேணப்படவேண்டுமென்பதில் கண்ணும் கருத்துமாக இருந்தவர்.

மேற்கூறிய பண்புகளைக் கொண்ட திருமதி மகேஸ்வரன் அவர்கள் உதவி அதிபராக ஆற்றிய சேவை மகத்தானதாகும்.

அவரின் ஓய்வு காலம் சமூகத்திற்கும் அவரது குடும்பத்திற்கும் பயனுள்ளதாக அமைய ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றேன்.

அ.பஞ்சலிங்கம், முன்னாள் அதிபரும், பழைய மாணவர் சங்கத் தலைவரும்.


**EMPLOYMENT OPPORTUNITY:**
**SECRETARY (01)**
**CARITAS HUDEC**
**14, Mathews Road, Deogu Street, Jaffna.**

To work in full partnership with Caritas Office Manager in Programme Activities. The post holder will have to undertake the following activies.

**Base Station:** ***Jaffna***

**Main Duties:**
- The post holder reports to the Director of Caritas HUDEC, Jaffna through the office Manager.
- Assist the Management on all secretarial duties & all programmatic matters.
- Translate documents to Tamil or English vice versa.
- Prepare *the* minutes of weekly, monthly, periodical Coordination Meeting.
- Responsible for incoming/ outgoing email, recording, delivering to Director.
- Assist Sectoral Managers in correspondence, reporting, letter drafting with government organizations, non government organizations, banks, & statutory body including the related E- mails.
- Able to write project proposals independently.

**Requirement:**
- Good command of English- written and spoken.
- Should have Secretariat / Administrative background.
- Advanced computer skills in Excel (Spreadsheet, Database Management) Word (reporting, graphs) Power Point & Internet e- mails
- Ability to work independently.
- Excellent analytical skills.
- Good team player.

Caritas HUDEC recruits qualified individuals without distinction of ethnic background, religion or gender.

If you would like to be a part of a dedicated team in a humanitarian context, please send us your CV & motivation letter including your contact no. & minimal two reference to the following address, latest by **22nd April 2009**.
Female candidates are encouraged to apply.

**Director,**
**Caritas HUDEC,** **or** **E-mail: hudec@sltnet.lk**
**14 Mathews Road, Deogu Street,** **T.P: 021 2222571, 0790**



# உடுப்பிட்டி
# ப.நோ.கூ.சங்கம்
## இப்பொழுது நாம்
MMBL MONEY TRANSFER
An Aitken Spence MMBL COMPANY
WESTERN UNION
மணி ட்ரான்ஸ்பர்
## முகவராகச் செயற்படுகின்றோம்
உலகின் எப்பாகத்தில் இருந்தும் உங்கள் உறவுகளின் பணத்தைப் பாதுகாப்பாக உங்களிடம் வழங்க நாம் காத்திருக்கின்றோம்.
எம்முடன் தொடர்பு கொள்ளுங்கள்.
தொலைபேசி இலக்கம் : 021 226 3342
தொலைநகல் இலக்கம் : 021 226 4036


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மூலிகை வங்கியைப் பேணி வளர்ப்பதன் ஊடாகவே சித்த மருத்துவத்துறைசார் வளர்ச்சியை விரைவுபடுத்த வழிபிறக்கும்

## இயற்கை மூலிகைகள் சித்த வைத்தியத்தின் உயிர்நாடி



**பகுதி - 07**

மூலிகைத் தாவர இனங்கள் அழிந்து போகாமல் பாதுகாக்கப்பட வேண்டுமானால் மூலிகை வங்கி போன்றை உருவாக்கிப் பேண வேண்டியது அவசியமென இக்கட்டுரைத் தொடரின் 06 ஆம் பகுதியில் குறிப்பிட்டிருந்தேன். அந்தவகையில் மூலிகைகளைச் சரியாக இனம் காண்பதற்கும் இத்தகைய முயற்சி உறுதுணையாக அமையும்.

### மூலிகைகளை இனங்காண மூலிகை வங்கி,மூலிகைத்தோட்டம் என்பன உதவும்

மூலிகைகளைச் சரியாக இனங்காண வேண்டியது இத்துறைசார்ந்த மருத்துவத்துக்கு முக்கியமான தேவையாகும். சித்தர்கள் அளந்து எழுதிய சித்த ஆயுள் வேத மருந்துகளில் பயன்படுத்தப்படும் மூலிகைகள் சரியானதாகவும், அளவு சரியானதாகவும், குறித்தெழுதிய அனைத்து மூலிகைகளும் உள்ளடங்கியதாகவும் இருக்க வேண்டும். இவற்றில் ஏதேனும் மாற்றம் செய்யப்பட்டால் அவர்கள் எழுதி வைத்த ''கணக்கு'' தப்பிதமாகிவிடும். மருந்து வேலை செய்யாது. வைத்தியமே ''சரியில்லை'' என்றாகிவிடும். இங்கே சித்தர்கள் மூலிகைகளைச்

## மூலிகைகளை இனம் காண்பதும் ஒரு கலையே!

சரியாக இனங்காண்பதில் பாண்டித்தியம் பெற்றிருக்க வேண்டும். அந்த கற்றல் செயலுக்கு இன்னும் முக்கியத்துவம் கொடுக்கப்படவேண்டும். ''குணபாடம்''என்ற பிரிவு மூலிகைகளை இனங்காண்பதில் மேலும் விருத்தியடைய வேண்டிய தேவை முன்வைக்கப்படுகின்றதனை உணர்வீர்.

### மூலிகைகளை இனங்காணுதல்

சரியான மூலிகை சரியாகவே வேலை செய்யும். ஆனால் ஒரே சாயலில் கிட்டத்தட்ட ஒரேமாதியான புறவியல்புகளை, தோற்றமைப்புக்களைக் கொண்டிருப்பதனால் ஒன்றுக்குப் பதிலாக இன்னொன்றைப் பயன்படுத்துகின்ற தன்மை எதிலும், எவற்றிலும் பெருகி வருகின்றது. மூலிகைகள் இதற்கு விதிவிலக்கல்லவே!

எம் முன்னோர்கள், ஆதிகால சித்தர்கள்''தாவரவியல்'' படித்திருக்கவில்லையாயினும் , மூலிகையொன்றைப் பார்த்து, உணர்ந்து, முகர்ந்து சரியானதைத் தேர்ந்தெடுப்பார்கள். இது ஒரு கலையாகவே நோக்கத் தக்கது. எங்கும் எதிலும் செய்பவை எல்லாம் தனித்துவம் வாய்ந்த கலைகளாகவே கருதப்படுவதனால், சித்தர் மருத்துவத்துறையும் கலைக்குள்ளே இன்னும் இருக்கிறது. இங்கிருப்பது பாதுகாப்பு, சிறந்தது என அறிஞர் பலர் எடுத்துரைத்தாலும் இக்கால சித்தர்கள் என்னவோ அதற்குள் அவதிப்படுவதாகவே தெரிகிறது. ஒரு இனத்துக்கு என்றொரு விடிவுகாலம் சுதந்திரமாக சுயமாகச் செயற்பட விடும்போது மட்டுமே கிடைக்கும். இதில் எவ்வளவு உயிர்கள் விதைக்கப்பட்டு விட்டன. ஆனால், அதனை ஒரு துறையாக வரம்பு போட்டு அங்கே அளந்து வைப்பதனால் ஆகுவது ஏதுமில்லை. நம்மவர் மருத்துவத்தை மேம்படுத்த நம்மவர் கலைகள் மனங்கொண்டிருப்பது நல்ல சகுனம்.ஆனால் நம்மவர் அவர்தம் சுதேச மருத்துவத்தை வளர்க்கவும் மனங்கொள்ள வேண்டும்.


இக்காலச் சித்த மருத்துவம் பயில்பவர்கள், மூலிகைகளைச் சரியாக இனங்காணுதலில் சித்தி பெற்றிருக்க வேண்டுமென்பது பலரது விருப்பமாகும். இவர்கள் இத்துறையில் சிறப்புற விஞ்ஞான பீடத்தின் தாவரவியல் துறை, விவசாயபீடம், மற்றும் மூலிகைகளை சரியாக இனங்காண்பதில் தேர்ச்சி பெற்ற மக்களின் உதவியைப் பெற்றிடலாம். மாறாக மூலிகைகளே உணவாக இருப்பதனால் தாவரவியல் துறையிலும் விவசாயபீட உயிரியல் மற்றும் பயிரியல் துறைகளில் இவை பற்றிய கற்கை நெறிகளை ஆய்வுகளை மேலும் விரிவுபடுத்தலாம். அத்துடன் மருதனார் மடத்தில் இயங்கும் விவசாய நிறுவனத்தின் கற்கை நெறிகளில் மூலிகைகள் பற்றிய அறிவு, விளக்கங்கள் அவர்களது பாடத்திட்டத்தில் அறிவுக்குத் தேவையானஅளவு இனங்காணுதல், பாகுபாட்டியல் என்பவற்றைச் சேர்க்கலாம். விவசாய கல்லூரிகளிலும் இது தொடர்பான கற்கைகளுக்கு சிறிதேனும் முக்கியத்துவம் கொடுக்கலாம்.

### பரியாரிமார்

மூலிகைகளை இனங்காண்பதில் ''பரியாரிமார்'' களுக்குத் தேர்ச்சியுண்டு. இவர்கள் அந்தந்த ஊர்களில் குறிப்பிட்ட ஒரு நோய்க்குச் சிகிச்சை செய்வதில், குணமாக்குவதில் வல்லமை பெற்றவர்கள். அந்த நோய்க்குப் பயன்படுத்தப்படும் மருந்துக்கு, குளிகைகளுக்கு, எண்ணெய்க்கு என குறிப்பிட்ட மூலிகைகளைத் துல்லியமாக இனங்காண்பதிலும், அவற்றின் வெவ்வேறு வகைகளைத் தரம்பிரித்தலிலும் வல்லமை பெற்றவர்களாவர்.

### சுதேசவைத்தியர்களிலும் மூலிகைகளை இனங்காண்பவர்களுண்டு

சுதேச வைத்தியர்களிலும் மூலிகைகளைச் சரியாக இனங்காண்பவர்கள் உண்டு. இது வெறுமனே படிப்பறிவுடனான விடயமாக அல்லாது, அனுபவஅறிவையும் சேர்த்து பயன்




படுத்தப்பட வேண்டும். பாவட்டையும், ஆடாதோடையும் பலருக்கு, அவர்களின் விரிந்த, பரந்த கண்களுக்கு ஒன்றாகவே தெரியும். மூலிகைக் கண்கொண்டு பார்ப்பவர்களும் எங்களூர் கிராமத்தவர்களும் இதனை இலகுவில் வேறு பிரித்தறிவர். ஆடாதோடைக்குப் பாவட்டையும், பாவட்டைக்கு ஆடாதோடையும் மாற்றிப் பாவிக்கக்கூடாது. மூலிகைக் குணங்களில் இரண்டுக்கும் வித்தியாசம் உண்டு. ஆனால் ஒன்றில்லாத நிலையில் மற்றையதை ''சாட்டுக்காக'' பயன்படுத்தும் நிலை பல இடங்களிலிருக்கின்றது. மருந்து செய்யவேண்டும் என நினைப்பவர் சித்தர்கள் விதந்துரைத்த, பரிகரணஞ் செய்ய இது என எழுதி வைத்ததை மாற்றி இருப்பதை வைத்து வைத்தியம் செய்ய நினைப்பதும், செய்வதும் [illegible] செய்தொழிலில் சுத்தம் வேண்டும். அதுவும் அத்தொழிலை சித்தர்கள் கூறிய முறைப்படியே செய்தல் வேண் டும்.

மூலிகைகளைச் சரியாக இனங்காண்பதில் பொதுமக்களிலும் பலர் உள்ர். ''மூலிகைக் கனகர்'' என ஒரு பெரியவர் யாழ்ப்பாணத்திலுள்ளார். இவருக்குப் பல மூலிகைகளைச் சரியாக இனங்காணுவதில் சிறந்த பரிச்சயம் உண்டு. குறிப்பிட்ட மூலிகைகளிலும் பல வகைகள் உண்டு. அவற்றையும் சரியாக இனங்காணும் இவரது அறிவு, அனுபவத்திறனை இத்துறை சார்ந்து மூலிகைகளைச் சரியாக இனங்காணுவதில் அங்கும் இங்குமாக அங்கலாய்ப்பவர்கள் பயன்படுத்திக் கொள்ளவேண்டும். மேலே குறிப்பிட்ட ''மூலிகைக் கனகர்'' போன்ற பெரியவர் போல பலர் நம்மிடையே இருக்கிறார்கள். இவர்களை இனங்கண்டு கொள்வது நல்லது. இவர்களுக்கு மூலிகை பற்றிய அறிவுடன் எமது பிரதேசத்தில் எந்த இடத்திலே, எவரது காணியிலே எந்த மூலிகை இருக்கிறது என்று தெரிவது தான் குறிப்பிடத்தக்க விடயம். அருமை பெருமையாக இருக்கும் மூலிகைகள் வளர்ந்திருக்கும் அல்லது தப்பிப் பிழைத்திருக்கும்'இடத்தை அறிந்து வைத்திருப்பதனால் இவர்களின் உதவியுடன் அரிய மூலிகைகளைக் கண்டறிந்து அவற்றை இனம்பெருக்கி அழிந்து விடாமல் பாதுகாக்கமுடியும். இதற்காக ''மூலிகை வங்கி'' ஒன்றின் உதவி மிகமிக அவசியம்.

### மூலிகை வங்கி - ஆரம்பம் திருநெல்வேலியில்

எமது பிரதேசத்திற்குரிய, பிரதேசத்தில் வளரக்கூடிய மூலிகைகளை ஓரிடத்தில் வளர்ப்பதற்காக போடப்பட்ட திட்டம் நாளடைவில் திருநெல்வேலியிலுள்ள மாவட்ட விவசாயப் பயிற்சி நிலையம் அமைந்துள்ள காணியில் அதன் ஒரு பகுதியில் ஆரம்பத்தில் சித்த வைத்தியத்துறையும் மாகாண சுதேச வைத்தியத்துறையும் இணைந்து மாதிரி மூலிகைத்தோட்டம் ஆரம்பித்து அதனது விருத்தி மந்தகதியிலிருந்த நிலையில், மாகாண சுதேச வைத்தியத் துறையின் சங்கானைபிரிவின் சித்த ஆயுள்வேத வைத்திய அதிகாரி டாக்டர் கனகேஸ்வரி ஜெபநாமகணேசன் அவர்களின் முழுமுயற்சியில் விவசாய உயிரியல் துறையுடன் சேர்ந்து இந்த மூலிகைத் தோட்டம் புதுப்பிக்கப் பட்டது. இதற்குப் பிராந்திய விவசாய விரிவாக்க பிரிவின் உதவியும் கிடைத்தது. இம் மூலிகைத் தோட்டத்தில் ஏறத்தாழ 370 மூலிகைகள் நடப்பட்டுள்ளன. முழுக்க முழுக்க மூலிகைகளை இனங்காணுதல் தொடர்பாக மூலிகைகள் அனைத்துக்கும்உரிய தமிழ், சிங்கள, ஆங்கில விஞ்ஞானப் பெயர்களும், குடும்பப் பெயர்களுடன் எழுதிவைத்துள்ளமை மாணவர்களும், ஏனையோரும் வந்து பார்த்து அறிந்து செல்ல மிகவும் உதவியாக இருக்கிறது.

மாகாண ஆயுர்வேத வைத்திய துறையின் தற்போதைய பணிப்பாளராகவுள்ள டாக்டர் (திருமதி) துரைரட்ணம் அவர்களது அர்ப்பணிப்புடனான சேவை இவ்வயனைத்தும் இங்கு நடைபெற ஊக்கந்தருவதாக உள்ளது.

அராலியில் திருநெல்வேலியிலுள்ள மூலிகைத்தோட்டத்துடன் மாகாண சுதேச மருத்துவத் துறையினரால், அராலி என்னும் ஊரில் வண்ணை சிவன் ஆலயத்துக்குச் சொந்தமான காணியில் மூலிகைகளை அதிகளவில் உற்பத்தி செய்வதற்கான ஆரம்ப வேலைகள் பூர்த்தியாகிக் கொண்டிருக்கின்றன.

### கைதடியில்

கைதடி சித்த மருத்துவ துறையிலுள்ள சிறிய காணிப்பரப்பில் உருவாக்கப்பட்டுள்ள மூலிகைத் தோட்டத்தின் பயனை மேலும் பலர் பெற வேண்டும் என்ற நிலையில் UNDP நிறுவனத்தின் அனுசரணையுடன் கைதடி ஆயுள்வேத வைத்திய சாலையில் அங்கு பணிபுரியும் அனைவரினதும் முழுமையான பங்களிப்புடன் கைதடி மட்டுவில் பகுதிகளில் தெரிந்தெடுத்த விவசாய பெருமக்களுடன் இணைந்து விவசாய உயிரியல் துறையின் ஆலோசனையின் கீழ் மூலிகைத் தோட்டம் அமைக்கப் பட்டுள்ளது. உப்புத்தரையில் கல்லுப் பூமிக்குள் எப்படி மூலிகை வளரும் என வீரம் பேசிய மேதாவிகளுக்கு ''இப்படியும் முடியும்'' என மூலிகைத் தோட்டத்தை உருவாக்கி இருக்கிறார்கள். இதன் மூலம் அங்கு அதிகளவில் பயன்படுத்தும் மூலிகைகளைப் பாரிய அளவில் வளர்த்து மருத்துவத் தேவைகளுக்குப் பயன்படுத்தக்கூடியதாக இருப்பதுடன் அருகில் இருக்கும் சித்தவைத்தியமாணவர்கள் படிப்பதற்காகவும் வைத்திய சாலையை நாடி வரும் மக்களுக்கு மூலிகை பற்றிய அறிவை வளர்க்கக்கூடியதாகவும் உள்ளது.

உள்ளூர் மருத்துவத்திற்கான இவ் வைத்தியசாலையின் பணிகள் சிறந்தோங்க இம் மூலிகைத்தோட்டம் அமைக்கப்பட்டுள்ளது. அதுவும் கைதடி, மட்டுவில் மக்களின் உதவியுடன் இவ்வளவும் நடந்தேறி இருக்கின்றது.

*(வளரும்)*



கலாநிதி கு.மிகுந்தன்
தலைவர், விவசாய உயிரியல்துறை,
விவசாயபீடம்,
யாழ்.பல்கலைக்கழகம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கோடை மழை....................

(07 ஆம் பக்கத் தொடர்ச்சி...)

சிறிது கடகடத்த அந்தப் படலை மீது நமக்கு இலகுவில் நம்பிக்கை பிறப்பதாகத் தெரியவில்லை. ஆனபடியால் கிழவி, வழக்கமாகப் போகும் பொட்டு வழியாக நாமும் துணிந்து உள்ளே போவோம்.

சுளகு ஒன்றிலே ஒடியற் கிழங்கு காய்ந்துகொண்டிருக்கின்றது. பக்கத்திலே ஈக்கிலே ஜம்மென்று குந்தியிருந்த பழ மிளகாய் ஒன்று காக்கைகளை எல்லாம் விரட்டியடித்துக் கொண்டிருக்கின்றது. வாசலுக்குக் கொஞ்சம் தள்ளி ஆடு கட்டியிருக்கிறது. பக்கத்தில் ஒரு உழவாரப் பிடியும் கொஞ்சம் புல்லுக் கட்டும்.

ஆடோ, உழவாரமோ புல்லைக் கவனிப்பதாகத் தெரியவில்லை.

அரைச்சாக்கு நெல்லு காயப்போடக் கூடிய அளவுக்கு ஒரு குந்து. அதை ஒட்டியபடி கிடக்கும் மண் சுவரில் கரிக்கணக்கு எழுதாத இடமாகப் பார்த்து, ஒரு திகதி இல்லாத முருகன் காலண்டர் பரிதாபமாகத் தொங்குகிறது. வள்ளியம்மை தெய்வானையருடைய டிரஸைப் பார்த்த அளவில் 'பொங்கு கை' பாஷன் பிரபலமாயிருந்த காலத்தில் காலண் டர் அச்சாகி இருக்க வேண்டும் என்று தோன்றியது.

கிழவி, கோடிப் பக்கத்தில் இறால் நோண்டிக்கொண்டிருந்தாள், பக்கத்தில் இருபது வயது மதிக்கக்கூடிய இளைஞன் ஒருத்தன் சோகம் ததும்ப நின்றுகொண்டிருந்தான்.

''ஏட பாவி! உன்னைப் பெத்த வயிறு நெருப்பாய் எரியுமேடா? எப்படித்தான் உனக்கு மனசு வந்தது''

''நான் என்னணை ஆச்சி செய்ய? கொழும்பிலை வேலை ஒண்டுக்கு கட்ட வேணும். அந்த மனிஷிக்கு எப்படிப் போட்டு விளங்கப்படுத்தியும் ஏறுதில்லை. என்னை வேறை என்ன செய்யச் சொல்லுகிறாய்? வேலையானதும் முதல் சம்பளத்திலேயே மீண்டுபோடுறன். இப்ப மாத்திரம் என்னைக் கைவிட்டிடாதேயணை! வீட்டிலே பொலிஸ் எல்லாம் வந்து சோதினை நடக்குது.''

''என்ன.....! பொலிசுக்கும் சொல்லிப் போட்டே என்னட்டை வந்தனி! எனக்கு வேண்டாம் ராசா. இந்தச் சள்ளை! நாளைக்குப் பொலிசுக்காரன்கள் வந்து என்னைப்பிடித்து நாலு கேள்வி கேட்க... நான் தறதறவென்று முழுச....''

இளைஞன் கொஞ்சம் உலக சம்பிரதாயம் தெரிந்தவனாகக் காணப்பட்டான்.

''எணை ஆச்சி ! நீ பயந்து சாகிறாய்? இப்ப நான் உதைப் பெரிய கடையிலை கொண்டு போய் வைக்க மாட்டேனே, உன்னட்டை என்டால் அயலுக்கை.... ஏதோ.... அஞ்சு... பத்து... உனக்கும்''

'அஞ்சுபத்து' மாத்திரம் உடனே பலித்தது!

கிழவி இறாலைக் கழுவி எடுத்துக் கொண்டு உள்ளே போனாள். இவ்வளவு நேரமும் காத்திருந்த காகத்தின் வாயில் மண்ணைப் போடுவதற்கென்று எங்கிருந்தோ ஓடிவந்த கிழவியினுடைய வாடிக்கை நாய், அரிவாளை நக்கி எடுத்து, கிழவிக்கு ஒத்தாசை செய்தது.

முந்தாணையால் கையைத் துடைத்தபடி''எங்கை எடு பார்ப்பம்'' என்று கையை நீட்டினாள் கிழவி.

நல்ல கனம். குறைஞ்சது நானூறு மதிக்கலாம் என்று கிழவியின் அனுபவக் கை கூறியது.

'' இது என்ன இரண்டரைப் பவுணும் தேறாது போலக் கிடக்கு? எவ்வளவு கேட்கிறாய்?''

''ஒரு முன்னூறு...''

''இப்ப உங்கை ஆரிட்டை மாறிறது? செல்லாச்சியும் மூத்த மோளின்ரை பிள்ளைப் பெத்துக்குச் சிலவழிச்சுப் போய் நிற்கிறாள். சின்னமோனை படுத்து படுக்கையாய் கிடக்கிறான்...'' இன்னும் என்னவோ எல்லாம் கிழவி முணுமுணுத்தாள், காதில் விழவில்லை.

மடியை இறுக்கிக் கட்டிக்கொண்டு, இறப்பிலே செருகி இருந்த தடுக்கை இழுத்துத் தட்டி, குந்திலே போட்டாள் கிழவி. ''உதிலை இரடா மோனை! அஞ்சு நிமிட்டிலை வந்திடுறன்... உந்தக் கட்டையிலை போறவன்ரை மாடு வந்திடும்.... ஒருக்கால் பார்த்துக்கொள்...'' என்றபடி பிலாவிலைக் கம்பியையும் தூக்கிக் கொண்டு ' முணுமுணு' என்று தன் சொந்தப் பாசையில் ஏதோ பேசியபடி புறப்பட்டாள் கிழவி.

''பெத்த தாயிட்டைக் களவெடுத்துக் கொண்டு வந்திருக்கு மூதேவி! என்னெண்டுதான் உருப்படப் போகுதோ லோகம் கெட்டுப் போச்சு... கனகத்தின்ரை மூத்தவன் ஒரு போங்கு... அவளுக்கும் வேணும்... கொக்குவிலிலை தன்னட்டைத்தான் கல்லட்டியல் கிடக்கு என்ற கெறுக்கு... முத்தாச்சியின்ரை செத்த வீட்டுக்கு வந்த இடத்திலை என்னோடை கட்டிப் பிடிச்சு அழக்கூட இல்லை!''

நாலு வீட்டுக்கும் போய் கிழவி வருவதற்கிடையில் இளைஞனுடைய முக்கால்வாசிப் பிராணனும் போய்விட்டது. தடுக்கில் இருந்த நெட்டியெல்லாவற்றையும் பிய்த்துப் பிய்த்துப் பல்லைக் குத்தியபடியே இருந்தான்.

சமய சந்தர்ப்பம் தெரியாமல், நிரை விட்டுப்போன கொள்ளி எறும்புகள் வேறு இடைக்கிடை அவன் காலை உருசி பா[illegible]தன.

புல்லுக்கார மனுஷி [illegible]ன்று, என்ன [illegible] இழவோ சமுசயப்பட்டு, [illegible]ரும்பித் தி[illegible]ம்பிப் பா[illegible]தபடியே போனாள்.

அவள் அந்தப் பக்கமும[illegible] [illegible]ருகிறவள் கால்சட்டை போட்டபடி குந்தில் இருக்க வெட்கம் பிடுங்கித் தின்றது.

பன்னிரண்டு மணிபோல கிழவியார் யாரையோ திட்டிக் கொண்டே அவர்கள் ஏழேழு தலைமுறையும் என்னென்ன வியாதி வந்து சாக வேண்டுமென்று 'லிஸ்டு' தயாரித்தபடியே வந்துகொண்டிருந்தாள்.

பிலாவிலை நிரம்பி வழிந்தது.

வந்தவள் வெகு சாவகாசமாகக் குந்தி இருந்து ஒவ்வொரு இலையாகக் கிழித்து ஆட்டுக்குப் போட்டபடியே இருந்தாள்.

இளைஞன் பொறுத்துப் பொறுத்துப் பார்த்தான். கிழவி பேசுவதாய்க் காணோம்! நெருப்புக்கு மேலே இருப்பதுபோல் இருந்தது அவனுக்கு.

''என்னணை ஆச்சி...போன விஷயம்?''

''நான் என்னத்தைச் செய்ய?... எல்லாரும் பஞ்சம் கொட்டுறாளவை... உனக்குத் தெரியுமே...மூளிக்கார கந்தையற்றை பேத்தி....இப்ப அவள்தான் புதுப்பணக்காரி. தன்ரை அற்பக் குணத்தை என்னிலே எல்லே காட்டுறாள். கேளடா மோனை... கண்டறியாத பூனை கமுகிலை ஏறி...?''

அவனுக்குப் பொறுமையில்லை.... ''அப்ப நான் வரப் போறேன்.... நீ அதை ... எடு!''

''என்னடா அதுக்கிடையிலே கோவிக்கிறாய்! ஆக கொக்குவிலிலை அவள் ஒருத்திதானே பணக்காரி. மற்ற எல்லோரும் செத்துப் போனாளவையே? இந்தா... இவ்வளவு தான் தேறிச்சுது... ஒருத்தியிட்டையும் இந்த நேரம் இல்லை!''

''எவ்வளவெணை கிடக்கு?''

''எண்ணிப் பாரேன்! இருபத்தேழு தந்தாள் பாவி. நான் ரெண்டு எடுத்திட்டன். மிச்சம் இருநூற்றம்பது இருக்குது. மாதக் கடைசியிலே மீண்டு போடு.''

'எம காதகி' என்று முணுமுணுத்தபடியே கால் சட்டை பைக்குள் காசை வைத்துக் கொண்டு புறப்பட்டான் இளைஞன்.

* * *

கச்சான் காற்று அடித்து ஓய்ந்து, மறுபடியும் சோளகம் வீசத் தொடங்கிவிட்டது.

கொழும்புக்குப் போனவன் திரும்பி வந்த ஒரு அசுகை அசுமாத்தத்தையும் காணவில்லை.

கிழவி எதிர்பார்த்ததுதான்.

கிழவிக்கு என்ன பைத்தியமா, நல்ல பெறுமதியான நகையைக் கொண்டுபோய் வேறுயாரிடமும் வைப்பதற்கு? நகையை வாங்கி வைத்துக்கொண்டு 'வாயைக் கட்டி வயித்தைக் கட்டி' சேர்த்த தன்னுடைய காசைத்தான் கொடுத்திருந்தாள்.

மறுபடியும் வந்து கேட்டால் 'கண்டது ஆர் கேட்டது ஆர்' என்று அடிச்சு மூடி விட்டால் போகிறது...'

அன்றைக்கென்று கிழவியினுடைய மூத்த மகள் வந்திருந்தாள்.

''எணை ஆச்சி என்ரை மோளின்ரை சாமத்தியச் சடங்கைக் கொஞ்சம் 'பப்ளிக்'காய் நாலுபேருக்கும் சொல்லிச் செய்யப் போறன். சிலவுக்கு ஒரு நானூறு எங்கையாலும் மாறித்தாவன். சடங்கு முடிஞ்ச கையோட திரும்பித் தந்திடுவன்.''

''இதென்னடி நீ! 'சுடுகுது மடியைப் பிடி' எண்டால் ஆர்தருவினம். அதுவும் ஆரெண்டாலும் சும்மா தாறண்டவளவையே...?''

''என்னணை ஆச்சி! ஊரிலை நான் குடுத்த காசெல்லாம் நிக்கு. பொடிச்சியின்ரை சடங்கோட ஒரு ஐந்நூறு அறுநூறாவது சேரும்... உன்ரை காசு எனக்கென்னத்துக்கு, அஞ்சு சத வட்டியோட அப்பிடியே தந்திடுறன்''

''சரி, நீ வீட்டை போ! நான் உங்கினைக்கை பாத்திட்டு வாறன்'' என்று கிழக்குப் பக்கம் கையைக் காட்டினாள் கிழவி.

பாக்கியமும் கிழவியினுடைய மகள் தானே. கிழக்குப் பக்கம் கையைக் காட்டினால் மேற்குப் பக்கத்தில்தான் எங்கோ மாறப்போகிறாள் என்று அர்த்தம்.

''சீனியற்றை செல்லாச்சியாக இருக்குமோ'' என்று ஊகித்தபடியே எழுந்து புறப்பட்டாள் பாக்கியம்.

* * *

வெய்யில் காய்ந்துகொண்டு தானிருந்தது. எனினும் கிழவியினுடைய தீட்சண்ய புத்தியிலே மழை பெய்யும் போலப்பட்டது.

அப்படியே காயப்போட்ட விறகுகளை அவசர அவசரமாக அள்ளி 'அசைவிலே' அடுக்கினாள்.

பிலாவிலைக் கம்பியையும் தூக்கிக் கொண்டு, அடிக்கடி மடியைத் தொட்டுப் பார்த்தபடியே புறப்பட்டாள் கிழவி.

சொந்த மகளிடமே வட்டிக்குக் கொடுக்கும் சுவராஸ்யத்தை இதற்கு முன்பு அவள் அனுபவித்தது கிடையாது.

செல்லாச்சியிடம் கொடுத்தால் கண்ணை மூடிக்கொண்டு நானூறு தருவாள்.

கிழவிக்கு என்னவோ ஞாபகம். மடியானைப் பிரித்துப் பார்த்தாள். ஏதோ மாதிரி இருந்தது.

வெளிச்சத்தில் எடுத்து உற்றுப் பார்த்தாள்.

வயிறு பகீரென்றது!

கண்ணெல்லாம் சுழட்டிக் கொண்டு வந்தது. நடுவழியில் கிழவி பொத்தென்று குந்திவிட்டாள்.

நடுங்கும் அந்தக் கையிலே கிடந்த நகை அவளைப் பார்த்து இளித்தது.

என்ன இருந்தாலும் பித்தளை பித்தளை தானே!

எங்கோ சேவல் ஒன்று படபடவெண்டு செட்டையை அடித்துக் கொண்டது.


மின்னவில்லை! முழங்கவில்லை!'படீர் படீர்' என்று தடித்த மழைத்துளிகள் அங்கும் இங்கும் பொட்டுப் பொட்டாக விழுந்து தெறித்தன.

கிழவியின் வரண்ட கண்ணீர் விழுந்த இடம் தெரியவே இல்லை!

இயல்பான கொக்குவில் புழுதியின் வாசனை கம்மென்று வீசியது. *

*(நன்றி: இந்த நூற்றாண்டின் ஈழத்துச் சிறுகதைகள் - இரண்டாம் பாகம் - ஒருகூடைக்கொழுந்து)*

## சொற்சிலம்பம் - போட்டி இல:57



அனுப்புபவர் பெயர்:........................................

விலாசம்:........................................

........................................

கையொப்பம்:........................................

### மேலிருந்து கீழ்

1. கணவனை இழந்தவள்.
2. பெண்களின் நவீன ஆடை வகை.
3. நவீன.
4. அழிவு/கெடுதல்.
5. தேர்.
6. ஒரு அசைச் சொல்.
9. மேசைக்கு அல்லது தரைக்கு விரிப்பது.
11. இறப்பின் நினைவுநாள்.
14. கருமையைக் குறிக்கும் சொற்களில் ஒன்று.
15. மிக நுணுக்கம்/ கன கச்சிதம்.
16. சட்டத்தின் ஆட்சியை நிலை நாட்டுபவர்.
17. வயலின் எல்லையில் அமைவது.
18. பாடசாலைகளுக்கு இது வருடத்துக்கு மூன்று.
19. உட்புறம்/ உள்ளே.
22. செல்வம்.
23. வீடு.

### இடமிருந்து வலம்

1. ஆகாயம்.
4. மகாகவி.
7. பொல்லு.
8. விளங்குதல்.
10. மருத்துவம்.
12. மருத்துவப் பணியாளர்.
13. பிரிபடாத.
16. தண்ணீர்.
17. பிறப்பின் பின் நடப்பது.
19. கத்தி, வாள் போன்ற ஆயுதங்களைக் கூர்மைப் படுத்த உதவுவது.
20. நோவு.
21. தேவாரம்.
23. சேர.
24. மீளுதல்.

### போட்டி விதிகள்

*1. வாசகர்எவரும் சொற்சிலம்பம் போட்டியில்கலந்து கொள்ளலாம்.*
*2. ஒருவர் எத்தனை கூப்பன்களையும் நிரப்பி அனுப்பலாம்*
*3. உதயனில் பிரசுரமாகும் கூப்பன்களே போட்டிக்கு ஏற்கப்படும்.*
*4. போட்டி தொடர்பாக ஆசிரியரின் தீர்ப்பே முடிவானதாகும்.*
*5. வெற்றி பெறும் முதல் மூன்று பேர்களுக்கு முறையே ரூபா 250/=, ரூபா 150/=, ரூபா 100/= பணப் பரிசில்கள் வழங்கப்படும். அத்துடன் பாராட்டுப்பெறும் ஐந்து அதிஷ்டசாலிகளது பெயர் விவரங்களும் உதயனில் பிரசுரிக்கப்படும்.*
*6. பூர்த்தி செய்யப்பட்ட கூப்பன்கள்,*

**சொற்சிலம்பம் போட்டி இல. 57**
*நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்)லிமிட்டெட்,*
*இலக்கம் 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.*

*என்னும் முகவரிக்கு எதிர்வரும் புதன்கிழமைக்கு அடுத்து வரும் புதன் கிழமைக்கு முன்னர் (29.04.2009) திகதிக்கு முன்னர் கிடைக்கத்தக்கதாக தபாலட்டையில் ஒட்டி அனுப்பிவைக்கப்பட வேண்டும்.*

*7. சொற்சிலம்பம் போட்டி இல. 57 இல் வெற்றிபெறுவோர்களது விவரம் 03.05.2009 ஞாயிறு உதயனில் பிரசுரிக்கப்படும்.*

★ வாசகர்கள் மத்தியில் குறிப்பாக மாணவ மாணவியர் மத்தியில் பொது உளச்சார்பு மற்றும் மொழி அறிவை வளர்த்து விடத் தூண்டுவதே இப்போட்டி நடத்தப்படுவதன் முக்கிய குறிக்கோள்.

★ ஒவ்வொரு போட்டியிலும் ஏராளமான வாசகர்கள் ஆர்வத்துடன் கலந்துகொள்வதுடன், அவர்களில் பெரும்பாலானோர் முற்றிலும் சரியான விடைகளை அனுப்பி வருவதால் பரிசுக்கும் பாராட்டுக்கும் உரிய அதிஷ்ட சாலிகள் குலுக்கல் முறை மூலம் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.

★ சொற்சிலம்பம் போட்டி இலக்கம்: 55 இற்கான சரியான விடைகள் வருமாறு:

**இடமிருந்து வலம்**

(1) பாதுகாப்பு (5) புண் (6) விரைவு (7) தியானி (9) தகர்த்தல் (11) புதல்வி. (13) தம். (14) பெண் (17) கூடிய (19) சய (20) வரம்பு (21) விரல் (22) திம்பு (23) உடும்பு

**மேலிருந்து கீழ்**

(1) பாவிப்பு (2) துரை (3) காவுதல் (4) புதிர் (5) புனிதம் (8) யாத்தல் (10) கவிதை (12) தந்திரம் (15) யதி (16) இயல்பு (17) அவதி (18) கம்பு (19) சரம் (21) விடு.

★ சொற்சிலம்பம் போட்டி தொடர்பான வாசகர்களது ஆலோசனைகளும் கருத்தில் எடுக்கப்படும்.

★ சொற்சிலம்பம் போட்டி இலக்கம் : 55 இற்கான சரியான விடைகளை எழுதி அனுப்பியவர்களில் குலுக்கல் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் மூன்று அதிர்ஷ்டசாலிகளது பெயர் விவரங்கள்வருமாறு:

**1 ஆம் பரிசு**
ஜெ.நிருத்திகா,
*பண்டத்தரிப்பு மகளிர் உயர்தரப் பாடசாலை, பண்டத்தரிப்பு.*

**2 ஆம் பரிசு**
வே.சுதன்,
*இல.24, மிருசுவில் நலன்புரி நிலையம், மிருசுவில்.*

**3 ஆம் பரிசு**
சு.பானுகோபன்,
*மலையாளந் தோட்டம், கரணவாய் தெற்கு, கரவெட்டி.*

பரிசில் பெறுவோருக்கான பணம் காலக்கிரமத்தில் அவர்களது முகவரிக்கு காசோலையாகப் பதிவுத் தபாலில் அனுப்பி வைக்கப்படும்.

### பாராட்டுப் பெறுவோர்

(1) சி.சித்திராங்கி,
இல.93/4, குமாரசுவாமி வீதி,
கந்தர்மடம்,
யாழ்ப்பாணம்.

(2) சி.அரசரத்தினம்,
மே/பா ராஜா மருந்துக்கடை,
பிரதான வீதி, சுன்னாகம்.

(3) செல்வன் சி.கிருத்திகன்,
யா/மிருசுவில் றோ.க.த.பாடசாலை,
மிருசுவில்.

(3) ஆர்.விஜயசிறி,
வேலணை கிழக்கு, 4 ஆம் வட்டாரம்,
வேலணை.

(4) சுதன்.பிரிந்தாவனா,
289,கே.கே.எஸ்.வீதி,
சுன்னாகம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




"என்னுடைய சக்திக்கும் அப்பாற்பட்ட இந்த மண்ணைக் கொண்டுதான் அந்த மூவரும் தப்பித்திருக்க வேண்டும். அப்படியானால் மந்திரத்தீவில் எங்கோ ஒரு மூலையில்தான் அவர்கள் ஒளிந்திருக்க வேண்டும்" என்று தனக்குத் தானே உரத்த குரலில் கூறினாள் மந்திரக்கிழவி.

பின்னர் வெறி பிடித்தவள் போல மாளிகையின் வாசலுக்கு ஓடினாள். "அடே! அடிமைகளே! எல்லோரும் உடனே இங்கே கூடுங்கள்" என்று கூவினாள். அவள் குரல் மாயத்தீவின் எல்லாத் திசைகளிலும் எதிரொலித்து அடங்கியது.



மந்திரக்கிழவியின் கட்டளையைக் கேட்ட மாத்திரத்திலேயே அவளின் ஏவலுக்குக் காத்திருந்த பூதகணங்கள் எல்லாம் மாளிகையை நோக்கி விரைந்தன. ஒரு சில நிமிடங்களில் மாளிகையின் முன்னால் மந்திரத்தீவிலுள்ள இராட்சதர்கள் அனைவரும் குழுமினர். "என் விசுவாசம் மிக்க அடிமைகளே! எனக்கு இளமையை உண்டாக்கக்கூடிய யாகத்திற்காக நரபலி கொடுப்பதற்கு அரச வம்சத்தைச் சேர்ந்த மூவரை இங்கே அடைத்து வைத்திருந்தேன். ஆனால் அவர்கள் என்னையும் என் மாயக்கண்ணாடியையும் ஏமாற்றிவிட்டு தப்பி விட்டார்கள். என்றாலும் இன்னமும் அவர்கள் இந்தத் தீவில்தான் தங்கியிருக்க வேண்டும். எனவே அவர்களை ஒருசில நாழிகைகளுக்குள் என் முன் கொண்டுவந்து நீங்கள் நிறுத்தவேண்டும். இது என்னுடைய கண்டிப்பான கட்டளை" என்று கூறிவிட்டு, மாளிகைக் கதவை இறுக மூடினாள் அவள். மாளிகையினுள் பதுங்கியிருந்த மூவருக்கும் என்ன செய்வதென்று தெரியாமல் இருந்தது.

(தொடரும்)

## பிரிவு

துடிப்புடன் பழகிடும் இதயங்களுக்கு
கிடைக்கும் பரிசு பிரிவுதான்
பழகிய நட்பு உண்மையானால்
பிரிவே நமக்கு தெரிவது இல்லை

## விருப்பம்

உயிருக்கு உடல் மீது விருப்பம்
பூவிற்கு மணம் மீது விருப்பம்
மழைக்கு மண் மீது விருப்பம்
நண்பி எனக்கு உனது
நட்பின் மீது விருப்பம்

ஜெ.அனித்தா, தரம் - 9,
யா/கொழும்புத்துறை இ.ம.வி.

## புத்தாண்டு


புத்தாண்டு பிறக்கட்டும்
புதுவாழ்வு திறக்கட்டும்
சொத்துக்கள் கிடைக்கட்டும்
சுக வாழ்வு தரிக்கட்டும்

ஆண்டொன்று பிறந்துவர
ஆனந்தம் துள்ளி வர
தாண்டவம் ஆடுகின்ற
சஞ்சலம் நீங்கட்டும்

ச.தஞ்சித்குமார், தரம் - 7,
யா/நுணாவில் கிழக்கு அ.மி.த.க வித்தி.




தி.கலைவாணி, தரம் - 9,
யா/மெதடிஸ்த பெண்கள் உ.பாட.


தி.ரிஷிகேசன், தரம் - 07,
யா/தம்பசிட்டி மெ.மி.த.க.பாட.


பி.ஜூட் பவுசியா, தரம் - 6,
செல.அன்ரனிஸ்.


க.நிரோசன், தரம் - 9A,
யா/கைதடி ஞா.ம.வித்தியாலயம்.


பா.திவானி, தரம் - 9E,
யா/வேம்படிப் பாடசாலை.


க.அனந்தா, தரம் - 7,
யா/கரம்பைக்குறிச்சி அ.த.க.பாடசாலை.

## உங்களுக்கும் பரிசில்கள்

### விடை தெரியுமா? - 12

1. யாழ்ப்பாணத்தை கடைசியாக ஆண்ட தமிழ் மன்னனின் பெயர் என்ன?
2. சர்வதேச ஒருநாள் கிரிக்கெட் போட்டியில் முதல் 50 விக்கெட்டுக்களையும் குறைந்த போட்டியில் வீழ்த்திய பந்து வீச்சாளர் யார்?
3. 'கான்சர்' என்பதற்கு கிரேக்க மொழியில் என்ன அர்த்தம்?
4. 'டார்ஜன்' என்ற சிறுவர்களுக்கான கதாபாத்திரத்தை உருவாக்கியவரின் பெயர் என்ன?
5. பிரபல நகைச்சுவை நடிகரான சார்லி சப்ளினின் பிறந்த நாள் எப்போது?

விடை தெரியுமா?
தெரிந்தால் 29.04.2009 இற்கு முன்னர் சரியான விடைகள் அனுப்பும் 6 மாணவர்களுக்கு பரிசுகள் வழங்கப்படும்.

### விடை தெரியுமா?-10
சரியான விடைகள்

(1) கிறிஸ் கெய்ல். (2) அஜ்மல் கஸாப்.
(3) கிப்சன்.
(4) கலப்பை / ஏர்.
(5) நாகேஷ்.

### பரிசுபெறுவோர்

01. பா.அம்புயன்,
தரம் - 8A , புனித பத்திரிசியார் கல்லூரி.
02. ஜெ.கஜருபன்,
தரம் - 9D, யாழ்.மத்திய கல்லூரி.
03. பா.பாருகன்,
தரம் - 9, கொக்குவில் இராமகிருஸ்ண வித்தி.
04. சி.கரிகரன்,
தரம் - 7B, மானிப்பாய் இந்துக் கல்லூரி.
05. சூ.பிரியதக்ஷி,
தரம் - 5A, தம்பசிட்டி மெ.மி.த.க.பாடசாலை.
06. சி.நிரோஜன்,
தரம் - 4B, கரவெட்டி மாணிக்கவாசகர் வித்தி.

குறிப்பு:
விடை தெரியுமா பகுதியில் பாடசாலை மாணவர்கள் மாத்திரமே பங்குகொள்ளவும். விடைத்தாள்களுடன் சிறுவர் கதிர் விண்ணப்பப் படிவம் கட்டாயம் இணைக்கப்படவேண்டும். விடைத்தாளுடன் பெயர், தரம், பாடசாலை போன்ற விபரங்களை மறக்காது குறிப்பிடுங்கள்.

## தெரியுமா?

01. மஞ்சள் கொடி குறிப்பது என்ன? - தொற்றுநோய்
02. சிவப்பு முக்கோணம் குறிப்பது என்ன? - குடும்பக்கட்டுப்பாடு
03. உடலைக் கெடாமல் வைத்திருக்கும் திரவம் எது? - ஃபார்டலின்
04. ஒரு மைல் என்பது எத்தனை கிலோமீற்றர்? - 1.601 கிலோ மீற்றர்
05. எயிட்ஸ் நோயைக் கண்டு பிடித்தவர் யார்? - லொக்மௌரிட்டர் (அமெரிக்கர்)
06. பம்பாய் நகரின் புதிய பெயர் என்ன? - மும்பாய்

த.தனஞ்செயன், தரம் - 6C, யா/சென்.ஜோன்ஸ் கல்லூரி.

## சிந்தனைத் துளிகள்

★ பதவியை விரும்புபவர்கள் மக்களுக்காக வாழ்ந்ததில்லை.
- காந்தியடிகள்.

★ தாமரையில் உருண்டோடும் பனித்துளி போன்றது மனித வாழ்க்கை.
- தாகூர்.

★ விவேகி எடுக்கும் முடிவு மிகவும் சரியாக இருக்கும் என்பதால் அதை மாற்ற வழி இல்லை.
- விதுரநீதி

★ படிப்பில் பிரியமில்லா அரசனாய் இருப்பதைவிட ஏராளமான நூல்களைக் கற்ற ஆண்டியாக இருப்பதே மேலானது.
- மெக்காலே.

★ உனக்குத் தெரியாததைத் தெரிந்தது என்று ஒப்புக்கொள்வதுதான் அறிவு.
- கன்பூசியஸ்.

★ அறிவற்ற சினேகிதரிடம் சேர்வதைவிட புத்திசாலியான விரோதியை அடைவது மேல்.
- ஷேக்ஸ்பியர்.

★ வேலை இல்லாமல் சும்மா இருந்தால் தனித்திராதீர். தனித்திடநேரின் சும்மா இராதீர்.
- டாக்டர் ஜோன்சன்.

★ தான் சிறந்த அறிவாளி என எண்ணுபவன் முட்டாள் மட்டுமல்ல. மற்றவருக்குத் துன்பம் கொடுப்பவனும் கூட.
- டைரர்.

கே.சயானி, தரம் - 9, உடுவில் மகளிர் கல்லூரி.

## துஷ்டனுக்கு உதவாதே!

ஒரு ஊரில் ஆடு ஒன்று மிகவும் பசியோடு உணவு தேடச் சென்றது. செல்லும் வழியில் காட்டில் "என்னைக் காப்பாற்றுங்கள்" எனச் சத்தம் கேட்டது. சத்தம் கேட்ட வழியின் அருகே சென்றது ஆடு. அங்கு ஒரு உரப்பையில் இருந்துதான் சத்தம் வந்துகொண்டிருந்தது. உரப்பையை அவிழ்த்துப் பார்த்தது ஆடு. அதற்குள் ஒரு நரி இருந்தது. வெளியே வந்த நரி ஆட்டைப் பார்த்து " எனக்கு மிகவும் பசியாக இருக்கிறது. உன்னை நான் சாப்பிடப் போகிறேன்" என்று கூறியது. அதற்கு ஆடு "நான்தான் உன்னைக் காப்பாற்றினேன். நீ கடைசியாக என்னைச் சாப்பிடப் போவதாகச் சொல்லுகிறாயே, உனக்கு இரக்கமே இல்லையா" எனக் கேட்டது. அதற்கு நரி "சாப்பிடத்தான் போகிறேன்" என்று கூறி, ஆட்டின்மீது பாய ஆயத்தத்தோடு நின்றது. அதற்கு ஆடு "வாருங்கள் இந்த அநியாயத்தை சிங்கத்திடம் தெரிவிப்போம்" என்றது. அதற்குச் சம்மதித்தது நரி. நரியும் ஆடும் வழியில் சிங்கத்தைக் கண்டன. சிங்கத்திடம் நடந்தவற்றை தெரிவித்தது ஆடு. ஆட்டைப் பார்த்த சிங்கத்துக்குப் பாவமாக இருந்தது. பிறகு சிங்கம் ஆட்டைக் காப்பாற்றுவதற்காக யோசித்து விட்டு நரியிடம் "ஆடு சொன்னதை நான் நம்பவில்லை. நேரில் சென்று பார்ப்போம் வா" என அழைத்தது. நரியும் ஆடும் அதற்குச் சம்மதித்தன. பிறகு நடந்த இடத்துக்குச் சென்றன. சிங்கம் நரியை உரப்பையில் கிடக்கச் சொல்லியது. நரியும் கிடந்து காட்டியது. அதுதான் சமயம் என நினைத்த சிங்கம் நரியை அதற்குள் வைத்துக் கட்டியது. பிறகு சிங்கம் சிரித்தபடி ஆட்டிடம் "இப்படி ஆபத்தானவர்களுக்கு உதவி செய்யாதே" எனக்கூறிச் சென்றது. ஆடும் மகிழ்ச்சியில் தான் வந்த வழியாகவே உணவு தேடச் சென்றது.



யோ.ரமணியா, தரம் 07,
யா/நாரந்தனை றோ.க.ம.வி.

## நீங்களும் எழுதலாம்



(தரம் 9 - இற்கு உட்பட்ட மாணவர்கள் மாத்திரம்)
மாணவர்களே!

'சிறுவர் கதிரில்' உங்களின் கதைகள், கட்டுரைகள், கவிதைகள், விடுகதைகள், பொன்மொழிகள், பொது அறிவு விடயங்கள், ஓவியங்கள் போன்ற ஆக்கங்கள் பிரசுரமாக வேண்டுமா? அப்படியானால் கீழுள்ள படிவத்தை பூர்த்தி செய்து, உங்கள் ஆக்கங்களோடு இணைத்து அனுப்பிவையுங்கள். தரமானவை பிரசுரமாகும். அனுப்ப வேண்டிய முகவரி:-

'சிறுவர் கதிர்', உதயன்
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

மாணவர் பெயர் :-..............................
தரம் :-..............................
பாடசாலை :-..............................

இத்தோடு இணைக்கப்பட்டுள்ள ஆக்கம், குறித்த மாணவரின் சுய ஆக்கமென சிபார்சு செய்கின்றேன்.

.................... ....................
திகதி வகுப்பாசிரியர் கையொப்பம்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 31 ஆம் நாள் நினைவில் அஞ்சலி செய்கிறோம்



தோற்றம்: 29★12★1951 மறைவு 21★03★2009

### அமரர் சிவபாதசுந்தரம் சிவயோகநாதன்

கடந்த 21.03.2009 அன்று சிவபதம் அடைந்த எமது கல்வி நிறுவன ஆசிரியை செல்வி சி.துர்சா அவர்களின் பாசமிகு தந்தையாரின் ஆன்மா சாந்தியடைய இந்நாளில் பிரார்த்திக்கின்றோம்.

மிருசுவில் வடக்கு
**கணித கல்வி நிறுவன ஆசிரியர்கள்.**

## மரண அறிவித்தல்

### கணபதிப்பிள்ளை மகேந்திரலிங்கம்



அச்சுவேலி வடக்கைப் பிறப்பிடமாகவும் கனடா ஒட்டாவாவை வசிப்பிடமாகவும் கொண்ட கணபதிப்பிள்ளை மகேந்திரலிங்கம் (13.04.2009) திங்கட்கிழமை கனடாவில் இறைபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை-பொன்னம்மா தம்பதியரின் அருமை மகனும் காலஞ்சென்றவர்களான செல்லர்-சேதுப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகனும் ரதியின் அன்புக் கணவரும் சுபாஷ்னி (கனடா), பாமினி (கனடா), ஜெகன் (கனடா), வாசுகி (கனடா), தெனிஸ்ரா (கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையும் கஜபரன் (கனடா), விக்னேஸ்வரன் (கனடா) ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆரதி, பூரணா ஆகியோரின் அன்புப் பேரனும் சிவலிங்கம் (அச்சுவேலி), தங்கமலர் (சுவிஸ்), சந்திராதேவி (இந்தியா), செல்வராணி (பரிஸ்), வசந்தகுமாரி (கனடா) ஆகியோரின் அருமைச் சகோதரரும் நடராசா (காந்தி) காலஞ்சென்ற தில்லையம்பலம் மற்றும் துரையம்மா (அவுஸ்திரேலியா) திலகவதி (அவுஸ்திரேலியா), பரிமளம் (அவுஸ்திரேலியா), றோசம்மா (கனடா) ஆகியோரின் மைத்துனரும் தங்கராணி, சறோஜாதேவி ஆகியோரின் உடன்பிறவாச் சகோதரரும் சிவகுரு, கந்தையா, காலஞ்சென்ற செல்வரத்தினம் மற்றும் நல்லையா ஆகியோரின் சகலனும் கனகரட்ணம் - பரமேஸ்வரி (நவாலி), கிருஸ்ணசாமி - அன்னபூரணம் (இந்தியா) ஆகியோரின் சம்பந்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (18.04.2009) சனிக்கிழமை கனடாவில் நடைபெற்றன. இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*ராஜன் எலக்ரோனிக்ஸ்,*
*அச்சுவேலி. 0214591868*

தகவல்: நடராசா சிவகுமார் (மருமகன்),
E-mail: kavinaya30@yahoo.com

## காசநோய் தொடர்பான விழிப்புணர்வுக் கருத்தரங்கு

யாழ்ப்பாணம், ஏப்.19

பண்ணையில் உள்ள மார்புநோய் சிகிச்சை நிலையத்தில் காசநோய் சம்பந்தமான விழிப்புணர்வுக் கருத்தரங்கு இன்று ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ளது.

இந்தக் கருத்தரங்கில் சித்த வைத்தியர்கள், ஆயுர்வேத வைத்தியர்கள், தனியார் வைத்தியர்கள் ஆகியோரைக் கலந்து கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. (204-224)

## தீவக வலயத்தின் உடற்பயிற்சிப் போட்டி

வேலணை, ஏப்.19

தீவக வலயப் பாடசாலைகளிடையே நடைபெறவுள்ள வலயமட்ட உடற்பயிற்சிப் போட்டிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. பாடசாலைகளின் அதிபர்கள் தங்களது விண்ணப்பங்களை எதிர்வரும் 23ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்குமாறும், போட்டிகள் 30 ஆம் திகதி ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரியில் நடைபெறும் எனவும் தீவக வலயக் கல்விப் பணிப்பாளர் வி.இராதாகிருஸ்ணன் அறிவித்துள்ளார். (50-267)

## திருநாவுக்கரசு நாயனார் குருபூசை

அகில இலங்கை திருமுறைக் கலாமன்றம் வருடம்தோறும் நடத்தி வருகின்ற திருநாவுக்கரசு நாயனார் குருபூசை நாளை திங்கட்கிழமை காலை 6.45 மணிக்கு யாழ்ப்பாணம் நல்லூர் ஸ்ரீ கைலாச பிள்ளையார் தேவஸ்தானத்திலும் -

காலை 9 மணியளவில் நல்லூர் ஸ்ரீ சட்டநாத ஸ்வாமி தேவஸ்தானத்திலும் நடைபெறும்.

திருநாவுக்கரசு நாயனாருக்கு விசேட பூசை வழிபாடுகள் நடைபெற்று அவர் அருளிய பதிகங்கள் பாராயணம் செய்யப்படும். (50)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

தோற்றம் 14★02★1942



மறைவு 20★03★2009


### அமரர் கதிரவேலு பூபாலசிங்கம்

கடந்த 20.03.2009 அன்று இறைபதமடைந்த என் அன்புத் தெய்வம் கதிரவேலு பூபாலசிங்கம் அவர்களின் இறுதிக்கிரியைகளில் கலந்து துயர் பகிர்ந்தோருக்கும், பல வழிகளில் நாடிவந்து உதவி புரிந்தோருக்கும் எமது நன்றிகளைத் தெரிவிப்பதோடு, இன்று (19.04.2009) ஞாயிற்றுக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

சிவகுல வீதி,
உரும்பிராய் மேற்கு, உரும்பிராய்.

குடும்பத்தினர்.

## எட்டாம் ஆண்டு நினைவலைகள்



'கேணிக்கரை', சுதுமலை வடக்கு,
மானிப்பாய்.

மலர்வு: 07★03★1920
உதிர்வு: 18★04★2001

அமரர்
### நாகலிங்கம் பொன்னம்பலம்

திதி: தசமி (19.04.2009)

அழகான அவ் வாழ்வு மறைந்து
ஆண்டுகள் எட்டு ஆகியதே!
வளமான வாழ்வுக்காய் வாழ்த்திட
உம்பாதம் பணிகின்றோம் தந்தையே!!

**மனைவி, மக்கள்,**
**மருமக்கள், பேரப்பிள்ளைகள்.**

## மூன்றாம் ஆண்டு தீங்காத நினைவுகள்



### திருமதி
# மகாலட்சுமி குலவீரசிங்கம்

தோற்றம்: 13.11.1944 மறைவு: 22.04.2006

**திதி: 19.04.2009 ஞாயிற்றுக்கிழமை**

22.04.2006 சனிக்கிழமை அபரபகக தசமி திதியில் லண்டனில் சிவபதமடைந்த அமரர் மகாலட்சுமி குலவீரசிங்கம் அவர்களின் மூன்றாம் ஆண்டு நினைவு.

இவர் வேலணை வடக்கு, சோளாவத்தையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்டு, இறுதிக்காலம் லண்டனில் வசித்தவரும் செல்லையா குலவீரசிங்கம் அவர்களின் பிரியபத்தினியும் இராசரத்தினம்-மனோன்மணி தம்பதியினரின் சிரேஷ்ட புதல்வியுமாவார். அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம்வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம்சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

*குலவிளக்கு அணைந்த பிரிவால் வாடும்:*

அன்புக் கணவர்,
பிள்ளைகள் - மோகன், குலச்செல்வன், ஸ்ரீகௌரி, ஜெயஸ்ரீ, வாணிஸ்ரீ
மருமக்கள் - சிவகௌரி, ரேணுகா, மகேஸ்வரன், பகீரதன், சிவரஞ்சன்
பேரப்பிள்ளைகள் - தபினா, கரிஷ்மா, யுவாசனா, ராகுல், வருண், ஷானுஜா
சகோதரர்கள் - பரநிருபசிங்கம், அருந்தவநாதன், உஷாதேவி, யோகலட்சுமி, ஜெயலட்சுமி.

தகவல்: செ.குலவீரசிங்கம், (லண்டன்),
கு.சரவணநாதன் (மருமகன் - யாழ்ப்பாணம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிளறப்படும் ராஜீவ் கொலை விவகாரம்

ஈழ விவகாரம் தமிழகத்தையே உலுக்கிக் கொண்டிருக்கும் நிலையில், முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி கொலை விவகாரம் குறித்த வழக்கு ஒன்று தமிழ் நாட்டில் புதுப் பரபரப்பை உண்டாக்கி இருக்கிறது.

ராஜீவ் கொலை வழக்கில் நீதிமன்றத்தால் தண்டிக்கப்பட்டு, பதினேழு வருடங்களாக சிறையில் இருக்கும் முருகன், நளினி, பேரறிவாளன், சாந்தன் உள்ளிட்ட



24 பேரை உயர்நீதிமன்றில் ஆஜர்படுத்தக் கோரி சி.பி.ஐ-யையும், தமிழக அரசையும் வலியுறுத்தும் ஆட்கொணர்வு வழக்கு இது. சென்னை உயர் நீதிமன்றத்தில் இந்த வழக்கைத் தொடுத் திருப்பவர், காங்கிரஸ் கட்சிக்குள் அவ்வப் போது கலகம் செய்யும் திருச்சி வேலுசாமி.

அவரை விகடன் செய்தியாளர்கள் சந்தித்துப் பேட்டி கண்டனர்.

*"ஏன் இந்த திடீர் வழக்கு?"*

"விடுதலைப் புலிகளை அழிக்கிறோம் என்ற பெயரில், அப்பாவித் தமிழ் மக்களை வேரறுத்துக் கொண்டிருக்கிறது சிங்கள அரசு. நம்முடைய மத்திய அரசோ தமிழர் களைக் கருவறுக்க அத்தனை உதவிகளையும் செய்து வருகிறது. ராஜீவ் காந்தியின் மரணத்துக்கு விடுதலைப் புலிகள்தான் காரணம் என்று சொல்லியே இலங்கைப் பிரச்சினையில் காலம் கடத்துகிறார்கள் காங்கிரஸார். அதனால்தான் ராஜீவ் காந்தி கொலை விவகாரத்தின் முழு உண்மைகளையும் நாடறியச் செய்யவேண்டுமென முடிவெடுத்தேன். அதன் முதல்கட்டமாக ராஜீவ் கொலை வழக்கில் பதினேழு வருடங்களாகியும் சிறையில் இருப்பவர்களை வெளியே கொண்டு வருவதற்காக வழக்குப் போட்டிருக்கிறேன்..."

*"ராஜீவ் கொலை வழக்கின் பின்னணி குறித்து இன்னும் புதிதாக நீங்கள் என்ன தெரியவேண்டும் என்கிறீர்கள்?"*

"ராஜீவ் காந்தி கொலை வழக்கை ஏழு வருடங்களாக விசாரித்த ஜெயின் கமிஷனே, 'உண்மையான குற்றவாளிகள் இதுவரை கண்டுபிடிக்கப்படவில்லை. அதனால் சி.பி.ஐ. இந்த வழக்கை மேற்கொண்டும் தீவிரமாக விசாரிக்கவேண்டும்' என உத்தர விட்டது. அதன்படிதான் சி.பி.ஐ-யின் பல்முனை நோக்கு புலனாய்வுக் குழு மூல மாக விசாரணை தொடங்கப்பட்டது. இத்தனை வருட விசாரணையில் பல்முனை நோக்குப் புலனாய்வுக் குழு, எந்த உண்மை யையாவது கண்டுபிடித்ததா? இந்தியாவின் மாபெரும் தலைவரான ராஜீவ் காந்தியின் மரணப் பின்னணியை முழுமையாகக் கண்டுபிடிக்க வக்கற்றுப் போயிருக்கிற காங்கிரஸ் வேங்கைகளை என்ன சொல்ல! ஜெயின் கமிஷன் தன் அறிக்கையில் ராஜீவ் கொலை வழக்கு குறித்து சந்திராசாமி, சுபிரமணிய சுவாமி



ஆகியோரை விசாரிக்கவேண்டும் என சொல்லியிருக்கிறது. ஆனால், பல்முனை நோக்குப் புலனாய்வுக் குழு இந்த இரண்டு சாமிகளிடமும் என்றைக்காவது விசாரணை நடத்தியதா? முறையாக விசாரணை நடத்தி, உண்மையான குற்றவாளிகளைக் கண்டு பிடிக்க தைரியமற்ற காங்கிரஸ் அரசு, படு கொலை வழக்கில் சிக்கியவர்களை பதினேழு வருடங்களாக சிறையில் அடைத்து வைத்தி ருக்கிறது. தங்களின் எதிர்காலம் என்ன வாகும் என்றே புரியாமல், சிறை வாழ்க்கை யைத் தொடரும் அவர்களுக்கு இந்த அரசு என்ன பதில் சொல்லப் போகிறது? விசா ரணை என்ற பெயரில் யாரை ஏமாற்றுகிறார் கள்? இன்னும் எத்தனை காலத்துக்கு வீணாக அரசு பணத்தை செலவு செய்து விசாரணையைத் தொடருவார்கள்?!"

*"அப்படியென்றால், ராஜீவ் படுகொலை குறித்த உங்கள் நிலைப்பாடு என்ன?"*

"ராஜீவ் கொலையான நேரத்திலேயே நான் ஜெயின் கமிஷனில் தைரியமாக வாக்குமூலம் கொடுத்தேன். ராஜீவ் கொலை யாவதற்கு சில தினங்களுக்கு முன், 'இந்திரா காந்திக்கு ஏற்பட்ட நிலைதான் ராஜீவுக்கும் ஏற்படப் போகிறது...' என சந்திராசாமி தன் ஆசிரமத்தில் பகிரங்கமாகச் சொல்லி இருக்கிறார்! அதற்கான டேப் ஆதாரமே இருக் கிறது. அதேபோல் சுபிரமணிய சுவாமியின் பங்களிப்பும் நிறைய இருக்கிறது. பி.ஜே.பி. ஆட்சியில் ராஜீவ் காந்தி வழக்கு விசாரணை சி.பி.ஐ-யிடம் ஒப்படைக்கப் பட்டது.. ஆனால், அதன்பிறகு ஆட்சிக்கு வந்த காங்கிரஸ் அரசும் சந்திராசாமி, சுபிரமணிய சுவாமி ஆகியோரை விசாரணைக்கு அழைக்க வில்லை! தன் கணவர் கொலை வழக்கின் பின்னணி குறித்த விவரங்களை உடனே விசாரித்து, அறிக்கை அளிக்கும்படி அன்னை சோனியாவும் வலியுறுத்தி இருக்க வேண்டு மல்லவா? ஆனால், அவரும் அதில் அக்கறை காட்டவில்லையே? இதைச் சொல்வதால், நான் விடுதலைப் புலிகளை ஆதரிப்பதாக நினைக்க வேண் டாம். 'இந்தியாவின் பிரதமராக இருந்த ஒருவர் படுகொலையான வழக்கு, இதுநாள் வரை நடந்து கொண்டிருக் கிறது' என்றால், உலகமே நம்மைக் காறித் துப் பாதா?"


*"இப்போது நீங்கள் தொடுத்திருக்கும் வழக்கு சிறையில் இருக்கும் முருகன், நளினி உள்ளிட்டோருக்கு எப்படி விடுதலை வாங்கித்தரும் என்று நினைக்கிறீர்கள்?"*

"அரசால் குற்றவாளிகளாக அறிவிக்கப் பட்டவர்களுக்காக ஆள்கொணர்வு வழக்குப் போடுவது இந்தியாவிலேயே இதுதான் முதல்முறை. இந்த வழக்குக்காக பாதிக்கப் பட்டவர்களை நீதிமன்றம் முன்பாக நிறுத்தி னால், அவர்களே தங்களுடைய பாதிப்பை நீதிபதி முன்பாக எடுத்துச் சொல்லி, நியாயம் கேட்க வாய்ப்பிருக்கிறது. அப்படி இல்லா விட்டாலும், என்னுடைய மனுவின் கோரிக்கையை ஏற்று பாதிக்கப்பட்டவர்களை சிறையிலிருந்து விடுவிக்க நீதிபதி உத்தரவிடலாம். இந்த நோக்கத்துக்காகத் தான் இந்த மனுவே போடப்பட்டிருக்கிறது. இப்படி ஒரு வழக்கு பதிவாகி இருப்பது, நீதித்துறையை மட்டுமல்ல... அரசியல் வட்டாரத்தின் ஒட்டுமொத்த கவனத்தை யும் திரும்பிப் பார்க்க வைக்கும். அதனால் நளினி, முருகன் உள்ளிட்ட அனைவருக் கும் தக்க தீர்வு கிடைக்கும் என நம்புகி றேன். வழக்கோடு நில்லாது, இதையே வரும் தேர்தலில் பிரசாரமாகவும் வைக்கப் போகிறேன். காங்கிரஸ் சார்பில் போட்டி யிடும் 16 வேட்பாளர்களும் ஈழ விவகாரம் காரணமாக மண்ணைக் கவ்வுவார்கள். அதன்பிறகாவது காங்கிரஸின் நோக்கும் போக்கும் மாறுமா, பார்க்கலாம்!" இப்படி வெடித்து முடித்தார் வேலுசாமி! ✱

# அமெரிக்காவுடன் சமரசம் ஏற்படுமா?

கியூபாவின் தலைநகர் ஹவானாவில் உள்ள சர்வதேச விமான நிலையத்தின் 'டேர்மினல் 2' அமெரிக்காவின் மியாமியிலிருந்து வரும் விமானங்களுக்கென சிறப்பாக ஒதுக்கப்பட்டுள்ளது.

மியாமியிலிருந்து வரும் தமது உறவினர்களை காண்பதற்காக நாளாந்தம் மக்கள் அங்கு கூடியிருப்பது வழமை. தமது உறவினர்களை



கண்டவுடன் அவர்கள் மகிழ்ச்சியில் கூச்சலிடுவார்கள்; கண்ணீர் விடுவார்கள்.

முன்னாள் ஜனாதிபதி புஷ் நிர்வாகத்தின் கீழ் அமெரிக்காவிலுள்ள கியூபா பிரஜைகள் மூன்று வருடத்துக்கொரு முறையே தமது நாட்டுக்கு செல்ல அனுமதி வழங்கப்பட்டிருந்தது.

மேலும் இவர்கள் கியூபாவில் எவ்வளவு பணத்தை செலவழிக்கலாம் என்பதிலும் கடும் கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டிருந்தன.

ஒபாமா நிர்வாகம் தற்போது இந்த தடைகளைத் தளர்த்தியுள்ளது.

மியாமியிலுள்ள கியூபா பிரஜைகள் இதனை மிகுந்த மகிழ்ச்சியுடன் வரவேற்றுள்ளனர்.

இரு நாடுகளுக்கும் இடையிலான உறவுகள் முன்னேற்றமடையப் போகின்றன. ஒபாமா குறித்து பாரிய எதிர்பார்ப்பு உள்ளது. அவர் பல நல்ல மாற்றங்களை செய்கின்றார் என அவர்கள் நம்பிக்கை வெளியிட்டுள்ளனர்.

அமெரிக்காவிலுள்ள கியூபா பிரஜைகளை விட சுதந்திரத்துக்கான சிறந்த தூதுவர்கள் இல்லையென ஒபாமா சமீபத்தில் தெரிவித்திருந்தார்.

மேலும் கியூபாவுக்கு அமெரிக்கர்கள் செல்வதற்கு விதிக்கப்பட்டுள்ள தடைகளை நீக்கும் சட்டமூலமொன்றை அமெரிக்க காங்கிரஸில் கொண்டு வரும் முயற்சியும் இடம்பெறுகின்றது.

அமெரிக்காவிலுள்ள கியூபா பிரஜைகள் தமது நாட்டுக்கு பணம் அனுப்புவதில் விதிக்கப்பட்டிருந்த தடைகளும் அகற்றப்பட்டுள்ளன.

மாதாந்தம் வருமானமாக 20 டொலர்களையே கொண்டுள்ள கியூபா மக்களுக்கு இது மிகவும் முக்கியமான விடயம்.

அமெரிக்க தொலைதொடர்பு நிறுவனங்கள் கியூபாவில் செயற்படுவதற்கான அனுமதிப் பத்திரங்களை பெறுவதற்கும் ஒபாமா அனுமதியளித்துள்ளார்.

அமெரிக்காவின் கடல்பி Fibre Cable மூலமாக இணையத்தை பயன்படுத்துவதற்கும் ஒபாமா நிர்வாகம் அனுமதி வழங்கும் பட்சத்தில் அது முக்கியமானதாக அமையும்.

தற்போது கியூபா செய்மதி மூலமாகவே இணையச் சேவையை பெறுகின்றது. இது செலவு கூடியது என்பதுடன் இதன் வேகமும் குறைவானது.


கியூபாவில் மக்கள் தமது வீடுகளில் இணையங்களை பயன்படுத்த முடியாததற்கு இதுவே காரணம் என அந்த அரசு தெரிவித்து வந்துள்ளது.

அமெரிக்காவின் இந்த அறிவிப்புகள் ரினிடாட்டில் அமெரிக்க நாடுகளின் உச்சி மாநாடு ஆரம்பமாவதற்கு சில நாட்களுக்கு முன்னரே வெளியாகியிருந்தன.

இந்த மாநாட்டுக்கு அழைக்கப்படாத ஒரேயொரு நாடு கியூபா. கியூபா மக்கள் இதற்கு கடும் எதிர்ப்புத் தெரிவித்துள்ளனர்.

உலக வரைபடத்திலிருந்து யாரோ எம்மை அழித்து விட்டது போன்ற செயற்பாடு என இதனை வர்ணித்துள்ள அவர்கள், நாங்கள் இருக்கிறோம் எங்களுக்கு அழைப்பு விடுத்திருக்க வேண்டும் என்கின்றனர்.

பனிப் போரின் எச்சம் என



கருதப்படும் கியூபா மீதான தடைகளை நீக்குமாறு ஒபாமாவுக்கு அமெரிக்க நாடுகளின் உச்சி மாநாட்டில் அழுத்தங்கள் கொடுக்கப்பட்டன.

எனினும், பொருளாதாரத் தடைகள் நீக்கப்படுமென்பதற்கான அறிகுறிகள் எதுவும் இதுவரை தென்படவில்லை.

கியூபா ஜனநாயகம் மற்றும் மனித உரிமை விடயங்களில் முதலில் முன்னேற்றங்களை காட்டட்டும். பின்னர் பொருளாதாரத் தடை குறித்து சிந்திக்கலாம் என ஒபாமா நிர்வாகம் வலியுறுத்துகிறது.

கியூபாவின் புதிய ஜனாதிபதி சிறிதளவு சமூக பொருளாதார சீர்திருத்தங்களை மேற்கொண்டுள்ளார்.

எனினும், கியூபா தொடர்ந்தும் எதிர்க்கட்சிகள் அனுமதிக்கப்படாத ஒரு கட்சி அரசாகவே விளங்குகின்றது என்பது அவர்களது வாதம்.

கியூபா தொடர்பாக ஐரோப்பிய ஒன்றியம் வேறு விதமான அணுகு முறைகளை கடைப்பிடிக்கின்றது. அந்த நாட்டின் மீதான தடைகளை அகற்றியுள்ளதுடன் அபிவிருத்தி நிதியுதவியையும் வழங்கியுள்ளது.

கியூபா மக்கள் அனுபவிக்க விரும்பும் அடிப்படை உரிமைகளுக்கு ஆதரவளித்து அவர்களை நோக்கி நேசக்கரங்களை நீட்டுவதற்கான பல நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு ஒபாமா உத்தரவிட்டுள்ளார் என வெள்ளை மாளிகை பேச்சாளர் தெரிவிக்கிறார். இவை அவர்களுக்கு அதிகளவு தகவல்கள் கிடைப்பதை உறுதி செய்யுமென்றும் அவர் தெரிவிக்கிறார்.

தனது புதிய நடவடிக்கைகளால் கியூபா அரசு மேலும் பல சீர்திருத்தங் களை முன்னெடுப்பதற்கு வழிவகுக் குமென ஒபாமா நிர்வாகம் கருதுகின்றது.

பிடல் கஸ்ட்ரோ, ஒபாமா நிர்வாகத்தின் புதிய நடவடிக்கைகளை வரவேற்றுள்ள அதேவேளை அமெரிக்க கொள்கையில் இன்னும் பல மாற்றங்கள் தேவையென குறிப்பிட்டுள்ளார்.

கியூபா மீதான வர்த்தகத் தடை 1962 இல் முன்னாள் ஜனாதிபதி ஜோன் எவ்.கென்ன டியால் கொண்டு வரப்பட்டது.

அவரைத் தொடர்ந்து வந்த அனைத்து ஜனாதிபதிகளும் இதனை தீவிரமாக நடைமுறைப்படுத்தினர்.

புளோரிடாவிலுள்ள கியூபா பிரஜைகளின் வாக்குகளை கருத்தில் கொண்டே இதனை தீவிரமாக நடைமுறைப்படுத்துவதில் அவர்கள் ஆர்வம் காட்டினர்.

எனினும், இது பிடல் காஸ்ட்ரோவை எவ்வகையிலும் பலவீனப்படுத்த வில்லை. 10இற்கும் மேற்பட்ட அமெரிக்க ஜனாதிபதிகளை துணிவுடன் எதிர்கொண்ட பின்னர் கடந்த வருடம் தனது உடல் நிலையை கருத்தில்கொண்டு அவர் ஆட்சிப் பொறுப்பை தனது சகோதரர் ரவுல் காஸ்ட்ரோவிடம் ஒப்படைத்தார்.

மேலும் இந்த பொருளாதாரத் தடைகள் கியூபாவை தனிமைப்ப டுத்தவில்லை. மாறாக அமெரிக்காவை ஐக்கிய நாடுகள் பொதுச் சபையில் தனிமைப்படுத்தியுள்ளன.

அமெரிக்காவின் இந்த நடவடிக் கைக்கு ஆதரவாக இஸ்ரேல் மாத்திரம் கடந்த வருடம் வாக்களித்திருந்தது.

- ரஜீவன் -

✱

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மஹாபொல புலமைப் பரிசில் நிகழ்வு 24ஆம் திகதி அலரி மாளிகையில்

கொழும்பு,ஏப்.19

2007,2008ஆம் கல்வி ஆண்டுக்கான மஹாபொல புலமைப் பரிசில் வழங்கும் வைபவம் எதிர்வரும் 24ஆம் திகதி ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தலைமையில் அலரி மாளிகையில் நடை பெறவுள்ளது.

இந்த நிகழ்வின்போது 11 ஆயிரம் பல்கலைக்கழக மாணவர்களுக்குப் புலமைப் பரிசில்கள் வழங்கப்படவுள்ளன. அதிகூடிய புள்ளிகள் பெற்ற 950 மாணவர்களுக்கான புலமைப் பரிசில்களை ஜனாதிபதி வழங்கி இந்தக் கல்வி ஆண்டுக்கான புலமைப் பரிசில் வழங்கும் திட்டத்தை ஆரம்பித்துவைக்கவுள்ளார்.

பல்கலைக்கழக மாணவர்கள் மற்றும் உயர்கல்வி கற்கும் மாணவர்கள் 40 ஆயிரம் பேருக்குத் தற்போது புலமைப் பரிசில் வழங்கப்பட்டு வருவதாகவும் இதற்காக மாதாந்தம் 800 மில்லியன் ரூபா செலவாகிறது எனவும் மஹாபொல புலமைப் பரிசில் நிதியத்தின் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (50)

## கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், ஏப்.19

யாழ்.பல்கலைக்கழக விளையாட்டு விஞ்ஞான அலகில் கற்று வெளியேறி இதுவரை வேலைவாய்ப்புப் பெறாத மாணவர்களுக்கான கலந்துரையாடல் ஒன்று நாளை திங்கட்கிழமை முற்பகல் 10 மணியளவில் ஆரியகுளத்திலுள்ள புதிய உயர்கல்லூரியில் நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (50)

## 2ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்

**வைத்தி சின்னத்துரை**

தோற்றம் 13★08★1950

மறைவு 11★05★2007

திதி: தசமி (19.04.2009)

விதையிட்டுச் சென்ற ஆலமரம்
விருட்சங்கள் தழைத்தபோது விலகிப் போனீரே
ஆண்டுகள் இரண்டு ஆனாலும்
ஆறாது உம் நினைவுகள் எம்மைவிட்டு அகலாது.

நி.மு. - தெல்லிப்பழை.
த.மு. - புத்தூர். (84574) மனைவி, பிள்ளைகள்.

## கண்ணீர் அஞ்சலி

எமது நிறுவனத்தில் 1978-1980 வரையான காலப்பகுதியில் நியமனத் தலைவராக இருந்த

**வேலன் மாணிக்கம்**

அவர்கள் 09.03.2009ஆம் திகதி காலமானார். அன்னாரின் மறைவுச்செய்தி அறிந்து பெரிதும் அதிர்ச்சி அடைந்தோம். அன்னார் சிறந்த சமூக சேவையாளனாக வாழ்ந்தவர். அன்னாரின் இழப்பினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

அங்கத்தவர்கள், பணியாளர்கள், பணிப்பாளர்கள்,
தெல்லிப்பழை பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் (வ-து).
புகையிரத நிலைய வீதி,
மல்லாகம். (சி/558117)

## மரண அறிவித்தல்கள்

### திருமதி வல்லிபுரம் பொன்னுப்பிள்ளை

கொல்லங்கலட்டியைப் பிறப்பிடமாகவும் மந்துவில் மேற்கை வசிப்பிடமாகவும் மீசாலையைத் தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட வல்லிபுரம் பொன்னுப்பிள்ளை 17.04.2009 வெள்ளிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் வல்லிபுரத்தின் அன்பு மனைவியும் சின்னம்மா, திருஞானசுந்தரம், சோமசுந்தரம், தவமலர், சிவபாதசுந்தரம், விமலா ஆகியோரின் பாசமிகு தாயும் தில்லைநாதன், சரஸ்வதி, கிரிஜா, அருளானந்தம், பவானி, ஸ்ரீகாந்தன் ஆகியோரின் பாசமிகு மாமியும் வேற்கரன், நாககீதன், பாலகிருஷ்ணன், நாகதர்சினி, கேசவன், ஜனந்தா, சுந்தரரூபன், வானதி, வாசுகி, நீரிஜா, சுஜீவா, பிரிந்தினி, கஜானி, கிஷானி, அருள்ராஜ் ஆகியோரின் அன்புப பேர்த்தியும் அபிலாஷின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 17.04.2009 வெள்ளிக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்றன. இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

வீரசிங்கம் வீதி,
மீசாலை வடக்கு,
கொடிகாமம். (சி/558122)

தகவல்:
குடும்பத்தினர்.

### சின்னப்பு துரைராசா

சங்குவேலியைப் பிறப்பிடமாகவும் மலேசியாவை வசிப்பிடமாகவும் உடுவில் மான்ஸ் ஆங்கிலப் பாடசாலை பழைய மாணவனும் ஆகிய சின்னப்பு துரைராசா 05.04.2009 ஞாயிற்றுக்கிழமை தனது 103ஆவது வயதில் கோலாலம்பூரில் இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற பாக்கியவதியின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான சின்னத்துரை, மங்களம், சிங்கராசா, சின்னம்மா, கந்தசாமி மற்றும் அரசரத்தினம் ஆகியோரின் பாசமிகு சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 06.04.2009 திங்கட்கிழமை பெற்றாலிங்ஜயா, மலேசியாவில் நடைபெற்றன.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சங்குவேலி வடக்கு,
மானிப்பாய்.
0060330584303.

தகவல்:
கலாபூஷணம் சி.அரசரத்தினம்.

(84572)

## மகாஜன - ஸ்கந்தா பழைய மாணவர்களின் கிரிக்கெட் போட்டி

வலி.வடக்கு,ஏப்.19

தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரி, சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரி ஆகியவற்றின் பழைய மாணவர்களுக்கு இடையேயான 50 ஓவர்களுக்கு மட்டுப்படுத்திய கிரிக்கெட் போட்டி இன்று ஞாயிற்றுக் கிழமை காலை 9 மணிக்கு மகாஜனக் கல்லூரி மைதானத்தில் நடைபெறும். (50-86)

## உடுவில் பிரதேச ஒருங்கிணைப்புக் குழு கூட்டம்

வலி.வடக்கு, ஏப்.19

உடுவில் பிரதேச செயலக பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம் நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணிக்குப் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் பிரதேச செயலாளர் திருமதி மஞ்சுளாதேவி தலைமையில் நடைபெறும்.

இக்கூட்டத்தைத் தொடர்ந்து பிரதேச விவசாய ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம் முற்பகல் 11.30 மணிக்கு நடைபெறும். (50-86)

## கிரிக்கெட் மத்தியஸ்தர் சங்கப் பொதுக்கூட்டம்

வலி.வடக்கு,ஏப்.19

யாழ்ப்பாண கிரிக்கெட் மத்தியஸ்தர் சங்கத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டம் இன்று ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி மண்டபத்தில் இ.செல்வராசா தலைமையில் நடைபெறவுள்ளது.

அனைத்து அங்கத்தவர்களையும் தவறாது கலந்துகொள்ளும்படி செயலாளர் ந. சிவராசா அறிவித்துள்ளார். (50-86)

## ஊர்காவற்றுறைப் பிரதேச விளையாட்டுப் போட்டி முடிவுகள்

யாழ்ப்பாணம்,ஏப்.19

ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் பணிமனையில் நடத்தப்படுகின்ற வருடாந்த விளையாட்டுப் போட்டிகளின் முடிவுகளில் சில-

**கரப்பந்தாட்டம் (ஆண்கள்)**

1ஆம் இடம் - எழுவைதீவு பத்திமா வி.க., 2ஆம் இடம் - ஊர்காவற்றுறை சென். ஜேம்ஸ் வி.க.

**கரப்பந்தாட்டம் (பெண்கள்)**

1ஆம் இடம் - ஊர்காவற்றுறை சென். ஜேம்ஸ் வி.க., 2ஆம் இடம் - கரம்பொன் ஞானஒளி வி.க.

**துடுப்பாட்டம்**

1ஆம் இடம் - தம்பாட்டி காந்திஜி வி.க., 2ஆம் இடம் - மெலிஞ்சிமுனை இருதயராஜா வி.க. (50-325)

## சரசாலை அந்திரிக்குழாய்க்குளம் கையளிப்பு நிகழ்வு இன்று

யாழ்ப்பாணம்,ஏப்.19

அகதிகள் புனர்வாழ்வு நிறுவனத்தால் புனரமைக்கப்பட்ட சரசாலை வடக்கு 'அந்திரிக்கிராய்க்குளம்' கையளிக்கும் நிகழ்வு இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணியளவில் நடைபெறவுள்ளது.

அகதிகள் புனர்வாழ்வு நிறுவனத்தின் தலைவர் பேராசிரியர் ப.சிவநாதன் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் யாழ்.மாவட்ட அரச அதிபர் கே.கணேஷ் பிரதம விருந்தினராகவும் ''கிறிஸ்ரியன் எயிட்'' நிறுவனத்தின் திட்ட முகாமையாளர் ரெஸ்டிக்கோயங், சாவகச்சேரி பிரதேச செயலர் எஸ்.சிறிநிவாசன், கமநல அபிவிருத்தித் திணைக்கள உதவி ஆணையாளர் ம.பற்றிக்டிறஞ்சன், நீர்ப்பாசனத் திணைக்களப் பொறியியலாளர் க.கருணாநிதி, கொடிகாமம் பிரதேசசபைச் செயலாளர் சிவராஜலிங்கம் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும் கலந்துகொள்ளவுள்ளனர். (50-9)

## தவறிவிட்டது

உரும்பிராய் கிழக்கு, உரும்பிராயைச் சேர்ந்த ஞானானந்தன் சுதர்ராஜ் என்பவரின் தேசிய அடையாள அட்டை (இல.802304919V) கடந்த வாரம் உரும்பிராய் சேர்ச்சடிப் பகுதியில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் கீழ்க் காணும் முகவரியில் ஒப்படைக்கவும்.

தயாளினி சுஸ்பார்
[illegible]
தொ.பே.இல: [illegible]


அன்பான பெற்றோர்களே...!

உங்கள் பிள்ளைகளின் கல்வி வளர்ச்சியில் பெரிதும் அக்கறை கொண்டவர்கள் நீங்கள். பாடசாலை விடுமுறை நாட்களில் சர்வதேச தரம் வாய்ந்த சான்றிதழ்களுடன் கூடிய கற்கை நெறியினை கற்பதற்கு இன்றே ASIAN - CSC உடன் இணைந்து கொள்ளுங்கள்.

சிறார்களிற்கான கணினி கற்கைநெறிகள்
பாடசாலை மாணவர்களுக்கான முழுமையான பயிற்சி நெறி

Age 8-14 Years
Junior Diploma in Computer Science
Junior Diploma in Graphic & Animation
Junior Diploma in Computer Programming
Junior Diploma in Digital Creativity
காலம் 2 மாதங்கள்

KIDS



e-KIDS DIVISION
இலவச பாடபுத்தகத்துடன் கூடிய கற்கை நெறி

Show the world
what you can do with IT?
புதிய பிரிவுகளுக்கான விபரங்கள் மற்றும் பதிவுகளை 20th திகதி திங்கட்கிழமை முதல் எமது யாழ்நகரம் மற்றும் நெல்லியடி பயிற்சி மையங்களில் பெற்றுக் கொள்ளலாம்.

Course Option ● JDCS ● JDGA ● JDCP ● JDDC
மேலதிக விபரங்களுக்கு....

ASIAN- CSC COMPUTER EDUCATION
2G, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம் Tel :021 222 5677
கிளை
கொடிகாமம் வீதி, நெல்லியடி Tel :077-3122198


## மரண அறிவித்தல்கள்

### திருமதி வல்லிபுரம் நாகரத்தினம்



நுணாவில் மத்தி, சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி வல்லிபுரம் நாகரத்தினம் நேற்று (18.04.2009) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற தம்பையா வல்லிபுரத்தின் அன்பு மனைவியும் திருமுருகராசா (ஓய்வுபெற்ற D.O, NRTB பருத்தித்துறை), திருமலர்ராணி, திருமங்களநாயகி, திருமோகனராதா, திருமதிவதனா, திருமதனரூபி, திருமேனகாதேவி ஆகியோரின் அன்புத் தாயும் கேதீஸ்வரன் (ஓய்வுபெற்ற திட்டப் பணிப்பாளர்-யாழ்.செயலகம்), தர்மராசா (விரிவுரையாளர்), நடேசலிங்கம், நாகராசா (ஓய்வுபெற்ற அலுவலர் - பரந்தன் இரசாயன கூட்டுத்தாபனம்), சௌந்தரராஜன், உமாபதிசிவம் ஆகியோரின் மாமியும் சுரேஸ்குமார், சதீஸ்குமார், அனுஷா, கார்த்திகா, கௌரீசன், கௌசல்யா, வாகீசன், ஜெயந்தீசன், பரணீதரன், சுகன்யா, செந்தூரன், சஜீத்தா, மிருதுனா, லாவண்யா, லக்ஷணன், அபர்ணன், விதுசன் ஆகியோரின் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (19.04.2009) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக காந்தாளம்பிட்டி இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

நுணாவில் மத்தி,
சாவகச்சேரி. (சி/558124)

தகவல்:
வ.திருமுருகராசா (மகன்).

### மயில்வாகனம் மகாலிங்கம்



(ஓய்வுபெற்ற உத்தியோகத்தர், மின்சார சபை)

அரியாலையைப் பிறப்பிடமாகவும் திருமகள் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட மயில்வாகனம் மகாலிங்கம் 17.04.2009 வெள்ளிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மயில்வாகனம் - அன்னப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும் தவமணியின் பாசமிகு கணவரும் அபிராமி (முன்னாள் தாதிய உத்தியோகத்தர், யாழ். போதனா வைத்தியசாலை), அரவிந்தன் (மலேசியா) ஆகியோரின் பாசமிகு தந்தையும் காலஞ்சென்றவர்களான பூலோகசிங்கம், நவரத்தினம் மற்றும் அருளம்மா (லண்டன்), மோகனதாஸ் (லண்டன்), கனகலிங்கம் (லண்டன்) ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இல.195, திருமகள் வீதி,
அரியாலை.
(84567)

தகவல்:
அபிராமி (மகள் - முன்னாள் தாதிய உத்தியோகத்தர், யாழ்.போதனா வைத்தியசாலை).

### மலர்விழி பரராசசேகரம்



வவுனியாவைப் பிறப்பிடமாகவும் இயங்கராவூர், பூவரசன்குளத்தை வசிப்பிடமாகவும் கொண்ட மலர்விழி பரராசசேகரம் 17.04.2009 வெள்ளிக்கிழமை வவுனியாவில் காலமானார்.

அன்னார் பரராசசேகரம் - தவமணி தம்பதியரின் அன்பு மகளும் இளங்குமரன், கயல்விழி ஆகியோரின் அன்புச் சகோதரியும் டிஷாந்தி, ஜெயானந்த் ஆகியோரின் அன்பு மைத்துனியும் கல்கியின் அன்புப் பெரியம்மாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (18.04.2009) சனிக்கிழமை பிற்பகல் 2 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் இயங்கராவூர் மயானத்தில் தகனஞ்செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இயங்கராவூர்,
பூவரசன்குளம், வவுனியா. (சி/558120)

தகவல்:
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

# அதிகாரப் பகிர்வு மிஞ்சுமா?

போர் முடிவுற்றதும் தமிழர் பிரச்சினைக்குத் தீர்வு கொண்டு வரப்படும் என்ற தோற்றம் ஒன்று சர்வதேச மட்டத்தில் இலங்கை அரசினால் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது.

மிகக் குறிப்பாக அரசமைப்புச் சட்டத்துக்கான 13 ஆவது திருத்தத்தின் கீழ், அதிகாரப் பகிர்வு வழங்கும் நடைமுறைகளை அறிமுகம் செய்யும் தீர்வுப்பொதி ஒன்று முன்வைக்கப்படும் என்ற தோரணையில் சர்வதேச வட்டாரங்கள் நம்பும் விதத்தில் அரச தரப்பில் தகவல்கள் அடிக்கடி வெளியிடப்படுவது உண்டு.

இந்தியாவும், பாலுக்கும் காவல் பூனைக்கும் தோழன் என்றவாறு, 13 ஆவது சட்டத்திருத்தம் தனது முயற்சியினால் - ராஜீவ் - ஜே.ஆர்.ஒப்பந்தத்தின் பிரகாரம் கொண்டுவரப்பட்டது என்ற ''பிடியுடன்'' இலங்கை இனப்பிரச்சினைக்கு நம்பகத்தன்மை கொண்ட அதிகாரப் பரவல் என்ற பாடலை அடிக்கடி கீறல் விழுந்த இசைத் தட்டுப் போன்று ஒலித்துவருகின்றது.

இப்போது இந்திய நாடாளுமன்றத்துக்கான தேர்தல் காலம். அதன்போது காங்கிரஸ் கட்சியின் வாக்கு வங்கியைத் தமிழகத்தில் பெருக்கும் உள்நோக்கத் தோடு, ஈழத்தில் தமிழர்களுக்கென இரண்டு மாநிலங்களை உருவாக்குவதற்கு இலங்கை அரசுடன் ஏற்பாடு செய்யப்படும் அல்லது பேச்சு நடத்தப்படும் என்று அமைச்சர் ப.சிதம்பரம் பெரும் தொனியில் பேசிவருகிறார்.

இத்தனைக்கும் அரசமைப்புக் சட்டத்தின் 13 ஆவது சட்டத் திருத்தத்தின்கீழ் இணைக்கப்பட்டிருந்த வடக்கு - கிழக்கு மாகாணசபை வடக்குத் தனியாகவும் கிழக்குத் தனியாகவும் நீதிமன்றத் தீர்ப்பின் மூலம் இரண்டாகப் பிளக்கப்பட்டுவிட்டது. அப்போதெல்லாம், அதனைத் தடுப்பதற்கு ஏதேனும் மாற்று நடவடிக்கையைக் கூட உச்சரிக்காத அமைச்சர் சிதம்பரம், இப்போது தமது இயலாத் தன்மையை அல்லது ஒத்தூதும் பாணியை மாற்றி, இலங்கையில் இரண்டு மாநிலங்களுக்கு வகை செய்யப்படவேண்டும் என்று தேர்தல் 'புலுமாசு' விடுகிறார்.

தமிழர் பிரச்சினைக்கு அவர்களுக்குரிய உரிமைகளை வழங்கி அரசியல் தீர்வைக் காண்பதில் இலங்கை அரசு நேர்மையாகவும் விசுவாசமாகவும் இருக்குமாயின் இணைந்திருந்த வடக்கு - கிழக்கு பிரிக்கப்பட்டிருக்கமாட்டாது. நீதிமன்றத் தீர்ப்பில் வழங்கப்பட்டிருந்த வாசகத்திற் கேற்ப வடக்கு - கிழக்கை நாடாளுமன்றத்தில் சட்ட மூலம் கொண்டுவந்து இணைத்திருக்கலாம். ஆனால் அது நடைபெறவில்லை. வடக்கு, கிழக்கு நடைமுறை ரீதியாக, நிர்வாக ரீதியாக இரண்டுபட ஏற்பாடாகியுள்ளது.

இத்தனைக்கும் பிறகு -

இப்போது 13 ஆவது சட்டத்திருத்தத்தின் பிரகாரம் மாகாணசபைகளுக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்கள் பலவற்றை அவற்றிடம் இருந்து பிடுங்கி எடுத்து மத்திய அரசின்கீழ் கொண்டு வருவதற்கான நடவடிக்கைகள் அசுர வேகத்தில் ஒப்பேற உள்ளன.

இன்னும் இரண்டு நாள்களில் (நாளை மறுதினம்) உள்ளூராட்சி விசேட ஏற்பாடுகள் திருத்தச் சட்டமூலம் நாடாளுமன்றத்துக்குக் கொண்டு வரப்படவுள்ளது.

மாகாணசபைகள் சட்டத்தின்கீழ் அவற்றுக்கு வழங் கப்பட்ட அதிகாரங்களை நடாளுமன்றத்துக்குத் தாரை வார்த்துக் கொடுப்பதற்கான சட்டமூலம் அது.

இந்தச் சட்டமூலம் நிறைவேற்றப்பட்டால் மிகவும் பாதிக்கப்படப்போவது, இப்போது இயங்கிக் கொண்டிருக்கும் கிழக்கு மாகாணசபை என்று அச் சபையினர் சுட்டிக்காட்டுகின்றனர். வடக்கு மாகாண சபை இயங்குமெனில் அதுவும் இந்த வரிசையில் நிச்சயம் சேரும் என்பதில் சந்தேகம் என்ன?

அதிகாரப் பகிர்வுக்கு எதிரும் புதிருமான இத்தகைய ஏற்பாடுகள், இனப்பிரச்சினைக்கான அர்த்த புஷ்டியான தீர்வு ஒன்றை எவரும் எதிர்பார்க்க முடியாது என்று முரசறைகின்றன.

கொடுத்த 'பிச்சையை' தட்டிப் பறிக்கும் இந்தச் செயல், அதிகாரப் பகிர்வு என்ற நிர்வாக - ஆட்சிக்கோட்பாட்டை - செல்லுபடியற்றதாக்கும் முயற்சி.

இத்தகைய ஒரு பின்புலத்தில் சமஷ்டி, சுயநிர்ணயம் என்ற அரசியல் கோட்பாடுகளை தூரவைத்து நுகர்ந்து பார்க்கவும் இலங்கை அரசு விரும்பாது என்பது உணர்த்தப்படுகிறது.

மறுபுறத்தில் அனைத்துக் கட்சி மாநாட்டின் மூலம் தமிழர் பிரச்சினைக்கு உகந்த தீர்வு ஒன்று வைக்கப்படும் என்று எதிர்பார்ப்பது எங்ஙனம்?

# உண்ணாவிரதத்தைக் கைவிட்டார் ஈழவேந்தன்

கொழும்பு, ஏப்.19

தென்னாபிரிக்கா அரசாங்கம் வழங்கிய உறுதிமொழியைத் தொடர்ந்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஈழவேந்தனின் உண்ணாநோன்புப் போராட்டம் முடிவுக்குக் கொண்டு வரப்பட்டுள்ளது.

* இலங்கை அரசு உடனடி, நிரந்தர போர் நிறுத்தம் செய்ய வேண்டும்.
* தமிழ் மக்களுக்கான மனிதாபிமான உதவிகள் சென்றடைய வேண்டும்.
* மக்கள் தடுத்து வைக்கப்பட்டுள்ள முகாம்களுக்குச் செல்ல மனிதநேய அமைப்புகளுக்கு கட்டுப்பாடற்ற அனுமதி வழங்க வேண்டும்.
* தமிழ் மக்களின் தன்னாட்சி உரிமைக்கான அரசியல் தீர்வை ஏற்படுத்தும் பேச்சுக்களை விடுதலைப்புலிகளுடன் ஆரம்பிக்க வேண்டும்.

போன்ற நான்கு கோரிக்கைகளை முன்வைத்து கடந்த 9ஆம் திகதி முதல் உண்ணாநிலைப் போராட்டம் மேற்கொண்ட ஈழவேந்தன் நேற்று முன்தினம் தனது போராட்டத்தை முடிவுக்குக் கொண்டுவந்தார்.

தென்னாபிரிக்க தொலைத்தொடர்புத் துணையமைச்சர் ஆர்.எல். படையாட்சி, ஆளும் ஆபிரிக்க தேசிய காங்கிரசின் நாடாளுமன்ற உறுப்பினர் சிசா என்ஜிகிலானா ஆகியோர் உண்ணாநிலைப் போராட்டம் நடைபெற்ற இடத்திற்கு நேரடியாகச் சென்று ஈழவேந்தனுக்கு உறுதிமொழி வழங்கினர்.

தென்னாபிரிக்க அரசும், மக்களும் ஈழவேந்தனின் கோரிக்கைகள் தொடர்பாக இலங்கை அரசுக்கு அழுத்தம் கொடுத்து, அவற்றை நிறைவேற்ற நடவடிக்கை எடுப்பார்கள் என வழங்கப்பட்ட உறுதிமொழியைத் தொடர்ந்தே தனது போராட்டத்தை கைவிட தான் முன் வந்திருப்பதாக ஈழவேந்தன் கூறினார். (50)

## ''கிறீன் ஓஷன்'' கப்பல் மூலம் 450 நோயாளர்கள் புல்மோட்டைக்கு

கொழும்பு, ஏப். 18

போர்ப் பிரதேச புதுமாத்தளன் வைத்திய சாலையில் இருந்து காயமடைந்தவர்கள் உட்பட்ட நோயாளர்களை அரச கட்டுப்பாட்டிலுள்ள வைத்தியசாலைகளுக்கு செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் மனிதாபிமான சேவையின் மூலம் கொண்டு செல்லுகின்ற நடவடிக்கையில் மேலும் 450 பேர் நேற்று புல்மோட்டை வைத்தியசாலைக்கு ''கிறீன் ஓஷன்'' கப்பல் மூலமாகக் கொண்டு செல்லப் பட்டுள்ளனர் என முல்லைத்தீவு மாவட்ட சுகாதாரத் திணைக்கள அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

திருகோணமலையில் இருந்து புதுமாத்தளனுக்கு வெள்ளி காலை சென்றடைந்த ''கிறீன் ஓஷன்'' கப்பல் மூலமாகவே இந்த நோயாளர்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர்.

செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் தகவலின்படி, இதுவரையில் 7,500க்கும் மேற்பட்ட நோயாளர்கள் புதுமாத்தளன் வைத்தியசாலையில் இருந்து திருகோணமலை மாவட்ட வைத்தியசாலைகளுக்குக் கொண்டு செல்லப்பட்டுள்ளனர். இவர்களில் 40 வீதத்திற்கும் அதிகமானவர்கள் காயங்களுக்கு உள்ளாகியவர்கள் என அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (அ-சி)

## உள்ளூராட்சி சபை திருத்தச் சட்ட யோசனை கிழக்கு மாகாணசபையில் ஒத்திவைப்பு

கொழும்பு, ஏப். 19

உள்ளூராட்சி சபைகள் விசேட திருத்தச் சட்டம் தொடர்பான யோசனை கிழக்கு மாகாண சபையின் அங்கீகாரத்திற்காக நேற்றுமுன்தினம் முன்வைக்கப் பட்டபோது, எவ்வித தீர்மானமும் இன்றி நாளை திங்கட்கிழமை வரை சபை ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

மத்திய அரசால் கொண்டுவரப்பட்ட உத்தேச திருத்தச் சட்டம் எதிர்வரும் செவ்வாய்க்கிழமை நாடாளுமன்றத்தில் முன்வைக்கப்பட விருக்கும் நிலையில் அதற்கு முன்னதாக சகல மாகாண சபைகளினதும் அங்கீகாரம் பெற வேண்டும். இல்லையேல் நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை தேவை என ஏற்கனவே உயர் நீதிமன்றம் தீர்ப்பளித் திருந்தது.

நேற்று முன்தினம் கிழக்கு மாகாண சபை முதல்வர் ஏ.எச்.எம். பாயிஸ் கிழக்கு மாகாண சபையின் அங்கீகாரத்திற் காக இதனை முன்வைத்த போது உறுப் பினர்களிடையே இந்த திருத்தச் சட்டம் தொடர்பாக காரசாரமான வாக்கு வாதங்களும் விவாதங்களும் சுமார் 6 மணித்தியாலங்களுக்கு மேலாக நடைபெற்றன.

எதிர்க்கட்சி உறுப்பினர்கள் இந்தச் சட்டத்தை முற்றாக நிராகரிக்க வேண்டும் என்ற கருத்தை வலியுறுத்தி உரையாற்றினர்.

ஆளும் கட்சியைப் பொறுத்தவரை ஒரு தரப்பு இசுற்கு ஆதரவாகவும் இன்னுமொரு தரப்பு இதற்கு எதிராகவும் கருத்துக்களை முன்வைத்தனர்.

குறிப்பாக உத்தேச திருத்தச் சட்டம் மாகாண சபைகளுக்குரிய அதிகாரங்களை பறிக்கின்றது என்றும் - அதே போல சிறுபான்மை மக்களுக்கும் சிறிய கட்சிகளுக்கும் பாதிப்பாக அமையும் என்றும் இதற்கு எதிரான தரப்புகள் தமது கருத்துக்களை முன்வைத்தன.

விவாதம் காரசாரமாக நடைபெற்றுக் கொண்டிருந்த நேரத்தில் நாளை திங்கட்கிழமை வரை சபை ஒத்தி வைக்கப்படுவதாக அறிவிக்கப்பட்டது.

## நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ள மக்களின் பிரச்சினைகள் குறித்து ஆனந்தசங்கரி ஆராய்வார்

யாழ்ப்பாணம், ஏப்.19

யாழ்ப்பாணத்துக்கு விஜயம் மேற்கொண்டுள்ள தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர் வீ.ஆனந்தசங்கரி குடாநாட்டில் உள்ள நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ள மக்களின் பிரச்சினைகள் தொடர்பாக கலந்துரையாடவுள்ளார்.

யாழ்.ஸ்ரான்லி வீதியில் அமைந்துள்ள கட்சிப் பணிமனையில் இந்தக் கலந்துரையாடல் நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த 17 ஆம் திகதி யாழ்.வந்த வீ.ஆனந்தசங்கரி எதிர்வரும் 23 ஆம் திகதி வரை யாழ்ப்பாணத்தில் தங்கியிருப்பார்.

இம்மாத முற்பகுதியில் மன்னார், வவுனியா மாவட்டங்களுக்கு விஜயம் செய்த தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர் வீ.ஆனந்தசங்கரி அங்குள்ள நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ள மக்களையும், காயமடைந்து வைத்திய சாலைகளில் சிகிச்சை பெறுபவர்களையும் நேரடியாகச் சந்தித்துக் குறைகளைக் கேட்டறிந்தார் என தமிழர் விடுதலைக் கூட்டணி விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (50)

## காரைநகரில் மாதாந்தம் கல்வி அபிவிருத்திப் போட்டிகள்

யாழ்ப்பாணம்,ஏப்.19

முன்பள்ளி மாணவர்களுக்கான மாதாந்த கல்வி ஊக்குவிப்புப் போட்டித் தொடக்க விழா இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல்2.30 மணிக்கு காரைநகர் சுப்பிரமணியம் வீதியில் அமைந்துள்ள காரை 'கிட்ஸ் பார்க்' முன்பள்ளியில் இடம்பெறவுள்ளது.

காரை 'கிட்ஸ் பார்க்' அமைப்பின தலைவர் க.நேர்த்திரானந்தன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக வியாவில் ஐயனார் ஆலய பரிபாலகரும் தொழிலதிபருமான மகாராணி க.சோமசேகரமும் சிறப்பு விருந்தினராக ஓய்வுபெற்ற ஆரம்பக்கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் அ.கமலாகரனும் கலந்துகொள்ள உள்ளனர்.

மாதாந்தக் கல்வி ஊக்குவிப்பு போட்டி வரிசையில் இம் மாதம் ஆத்தி சூடிப் போட்டியும் மே மாதம் திருக்குறள் போட்டியும் ஜூன் மாதம் கொன்றை வேந்தன் போட்டியும் ஜூலை மாதம் அபிநயப் பாடல் போட்டியும் ஒகஸ்ட் மாதம் ஆங்கிலப் பாடல் போட்டியும் செப்ரெம்பர் மாதம் கதை கூறல் போட்டியும் ஒக்ரோபர் மாதம் தேவாரப் போட்டியும் நவம்பர் மாதம் எண்ணும் எண்ணிக்கைப் போட்டியும் டிசெம்பர் மாதம் ஆங்கிலப் பேச்சுப் போட்டியும் இடம்பெற உள்ளன. (205)

## நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ளவர்களுக்கு மருத்துவ, சுகாதார வசதிகள் வழங்கப்படுகின்றன

நல்லூர்,ஏப்.19

வன்னியில் இருந்து வந்து நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ளவர்களுக்கு தேவையான மருந்து வகைகளை மனிதநேய அமைப்புக்களின் கூட்டமைப்பு வழங்கவுள்ளது.

சுகாதாரத் திணைக்களத்தின் அனுசரணையுடன் இந்த உதவி வழங்கப்படவிருப்பதாக அந்த அமைப்பின் பிரதிநிதி ஒருவர் தெரிவித்தார்.

நலன்புரி நிலையங்களில் உள்ள மக்களுக்குத் தேவையான மருந்துகளுடன் நிலையங்களில் வைத்திய பரிசோதனைகளை மேற்கொள்ளக் கூடிய வசதியாக தேவையான தளபாட உபகரணங்களையும் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் -

வன்னியிலிருந்து வந்து நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ள மக்களுக்கு சுகாதாரத் தேவைகளுக்காக பயன்படுத்தப்படும் சவர்க்காரம் உட்பட இதர பொருள்களும் குழந்தைகளுக்கும் ஆண், பெண் இரு பாலாருக்குமான ஆடை வகைகளையும் கூட்டமைப்பு வழங்கியுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். (1-111)

## நாளை

| | |
|---|---|
| சித்திரை 07 | 20.04.2009 |
| | திங்கட்கிழமை |
| திதி: | தசமி |
| | மு.ப. 10.14 வரை |
| நட்சத்திரம்: | அவிட்டம் |
| | மு.ப. 10.53 வரை |
| சுபநேரம்: | 12.02 - 01.32 |
| ராகுகாலம்: | 07.32 - 09.02 |

## உள்ளூராட்சி அலுவலர் செயலமர்வு நாளை முதல்

யாழ்ப்பாணம்,ஏப்.19

யாழ். மாவட்ட உள்ளூராட்சித் திணைக்களங்களில் பணிபுரியும் அட்டவணைப் படுத்தப்படாத பதவியில் உள்ள உத்தியோகத்தர்களுக்கான அலுவலக ஒழுங்கு தொடர்பான பயிற்சிநெறி யாழ். நாவலர் வீதியில் உள்ள நாவலர் கலாசார மண்டபத்தில் நாளை திங்கட்கிழமை தொடக்கம் வெள்ளி வரை நடைபெறவுள்ளது.

இப்பயிற்சி நெறி காலை 9 மணி தொடக்கம் பிற்பகல் 4 மணிவரை நடைபெறவுள்ளதாக தெரிவிக் கப்பட்டுள்ளது.

இப்பயிற்சியில் கலந்து கொள்ள வசதியாக ஒவ்வொரு அலுவலகங்களிடமிருந்து பணியாளர்களுக்கு திணைக்கள அதிகாரிகளால் ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (1-131)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாநகர சபை, யாழ்ப்பாணம்.



# நலன்புரி நிலையங்களில் உள்ள தமது பணியாளரை நடமாட அனுமதிக்குமாறு கேட்கிறது ஐ.நா.

வவுனியா, ஏப்.19

வவுனியாவில் உள்ள நலன்புரி நிலையங்களில் உள்ள ஐ.நா. பணியாளர்களை நடமாட அனுமதிக்குமாறு ஐ.நா. கடிதம் ஒன்றின் மூலம் இலங்கை அரசைக் கோரியுள்ளது.

இது தொடர்பாக மீள் குடியமர்வு, புனர்வாழ்வு அமைச்சர் ரிச்சர்ட் பதியூதீன் கூறுகையில் -

ஐ.நா.வின் சிறிலங்காவுக்கான பிரதிநிதியும் மனிதாபிமான நடவடிக்கைகளின் இணைப்பாளருமான நீல் பூனேயிடம் இருந்து எமக்கு கடந்த புதன்கிழமை கடிதம் கிடைத்திருக்கின்றது.

முகாம்களில் தங்கியுள்ள மக்களை சுதந்திரமாக நடமாட அனுமதிக்குமாறு அதில் கேட்கப்பட்டுள்ளது. இது தொடர்பாக படை அதிகாரிகளுடன் அமைச்சின் அதிகாரிகள் பேச்சுக்களை மேற்கொண்டு வருகின்றனர் - என்றார்.

இதனிடையே முகாம்களில் உள்ள ஐ.நா.வின் பணியாளர்களை நடமாட அனுமதிக்குமாறு ஐ.நா. சிறிலங்கா அரசை பல தடவைகள் ஐ.நா. கோரி வந்ததாக ஐ.நா.வின் பேச்சாளர் பார்ஹான் ஹக் நியூயோர்க்கில் தெரிவித்திருந்தார்.

ஆனால் தமக்கு அதிகாரபூர்வமான கடிதம் எதுவும் அனுப்பப்படவில்லை என அமைச்சர் ரிசாட் பதியூதீன் அப்போது தெரிவித்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

வவுனியாவில் உள்ள தடுப்பு முகாம்களில் ஐ.நாவின் 11 பணியாளர்கள் அவர்களின் குடும்பங்களுடன் தங்கியிருப்பதனை ஐ.நா. அதிகாரிகள் உறுதிப்படுத்தியுள்ளனர். (அ-1)

## பிரபாகரனுக்கு முடிவு......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இணையத்தளத்துக்கு நேற்று வழங்கிய பேட்டியிலேயே ஜனாதிபதி மேற்கண்டவாறு கூறினார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்தப் பேட்டியில் ஜனாதிபதி மேலும் கூறியதாவது:-

அரசாங்கம் வழங்கிய 48 மணி நேர தாக்குதல் இடைநிறுத்த காலத்தை பிரபாகரன் தக்கவாறு பயன்படுத்தவில்லை. தமிழ்ப் பொதுமக்களைப் தனது 'மனிதக் கேடயங்களாகப்' பயன்படுத்தினார்.

விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனுக்கும் எஞ்சியுள்ள அவரது சகாக்களுக்கும் இராணுவத்திடம் சரண் அடைவதற்கு 48மணி நேர அவகாசம் வழங்கியிருந்தேன். அத்தோடு, 17 சதுர கிலோ மீற்றர் நிலப்பரப்பில் பணயக் கைதிகளாக வைத்திருக்கும் பொதுமக்களை விடுக்குமாறும் அவரிடம் கேட்டிருந்தேன்.

அவர் அரசாங்கப் படைகளிடம் சரண் அடையவுமில்லை; தான் பணயக் கைதிகளாகத் தடுத்து வைத்திருந்த பொதுமக்களை அரசாங்கக் கட்டுப்பாட்டுப் பகுதிகளுக்கு வருவதற்கு அனுமதிக்கவும் இல்லை.

அதனால் அவரை இராணுவ ரீதியாக கையாள வேண்டிய நிலை மட்டுமே எமக்கு எஞ்சியுள்ளது.

இன்றைய நிலையில் கடந்த மூன்று தசாப்தங்களாக நாட்டைநாசத்தின் விளிம்புக்குக் கொண்டு வந்திருந்த விடுதலைப் புலிகள் சைனட்டை விழுங்கி தற்கொலை செய்வதா அல்லது முல்லைத்தீவு நீரேரிக்குள் பாய்ந்து தற்கொலை செய்வதா என்பதனை முடிவு செய்ய வேண்டிய தருணம் இது - என்றார். (அ)

## நல்லூர் பகுதியில் நேற்றுத் தேடுதல்

நல்லூர் தென் கிழக்குப் பிரதேசம் நேற்று சனிக்கிழமை படையின ரால் சுற்றிவளைக்கப்பட்டு தேடுதல் நடத்தப்பட்டது.

கச்சேரி நல்லூர் வீதியில் இரு மருங்குகளில் உள்ள பகுதிகளையும் நேற்று அதிகாலை 5 மணியளவில் சுற்றிவளைத்த படையினர் வீடு வீடாக சோதனைகளை முடுக்கிவிட்டிருந்தனர்.

உள்ளே இருந்து எவரையும் வெளியே செல்ல அனுமதிக்க வில்லை; வெளி யில் இருந்து அப் பகுதிக்குச் செல்வ தற்கு அனுமதிக்கப்பட்டது. இதனால் அப் பகுதி வாழ் மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது. (1-160)

## உடனடியாகப்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மேற்கொள்ளும்படி அவர் இலங்கையைக் கேட்டுக்கொண்டார்.

இலங்கை அரசாங்கம் தாக்குதல் நிறுத்தத்தை நீடிக்க வேண்டும். பொதுமக்கள் மேற்கொண்டும் பாதிக்கப்படாமல் இருக்கவும் அவர்கள் பத்திரமாக வெளியேறவும் இது அவசியம் என்றும் முகர்ஜி வலியுறுத்தியிருந்தார்.

இலங்கையில்தொடர்ச்சியாக தீவிரப் படுத்தப்பட்டுள்ள இராணுவ நடவடிக்கையினால் இந்தத் தருணத்தில் பொதுமக்களுக்கு பேரழிவை ஏற்படுத்துவதை அறவே ஏற்றுக்கொள்ள முடியாது.

தொடரும் மோதல்களால் தமிழ் மக்களுக்கு பாரிய இழப்புக்கள் ஏற்பட்டுள்ளன. இலங்கை அரசினால் அறிவிக்கப்பட்ட இரண்டு நாள் யுத்த நிறுத்தம் மக்கள் பாதுகாப்பு வலயத்திலிருந்து வெளியேறுவதற்கு போதிய கால எல்லை அல்ல.

விடுதலைப் புலிகள் பொதுமக்களை விடுவிக்க வேண்டிய அதேநேரத்தில் பாதுகாப்பு வலயத்தில் உள்ள மக்களின் மனிதாபிமானத் துன்பியல் குறித்து இலங்கை அரசு மறந்துவிட முடியாது- என்றும் அமைச்சர் பிரணாப் கொல்கத்தாவில் வைத்து தெரிவித்திருந்தார்.

## பாதுகாப்பு......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

காயமடைந்தவர்கள் மற்றும் நோயாளர்கள் என சுமார் 400 பேரை இன்னமும் புல்மோட்டைக்கு அனுப்ப உள்ளோம் என்றார். (அ-1-07)

## தாக்குதல் இடை.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பல்லாயிரக்கணக்கான மக்கள் அங்கிருந்து பாதுகாப்பான பகுதிகளுக்கு நகர்வதற்கு உதவும் வகையில் இந்த போர் நிறுத்தத்தை ஐ.நா.வின் செயலாளர் நாயகத்தின் பிரதிநிதியாக இங்கு விஜயம் செய்த விஜய் நம்பியார் கேட்டிருந்தார்.

ஆனால், விடுதலைப்புலிகள் மக்களை அங்கிருந்து வெளியேற விடாமல் தடுப்பதாக அரசாங்கம் கூறுகின்றது.

கடந்த திங்கள் மற்றும் செவ்வாய் கிழமைகளில் நடந்த தாக்குதல் இடைநிறுத்தம் பலனளிக்காததால், தாம் தமது தாக்குதல் நடவடிக்கைகளை தொடரப் போவதாக, இலங்கை பாதுகாப்பு அமைச்சின் செயலர் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ பிபிசிக்கு தெரிவித்துள்ளார்.

அரசாங்கம் தானாகவே ஒரு தலைப்பட்சமாக அறிவித்த அந்த தாக்குதல் இடைநிறுத்தத்தின் போது, விடுதலைப் புலிகளிடம் எஞ்சியுள்ள முல்லைத்தீவு கடற்கரையோரப் பகுதிகளில் இருந்து சில நூறு பொதுமக்கள் மாத்திரமே வெளியேறினார்கள்.

சுமார் ஒரு லட்சம் மக்கள் அங்கு இன்னமும் அகப்பட்டிருக்கிறார்கள்.

பாதுகாப்பு வலயமாக அறிவிக்கப்பட்ட பகுதியை நோக்கி இராணுவத்தினர் தற்போது முன்னேறி வருவதாக இராணுவம் கூறுகிறது.

ஆனால், அங்கு விடுதலைப்புலிகளால் பணயமாக வைக்கப்பட்டிருப்பதாக அரசாங்கத்தால் கூறப்படும் மக்களை அங்கிருந்து காப்பாற்றவே இராணுவம் அங்கு செல்வதாகவும், ஆகவே பாரிய அளவிலான தாக்குதல்களை இராணுவம் மேற்கொள்ளாது என்றும் கோத்தபாய மேலும் தெரிவித்துள்ளார். (அ)


நியூட்டன் அக்கடமி கோண்டாவில்
O/L DAY CLASS
ஆரம்பம்:- 20.04.2009
Mon 8.00am
* கணிதம், விஞ்ஞானம் ஆகிய பாடங்கள் வாரத்தில் 10மணித்தியாலம் கற்பிக்கப்படும்.
* 100% சித்திக்கு உத்தரவாதம்.
* வாராந்தம் பரீட்சை நடைபெறும்.
அனுமதிக்கு முந்துங்கள்.

ஐடியல் அக்கடமி
சீரணிச் சந்தி, சண்டிலிப்பாய். | இடைப்பிட்டி, காரைநகர். | நீராவியடி, யாழ்.நகர். | அந்தோனியார் கோயில் அருகாமை, மானிப்பாய்.
A/L 2011
எமது கல்வி நிறுவனங்களின் அனைத்து வகுப்புகளுக்குமான நாள் வகுப்புகள், O/L Day Class மற்றும் A/L 2011 கலை, வர்த்தக பிரிவுகள் பின்வரும் நேரங்களில் 20.04.2009 இல் ஆரம்பமாகின்றன.
யாழ்ப்பாணம் 9 am சண்டிலிப்பாய் 11am
மானிப்பாய் 2 pm காரைநகர் 4 pm
O/L Day Class

33ஆவது சேவையில் (இரு இடங்களிலும்)
O/L Day Class (8.30-2.00)
பிரிவு II ஆரம்பம் 20.04.2009 8.30 மணி
பிரிவு III மிக விரைவில்
பிரிவுVI மட்டுமே.
விடுதி வசதி செய்து கொடுக்கப்படும்.
விக்னா கல்வி நிறுவனம்
52, ஸ்ரான்லி வீதி, யாழ்.
கிளை: இல.417, கே.கே.எஸ். றோட். (யாழ். இந்துக் கல்லூரி அருகில்)

இணையத்தள வடிவமைப்பில் சர்வதேச அங்கத்துவம்(CIW) CIW
XHTML, CSS, JavaScript , PHP, MySQL, XML (RSS,Maps)
Dreamweaver, Photoshop, Flash, Server(Apache and IIS)
Domain Registration,Hosting,Control panel,SearchEngine optimize,Google™ (WebMaster tools, AdSense, Adwords)
E-mail marketing, Affiliate marketing, Merchant tools.
Extra: Introduction ASP, JSP New Batch :22.04.2009 12.00 PM
MCS விபரங்களுக்கு நேரில் 324, பலாலி வீதி, யாழ்ப்பாணம்
Supported By UNDP/JRRP பரமேஸ்வரா சந்தி அருகில், Bus Root - 764

BITSMANS
கல்வி நிறுவனம் மானிப்பாய்
பிரிவு 2 O/L DAY CLASS
எமது வழமையான ஆசிரியர் குழு.
ஆரம்பம்:- 20.04.2009 திங்கட்கிழமை 8.00am.

யாழ்ப்பாணக் கல்வி நிலையம்
The Jaffna Education Center
நாதன்ஸ் சினிமா முன்பாக (மேல்மாடியில்)
Spoken English with grammer, சிங்களம், Short hand typing ஆகிய பாடங்கள் இரு மொழிகள் மூலமும் கற்பிக்கப்படுகின்றன.
புதிய பிரிவு ஆரம்பம் இன்று :- 19.04.2009
வெளிநாடு செல்பவர்களுக்கு ஆங்கிலம் எழுத, வாசிக்க, பேச இலகுவான முறையில் கற்றுக் கொடுக்கப்படும்.
பாட முடிவில் சான்றிதழ் வழங்கப்படும்.
நிர்வாகி:- இ.லோகநாயகி.

விற்பனைக்கு
பாவித்த நல்ல நிலையில் உள்ள PIV computerகள் விற்பனைக்கு உண்டு.
தொடர்புகளுக்கு:-
தொ.பே: 0779184529

புத்தாண்டை முன்னிட்டு! அதிரடி சலுகையுடன் அட்சயா
★பேசியல் ★கெயாஸ்டைல் ★ மேக்கப் ★ ஐசிங் மேற்படி பயிற்சி நெறியைப் பயில்பவர்களுக்கு.
★சாறிவேக் ★ சாறி பிளவுஸ் கட்டிங் முற்றிலும் இலவசம்! இச் சலுகை 10பேருக்கு மட்டுமே. உடன் பதிவுகளை மேற்கொள்ளவும்.
றிச் கேக் ஒன்று - 25/=
ஐசிங் கேக் ஒன்று - 35/=
அட்சயா 461,நாவலர் றோட், அத்தியடிச் சந்தி, யாழ்ப்பாணம்.

e.com Computer Learning Center
கணினிக் கற்கைநெறிகள்
பதிவுகளை 25.04.2009 முன் மேற்கொள்ளவும்
ICT, GIT for O/L, A/L Students
Diplom in Microsoft Office 2007
Diploma in Computer Networking
Diploma in PC Technician
Diploma in Linux Administration
Diploma in Graphics & Video Editing
Diploma in Visual Programming
Computer Training for Kids (Yr3 - Yr7)
மேலதிக விபரங்களுக்கு: No.95A Temple Road, Nallur, Jaffna. No.95 Thavady South, Kokuvil, Jaffna. T.P : 0778449378 0776544709 www.e-comonline.net E-Mail: e.com@esrilanka.lk

யாழ். நகரில் No.1, கல்வி நிறுவனம்
எடிசன் அக்கடமி
*யாழ்ப்பாணம், *வட்டுக்கோட்டை, *சண்டிலிப்பாய் ஆகிய மூன்று இடங்களிலும்.
O/L DAY CLASS
காலை 8.00 மணி முதல் பிற்பகல் 1 மணிவரை.
ஆரம்பம்:- 20.04.2009

LAVA HOSPITAL
75, கோயில் வீதி, யாழ்ப்பாணம்
[ICRC சந்தி அருகாமையில்]
✸ நவீன ஸ்கான் (Scan), ECG மற்றும் இரத்த, சல பரிசோதனைகள் மேற்கொள்ளப்படும்.
அடிப்படை உடற் பரிசோதனைகள்
✸ உடல் பருமனைக் குறைப்பதற்கான சிகிச்சைகள்.
Branches
151, Kannathiddy Road. T.P.: 021 222 7251
71, Sivapiragasam Road Vannarponnai, Jaffna
web: www.lavaonline.net E.mail: lavasss@yahoo

நீங்களும் Engineer
* செயன்முறையுடன் கூடிய விரைவான வகுப்புக்கள்.
* Microsoft நிறுவன அதிபர் Bill Gatesஇன் கையொப்பத்துடன் கூடிய சர்வதேச தர சான்றிதழ்
* Network Manager, System Admin., System Engineer போன்ற வருமானம் கூடிய வேலைவாய்ப்பு
* வெளிநாட்டு விசாவிற்கான மேலதிக புள்ளிகள்.
* USA,UK, பெங்களூர் பல்கலைக்கழகங்களில்BSc,MSc
* Student Visa, Work Permit _Carrier guidance
புதிய பிரிவு ஆரம்பம் 22.04.2009 07.30AM
கொழும்புப்பல்கலைக்கழகத்தின் சிறப்பு விருது பெற்ற நிறுவனம்
விபரங்கள் நேரில் 324, பலாலி வீதி, யாழ்ப்பாணம் MCS Supported By UNDP/JRRP

வாடிக்கையாளர்களின் வேண்டுகோளுக்கு இணங்க!
உலகநாடு → கொழும்பு → யாழ்ப்பாணத்திற்கான துரித தபால்கள் பொதிகள் சேவை ஆரம்பிக்கப்பட்டுள்ளன.
யாழ்மாவட்டத்தில் அங்கீகரிக்கப்பட்ட முகவர்
திருமுருகன் கொம் நெற்
269, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம். T.P- 2227635
46, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி.
உள்நாடு,வெளிநாடுகளுக்கு கடிதங்கள், அன்பளிப்புப் பொருள்கள், உணவுப் பொருள்கள், உடுபுடவைகள் மற்றும் VDO பிரதிகள், CDக்கள் என்பன ஏற்றுக்கொள்ளப்படும்.
வாடிக்கையாளரின் நலன்கருதி லண்டன்,சுவிஸ்,பிரான்ஸ் நாடுகளுக்கு 3 கிலோவுக்கு குறையாத 1Kg பொதிகளிற்கு 750/= ரூபா வீதமும் கனடாவுக்கான 3 கிலோவுக்கு குறையாத 1Kgபொதிகளிற்கு 850/= ரூபா வரையான விசேட சலுகை.
WESTERN UNION ®
உலகின் எந்தப் பாகத்திலிருந்தும் சில மணிநேரங்களில் மிக விரைவாகப் பணத்தைப்பெற்றுக்கொள்ளலாம்
MMBL Money Master
New Branch TCN EXPRESS
2B, Nelsan Place, Colombo -06 - T.P: 0112364525
ஞாயிறு விடுமுறை தினங்களிலும் சேவைகளை பெற்றுக்கொள்ளலாம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 19.04.2009 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.